Y15m2,N24
N25.1.9
190370

MADRAS


# சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் I.] குரோதன—சித்திரை [இதழ் ௭.


ஸ்ரீ வேங்கடாசலபதயெ நமஃ.—

## ஸ்ரீ வேங்கடாசலபதி கீர்த்தனை.

(சகோதரி வி. பாலம்மாள்.)

இராகம் :—தன்யாசி. தாளம் :—ஆதி.

பல்லவி.

வேங்கடரமண சங்கடஹரண பாஹிதயாபரண

அநுபல்லவி.

பாலய மாமிஹ பாலிதபுதகண பதநத ஜனஸம்ரக்ஷண நிபுண (வேங்கட)

சரணங்கள்.

வேதாந்தாகம சஞ்சயவினுத வேதவேத்ய சரித
ஸநகஸநந்தன முனிவரவினுத ஸகல லோகபரிபாலன நிரத (வேங்கட)

விலஸித வக்ஷஸ்தலத்ருத வரகௌஸ்துபஹார
லோகேச்வர நிர்மலாகார வேங்கடகிரிவர மத்யவிஹார (வேங்கட)

415 2,824
25.1.?
190370

# ஸ்ரீ ராதா கிருஷ்ண லீலைக் கும்மி.

(மாதுஸ்ரீ வி. கெ. ராஜம்மாள்.)

(373-ம் பக்கத் தொடர்ச்சி)

கோவிந்தமூர்த்தியே வாருமைய்யா எங்கள்
கோகுல நாதனே வாருமய்யா
கோபிகாலோலனே வாருமைய்யா வென்று
கும்பிட்டுத் தோழி யடி பணிந்தாள். (33)

நந்தர் யசோதைத் தவபாலன் தன்னை
நம்பின பேருக் கனுகூலன்
அண்ட மளந்த திருப்பாதன் ராதை
சொந்த க்ருஹந்தன்னை வந்தடைந்தார். (34)

அத்திவரதனை அன்போடு மிக்க
பக்தியால் சித்தத்திலே நிறுத்தி
மெத்தத் துதித்திடும் உத்தமி ராதையும்
நித்தியானர் ... ந்தாள். (35)

...தரைக் கண...
...டுப் பிரிந்து என்
இத்தனைப் போதென்னை விட
சித்தந் தவித்திடச் செய்தவரை ...
சற்றுப் பரிகாசமாய்க் கோபிப்போ ...
சிற்றுள்ளே சென்று கதவடைத்தாள். (36)

உத்த தோழியும் வந்தடைந்து அந்த
சிற்றிடை ராதையைத் தானழைத்து
பத்தவதாரரின் கீர்த்தியைப் பாடியே
முத்து கோபாலன் வருகை சொன்னாள். (37)

மெத்த ப்ரளயத்தில் சத்திய வேதமும்
சப்த ரிஷிகளும் மாளாமல்
ஸத்ய வ்ரதராஜர் ஹஸ்தத்திலே வந்த
மத்ஸ்ய மூர்த்தி வந்தார் ராதிகையே. (38)

மெத்தப் பெரிய ஜலதியிலே ஜலம்
வற்றி வரண்டிட வில்லை யிப்போ
சோமுகனைக் கொன்ற மீனவதாரனை
சென்றிருக்கச் சொல்லுவாய் ஸகியே. (39)

மந்தரகிரியைத் தான் சுமந்து அதி
விந்தையாய் தேவர்க் கமுதளிக்க
சுந்தர மோகினியாய் வந்த கூர்மாவ
தாரர் வந்தாரடி ராதிகையே. (40)

பக்ஷபாதமா யசுரரை வஞ்சித்து
லெக்ஷ்மியைக் கொண்ட நாதருக்கு
உச்சிதப் பாற்கடல் மாமனார் வீடென்று
நிச்சயமாய்ச் சொல்லுவாய் ஸகியே. (41)

சூரன் ஹிரண்யாக்ஷனை வதைத்து இந்த
பார்மகளை மேலேதானெடுத்த
வராஹவதாரரை நேரினில் கண்டு
களித்திடுவாயடி ராதிகையே. (42)

சீரான பூமியைத் தானணைந்து நர
காசுரனைப் பெற்ற நாதனுக்கு
சேரும் ஜலமும் கலந்த விடத்திலே
சேர்ந்திருக்கச் சொல்லுவாய் ஸகியே. (43)

பாலன் ப்ரஹலாதனைக் காத்திடவே அதி
சீலன் நரஹரி ரூபத்துடன்
கோலாஹலமாகத் தூணில் உதித்திட்ட
...
...மையலான வந்தாரடி ராதிகையே. (44)

தேடிவருக்கு மாலையிட்ட திரு
மாமகளும் கண்டு அஞ்சிடுவாள்
காடும் மலையும் குகையுமுண்டு அங்கே
நாடியிருக்கச் சொல்வாய் ஸகியே (45)

மாவலி சாலையை வந்தடைந்து அங்கே
மூவடி யாசித்துலகளந்த
சோபனமான திருவடியோனிந்த
வாமனர்தானடி ராதிகையே. (46)

வாசவனா மந்த இந்திரனுக்காக
யாசகனைப் போலே வந்தவரை
மாசற்ற மாவலி வாசலைக் காத்திட
சென்றிருக்கச் சொல்லுவாய் ஸகியே. (47)

மெத்தக் கர்வத்தால் மதத்துத் திரிந்திட்ட
க்ஷத்ரியர் வம்ச நிர்மூலம் செய்த
சுத்த ஜமதக்னி புத்திரரான
பரசுராமர் வந்தார் ராதிகையே. (48)

(தொடரும்).

# பெண்கள் சுதந்திரம்.

பத்திராதிபர்.

சுதந்திரமென்பது ஆண் பெண் என்ற வித்தியாசமின்றிக் கருதப்படுவதாகு மென்று முன் சஞ்சிகையில் எழுதினேம். பெண்கள் சுதந்திரம் எத்தகையதாகுமென் பதை ஆராய்வோம். இந்தியாவில் இந்தியப் பெண்களின் வாழ்நாட்களும் மேன்மையும் கண்ணியமும் பொறுப்பும் சிந்தனையும் விவாக பந்தத்திலும் கணவன்கீழ் வாழ்க்கையிலுமே அடங்கி யிருக்கின்றனவென்பது சரித்திர ஆசிரியர்களும் மேதாவிகளும் ஒப்புக்கொண்ட விஷயங்களாகும். சாஸ்திர புராணங்களும் இதையே வற்புருத்துகின்றன. 'இல்லறமல் லது நல்லறமன்று' என்பதும் கவனிக்கத்தக்க தாம். இவ்வாறு மனித வாழ்க்கையின் உன்னத லக்ஷியங்களைக் கடைபிடித்துத் தர்மார்த்த காம மோக்ஷமென்ற புருஷார்த்தங்களை யடைவதே கிருகஸ்த லக்ஷணம்.

'க்ருஹிணீ க்ருஹ முச்யதே' என்ற படி மனைவியுடன் இல்லறம் நடத்து பவனே கிருகஸ்தன் எனப்படுவான். சஹ தர்ம சாரிணீ என்றும் அர்த்தாங்கி என்றும் கணவனுக்கு மனைவி கருதப்படுகிறாள். ஜீவ ராசிகளில் மனித ஜன்மம் துர்லபமென்று ஆன் றோர் மொழிந்திருக்கின்றனர். இவ்வாறு பல வழியிலும் சிறப்புற்றிருக்கும் மனித வாழ்க் கையில் சமத்துவமாகப் பங்கு பெற்றிருக்கும் பெண்கள் சுதந்திர மில்லாது எவ்வாறு வாழ முடியும்? எவ்வாறு அக்குடும்பம் நிலைபெறும்? ஆனால் பூர்வீகர்கள் ஸ்திரீ சுதந்திர மித்த கையதென்று அறிந்தவர்களாகையால் அவ்...

... நவீன காலத் ...வநாகரிக வாழ்க்கையில் ஆழ்ந்து கிடக்கும் ஆடவர்கள் ஸ்திரீ சுதந்திரத்தைப் பற்றி ஆக்ஷேபிக்க இடமிருக்கிறது. ஏனெனில் அவர்கள் வாழ்க்கை முழுவதும் பூர்வீகத்தையும் மதானுஷ்டானங்களையும் பெரிதும் துறந்ததாயிருக்கிறது. தாங்கள் ஏதோ உத்தியோகப் பேய்பிடித்து நாகரிக தோரணையில் வாழ்ந்து அரை வயிர் அன்னம் கிடைத்தாற் போதுமென்று அவதிப்படும் சமயத்தில் இதையனுசரித்தே பெண்கள் சுதந்திரமும் இருக்குமானல் இவ்வனர்த்தத்தை எவ்வாறு கண்டு சகிப்பது என்று தற்காலத்தியவர் அஞ்சலாம். சூடுண்ட பூனை அடுப்பங்கரை செல்லாதல்லவா? பெண்கள் சுதந்திரம் என்றால் என்னவென்பதை இனியும் தீர்மானப்படுத்தாமல் இருந்துவிடும் பக்ஷத்தில் ...ால்போற்றற்குரிய இந்திய நாகரிகம் இந்தியப் பெண்...ளை விட்டும் சிறுகச் சிறுக விலகிவிடக்கூடுமென்பதை ... சிலர் உணர வாரம்பித்திருக்கின்றனர். பெண்மக்களுக்கு முற்காலப் படிப்பு, பூர்வீக அனுஷ்டானம் இவைகளை நிலைநிறுத்துவதற்காகத் தற்காலம் நவீன வழியில் முற்படும் சுதந்திரத்தையும் ஆடவர்கள் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தங்களுடைய வாழ்நாளைச் சீரும் சிறப்புமாகவும் சந்தோஷமாகவும் மேன்மையுடனும் கல்வியறிவுடனும் கற்றோர் போற்றத்தக்கதாக நியாயமான வழியில் உண்மையுற்ற நோக்கத்துடன் பரிசுத்தத் தன்மையில் பெண்கள் நடந்து கொள்ளக்கூடிய வழிகள் பெண்கள் சுதந்திரமெனப்படும். இத்தகைய சுதந்திரத்தையே தற்காலத்திலும் இந்தியப் பெண்மணிகள் பெரும்பாலர் விரும்புகிறார்கள். முற்காலத்தில் சர்வ சாதாரணத்திலிருந்த பெண்கள் சுதந்திரம் தற்காலம் மலினமுற்றிருப்பதால் அதைச் சிறிது நவீன முறைகளைக் கைக்கொண்டு புத்துயிர் பெறச் செய்தல் அவசியமாயிருக்கிறது. அவைபற்றி அடுத்த சஞ்சிகையில் கவனிப்போம்.

# அசுவாரூட நரபதி.

ஸ்ரீமான் வெ. நாராயணன்.

கலிங்க நாட்டுக் காவலனாகிய அசுவாரூட நரபதி பல்லவ நாட்டின்மேற் படையெடுத்துச் சென்று அதை வென்று கைப்பற்றினன். வெற்றி சாமானியமானதன்று. பல்லவ நாட்டு நகர்களை எல்லாம் அழித்து அதன் குடிகளை எல்லாம் தன் நாட்டிற்கு விரட்டியது மன்றிப் போர் வீரர்களை எல்லாம் கொல்வித்தான். படைத்தலைவர்களிற் சிலரை உயிருடனுரித்தும் மற்றவரைக் கழுவிலிட்டும் அழித்தது மன்றிப் பல்லவர் கோமான் நரசிம்மவர்மனைச் சிறைப்படுத்தி ஒரு கூட்டிலடைத்து வைத்திருந்தான். அவனை மறுநாள் கொலை செய்வதெனத் தீர்மானித்தாயிற்று.

இரவில் படுக்கையில் படுத்துக்கொண்டு உறங்குமுன் நரசிம்மவர்மனை எவ்வாறு கொல்வது என யோசித்துக்கொண்டிருந்தான் அசுவன். அப்பொழுது அவனருகே உடை யசைவதுபோல் சலசலவென்று ஒலி கேட்டது. அப்பக்கம் திரும்பிப் பார்க்கவும் எதிரே நீண்டு நரைத்த தாடியும் சாந்தம் விளங்கும் கண்களும் கொண்ட கிழவனொருவன் நின்றான்.

“நரசிம்மவர்மனைக் கொல்லத் தீர்மானித்துவிட்டாயா?” எனக் கேட்டான் கிழவன்.

அசுவன்:—ஆம்; தீர்மானித்தாயிற்று. ஆனல் இதுகாறுமில்லாத எவ்விதப் புதுவழியில் அவனைக் கொலைசெய்வது என்பதுதான் இன்னும் நிச்சயமாகவில்லை.”



கிழவன்:—ஆம்; கொன்றுவிடலாம். ஆனல் நரசிம்மவர்மனும் நீயும் ஒன்றுதான்.

அசுவன்:—அதெப்படி? நான் நானே. நரசிம்மவர்மன் நரசிம்மவர்மனே.

கிழவன்:—அல்ல. நீயும் நரசிம்மவர்மனும் ஒன்றேதான். உனக்கு வெளித்தோற்றத்தில் தோன்றுவது நீயும் அவனும் வெவ்வேறென்றாலும் உண்மையில் இருவரும் ஒன்றே.

அசுவன்:—தோன்றுவது உண்மையன்றோ? வேறு எவ்விதம் இருக்கக்கூடும். இங்கு நான் மிருதுவான மெத்தையில் படுத்திருக்கிறேன். எனது ஆணைக்குட்பட்டு அதை அணுவளவும் பிசகாது நிறைவேற்றும் ஆணும் பெண்ணுமாகிய அடிமைகள் பலர் என்னைச் சூழ்ந்திருக்கின்றனர். இன்று போலவே நாளையும் பல நண்பருடன் கூடி விருந்துண்ணப் போகிறேன். நரசிம்மவர்மனே பறவையைப்போலக் கூட்டில் அடைபட்டுக் கிடக்கிறான். நாளைக் கழுவிலிடப்பட்டு உயிர்போகுமட்டும் நாவைவெளியே தொங்கவிட்டுக்கொண்டு துடிக்கப்போகிறான். அதன் பிறகு அவனது உடல் நாய்களுக்காகாரமாகப் போகிறது.

கிழவன்:—சரி; அவனது ஆவியை யழிக்க உன்னால் முடியுமா?

அசுவன்:—(புன் சிரிப்புடன்) சரிதான்; நான் கொன்று மலை மலையாகக் குவித்திருக்கும் பதினெண்காயிரம் போர்வீரர்களையும் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? நானுயிருடனிருந்து பேசுகிறேன். அவர்களைக் காணோமே? ஆகையால் என்னால் ஆவியை யழிக்க முடியுமென்றாகிற தல்லவா?

கிழவன்:—அவர்களின் ஆவிகள் அழிந்துவிட்டதென உனக்கு எவ்வாறு நிச்சயமாகத் தெரியும்?”

அசுவன்:—ஏன், அவர்களை இப்பொழுது காணவில்லையே? மேலும் அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள். நானதற்குள்ளாகவில்லை. அவர்கள் துன்பப்படும்பொழுது நான் இன்பமன்றோ அனுபவித்துக்கொண்டிருந்தேன்.

கிழவன்:—உனக்கவ்வாறுதான் தோன்றுகிறது. ஆனல் உண்மையில் நீ உன்னையே அங்கவதை செய்துகொண்டாய்.

அசுவன்:—அஃதெப்படி? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!

கிழவன்:—அறிந்துகொள்ள அவாவுண்டா? சொல்.

அசுவன்:—ஆம். தெரிந்துகொள்ள ஆத்திரப்படுகிறேன்.

கிழவன் சிறிது தூரத்திலிருந்த தண்ணீர் நிரம்பிய ஒருதொட்டியிடஞ்சென்று அரசனையுமழைத்தான். அரசனும் எழுந்து சென்றான்.

“உடைகளைக் களைந்துவிட்டு உள்ளே இறங்கு” என்று கிழவன் கூறினன். அசுவபதியும் அவ்வாறே செய்தான்.

இதன் பிறகு கிழவன் ஒரு குடத்தில் தண்ணீரை எடுத்துக்கொண்டு “நான் உன் தலையில் தண்ணீரை ஊற்றத் தொடங்கவும் நீ உள்ளே அமிழவேண்டும்” எனக் கூறிக் குடத்தைத் தூக்கினன். அசுவாரூடனும் நீரில் மூழ்கினன்.

அசுவாரூட நரபதி தண்ணீரில் மூழ்கவும் அவனுக்குத் தான் வேறொருவனாகத் தோன்றுகிறது. வேறொருவனென்ற உணர்ச்சியுடன் ஓர் மஞ்சத்தில் படுத்திருக்கிறான். அருகில் இளம்பிராயத்தினளான மாது ஒருத்தி படுத்திருக்கிறாள். அம்மாது எழுந்து சிறிது நேரத்திற்குப் பிறகு அவனை நோக்கி “என்னுயிர்த் தலைவ, நரசிம்மவர்ம! உமக்கு நேற்றிருந்த

வேலையதிகத்தால் இன்று வழக்கத்திற்கு அதிகம் தூங்கி விட்டீர். உமது தூக்கத்தைக் கலைக்கக் கூடாதெனக் காத்திருந்தேன். எழுப்பவில்லை. இப்பொழுது சிற்றரசர்கள் மண்டபத்தில் உமது வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். எழுந்து தக்க உடையுடுத்துச் சபா மண்டபத்திற்குப் போய் வாருங்கள்" எனக் கூறுகிறாள்.

இதன்பின்தான் தான் நரசிம்மவர்மனெனத் தெரிகிறது. இதனாலவனுக்காச்சர்யமுண்டாகவில்லை. இதுகாறும் தனக்கிவ்விஷயம் தெரியாது போய்விட்டதே எனத்தான் அதிசயிக்கிறான். பின்பு எழுந்து தக்கவாறு அலங்கரித்துக்கொண்டு சிற்றரசர்களிருக்குமிடத்தையடைகிறான்.

சிற்றரசரெல்லாம் நரசிம்மவர்மனை வணங்கி அவன் உத்திரவிட்டதன்மேல் தம் ஆசனங்களில் உட்காருகின்றனர்; அவர்களில் வயதிற் பெரிய மன்னனொருவன் எழுந்து மற்றவரின் பிரதிநிதியாகப் பேசுகிறான் இனி அசுவாரூட நரபதி செய்யும் கொடுமைகளையும் மானக்கேட்டையும் பொறுத்திருக்க முடியாதெனவும் அவன்மேற் படையெடுத்துச் செல்லவேண்டுமெனவும் கூறுகிறான். நரசிம்மவர்மன் அதற்கிணங்காது அசுவாரூடனுக்குத் தூதனுப்பி அவனுடன் சமாதானம் செய்துகொள்ள விரும்பி சிற்றரசர்களை யனுப்பி விடுகிறான். பின்பு தக்க உயர்ந்த மனிதரைத் தூதராக நியமித்து அசுவாரூடனிடம் கூற வேண்டியவற்றை விவரமாகக் கூறி அனுப்புகிறான். இன்னும் தான் நரசிம்மவர்மனென்ற உணர்ச்சியுடன் மலைப்பிரதேசங்களுக்கு வேட்டைக்குச் செல்கிறான். வேட்டை மிகவும் திருப்தியாக முடிகிறது. அன்று இரண்டு மான்களை வதைத்து வீடுதிரும்பி நண்பருடன் விருந்துண்டு பணிப்பெண்கள் நாட்டியமாடுவதை நோக்கிக் களித்துக்கொண்டு காலம் போக்குகிறான்.

மறுநாள் வழக்கம்போல் சபைக்குச் செல்ல அங்கு குற்றஞ் சுமத்தப்பட்டவர்களும் வழக்காடி நியாயம் தேடி வந்தவர்களும் காத்திருக்கின்றனர். அவர்களது வழக்குகளை விசாரித்துத் தீர்த்து வைத்துப் பின் தனக்கு மிகப் பிரியமான வேட்டைக்கு மீண்டும் செல்கிறான். இன்று ஓர் கிழச்சிங்கத்தைக் கொன்று அதன் இருகுட்டிகளையும் பிடித்துவரும் அதிருஷ்டம் கிட்டுகிறது. வேட்டையிலிருந்து திரும்பிய பின் வழக்கம்போல் நண்பருடன் விருந்துண்டு நாட்டியம்பார்த்து இரவைத் தன் பிரிய மனைவியுடன் கழிக்கிறான்.

இவ்வாறு ஒரு மாதகாலம் முன்பு தானாயிருந்த அசுவாரூட நரபதியிடம் அனுப்பியிருக்கும் தூதரை எதிர் பார்த்துக்கொண்டு இராஜ்ய விஷயங்களிலும் இன்ப நுகர்ச்சியிலும் தன் காலத்தைக் கழித்து வருகிறான். ஒரு மாதத்திற்குப் பின் தூதர் தம் காதுகளையும் மூக்குகளை இழந்து திரும்பி வந்து அரசனிடம் முறையிடுகின்றனர்.

அசுவாரூடன் தூதர்களிடம் அவர்களது அரசன் உடனே தான் குறித்த தங்கம், வெள்ளி, தேவதாரம், சந்தனக்கட்டை முதலியவற்றைக் காணிக்கையாகச் செலுத்தித் தன்னை வணங்காவிடில் அவனுக்கும் இதே கதிதான் அளிக்கப்படுமெனக் கூறும்படி மிக இறுமாப்புடன் சொல்லி அனுப்பி யிருக்கிறான்.

முன்பு அசுவாரூடனாயிருந்த நரசிம்மவர்மன் மீண்டும் தன் சிற்றரசர்களை யழைத்து ஆலோசனை செய்கிறான். அவர்கள் இனி தாமதிக்கக் கூடாதென்றும் அசுவாரூடன் படையெழுந்து வருமுன் தாமே போர் புரியச் செல்லவேண்டுமெனவும் சொல்லுகின்றனர். நரசிம்மவர்மனும் சம்மதித்துச் சேனையைக்



கூட்டித் தானும் அதற்குத் தலைவனாகப் புறப்படுகிறான். சேனை ஒருவாரம்முழுதும் நடந்து இராஜ்யத்தின் எல்லையை நோக்கிச் செல்கின்றது. தினந்தோறும் தனது படைவீரர்களை நேரிற்கண்டு உற்சாகப்படுத்தியும் அவர்களை வீரச்செயல்களிற் றூண்டியும் வருகிறான் நரசிம்மவர்மன். எட்டாம் நாள் இருமலைகளுக்கிடையில் ஓர் ஆற்றின் கரையில் இரு படைகளும் சந்திக்கவே போர்மூண்டுகொண்டது. நரசிம்மவர்மனது சேனை மிக வீரப்போர் புரிகின்றது. ஆனால் எதிரிகள் மலைமேலிருந்து எறும்புக் கூட்டங்களைப்போல் சாரைசாரையாய் இறங்கி வந்து அப்பள்ளத்தாக்கை நிறப்பி ஆற்றுவெள்ளம் சிறு மாத்தை யடித்துக்கொண்டு போவதுபோல் செய்யத் தொடங்கிவிட்டார்கள். நரசிம்மவர்மன் உடனே தன் குதிரைமேலேறி அடர்ந்த போரின் நடுவிற் சென்று தன் பகைவரைக் கொன்று குவிக்கிறான். என்ன செய்தும் பயன்படவில்லை. நரசிம்மனது சேனையில் ஆயிரக் கணக்காக மனிதரிருக்க அசுவாரூடனது சேனையில் பதினாயிரக் கணக்காயிருக்கின்றது. நரசிம்மவர்மன் தான் காயப்பட்டுச் சிறைப்படுவதாக வுணர்கிறான். மற்றக் கைதிகளுடன் சேர்த்து அவன் கைகளில் விலங்கிட்டு அசுவாரூடனது போர்வீரர் காத்து ஒன்பது நாட்கள் நடத்தி அழைத்துச் செல்கின்றனர். பத்தாம் நாள் ஓர் ஊருக்குக் கொண்டுவரப்பட்டு ஒரு கூட்டில் அடைபடுகிறான். அவனது காயங்களும் பசியின் கொடுமையும் தரும் துன்பங்களைக்காட்டிலும் அவனுக்கு நேர்ந்த அவமானமும் செலுத்தமுடியாத கோபமும் அதிகத் துன்ப மிழைக்கின்றன. தனக்கிடரிழைத்த விரோதிகளுக்குத் திரும்பத் தீங்கிழைக்க முடியவில்லையே என நினைத்து அவன் மனம் புழுங்குகிறது. அவன் செய்யக் கூடியதெல்லாம் ஒன்றே. தான் படுந்துன்பங்களைக் கண்டானந்திக்கும் பாக்கியம் பகைவர்க்குக் கொடுக்கக்கூடாது. தனக்கு நேருவனவற்றை எல்லாம்முகஞ்சலிக்காது ஆண்மையுடன் பொறுத்துக்கொள்வதெனத் தீர்மானித்துக் கொள்கிறான். அக்கூட்டில் சாவை எதிர் பார்த்துக்கொண்டே இருபது நாட்கள் வசிக்கிறான். அதற்குள் என்ன கொடுமைகளை எல்லாம் காண நேருகிறது! தனது நண்பரும் உறவினரும் தினந்தோறும் கொலைக் களத்திற்கழைத்துச் செல்லப்படுவதைக் காண்கிறான். அவர்கள் சாகுந்தருவாயிலிடும் கூச்சலும் முனக்கமும் கேட்கின்றன. சிலரது கால் கைகள் வெட்டப்படுகின்றன. மற்றுஞ் சிலரை உயிருட னுரிக்கிறார்கள். இவற்றை எல்லாமுணர்ந்தும் அவன் துன்பமாவது, இரக்கமாவது, பயமாவது வெளிக்காட்டவே இல்லை.

தனது அழகிய அருமை மனைவியைக் கைகளைக் கட்டிக் கரிய அலிகளிருவர் பக்கத்திற்கு ஒருவராய் நின்று நடத்திச் செல்கின்றனர். அவள் அசுவாரூடனுக்குக் குற்றேவல் புரியக் கொண்டுபோகப் படுகிறாள் எனத் தெரியும். இதைக் குறித்தும் அவன் ஒன்றும் பேசவில்லை. துக்கம் வெளிகாட்டவுமில்லை.

அவளைக் காத்து வந்தபோர் வீரர்களிலொருவன் "நரசிம்மவர்ம, உன்னைக் காண என் உள்ளம் உருகுகிறது. நீ முன்பு ஓர் அரசனாக இருந்தாய். இப்பொழுது உன் கதி என்ன?" என்கிறான்.

இதைக் கேட்கவும் நரசிம்மவர்மனுக்குத் தனது கஷ்ட நஷ்டங்கள் யாவும் மனத்தில் உதிக்கின்றன. மனமுடைந்தவனாய்க் கூட்டின் கம்பிகளி லொன்றைப் பற்றி அதில் தன் தலையை மோதிக் கொள்கிறான். ஆனால் மிகப் பலமாக மோதப் போதிய வலி உடலிலில்லை. ஆற்ற வெண்ணாத் துயரத்துடன் அக்கூட்டின் பலகையில் சாய்கிறான்.

இத்தருணம் கொலையாளர் இருவர் வந்து, கூட்டைத் திறந்து நரசிம்மவர்மனை, முன்பு அசுவாரூடனாயிருந்த நரசிம்மவர்மனை, வெளியே இழுத்துக் கைகளைப் பின்புறமாகக் கட்டிக் கொலைக்களத்திற் கழைத்துச் செல்லுகின்றனர். அங்கு இரத்தம் பெருகிக் கிடக்கிறது. கூரிய முனைக் கழு ஒன்றிலிருந்து இதற்கு முன் கொலை செய்யப்பட்ட தன் நண்பனொருவனது உடல் எடுக்கப்படுகிறது. இக்கழு தனக்குத் தயார் செய்யப்படுகிறதென உணர்கிறான். அவனுடைகளைக் களைகின்றனர். தன்னுடல் மெலிந்திருப்பதைப் பார்த்து நரசிம்மன் திகிலடைகிறான். இவ்வுடலைத் தோள்களிலும் தொடைகளிலும் இருவர் பற்றித் தூக்கிக் கழுவில் குத்தப்போகின்றனர்.

ஐயோ, இதுதான் சாவு அழிவு எனத்தெரிகிறது.

அவன் மனத்தில் கொண்டிருந்த ஆண்மை விரதமெல்லாம் போனவிடந் தெரியவில்லை. தன்னுயிரைக் காக்கும்படி அங்கிருப்பவர்களைக் கெஞ்சுகிறான். ஆனால் அவன் சொற்களை லக்ஷியஞ் செய்பவர் ஒருவருமில்லை.

மனத்தில் தோன்றும் பயம் அளவற்றதாயிருக்கிறது. "ஆஹா! இது உண்மைதானா? இல்லை. நான் கனவு காண்கிறேன். நான் அசுவாரூடன்" என நினைத்துக்கொண்டு தன் முழு மனோவலிமையையும் செலுத்தி விழித்துக் கொள்ள முயல்கிறான்.

விழித்து நோக்கவும் தான் அசுவாரூடனுமல்ல.! ஒரு மலைப்பிரதேசத்தில் ஓர் மிருகமாய் நின்று அங்கு முளைத்திருக்கும் பசும்புல்லை மேய்ந்துகொண்டிருக்கிறான்.! இளம்புல்லாதலால் மிகவும் ரசமுள்ளதாயிருக்கிறது. தன்னருகே ஓர் இளம் மான்கன்று விளையாடிக் கொண்டிருக்கிறது. இதை உணரவும் அசுவாரூடனுக்கு ஆச்சர்யமுண்டாகிறது. இது தனக்கு இதுவரையும் தெரியாது போயிற்றே என நினைக்க அவனது ஆச்சர்யம் அதிகமாகின்றது. தன் அடிவயிற்றின் புறமும் மடிவும் கனமாவதை உணர்கிறான். இதற்குள் மான்குட்டி துள்ளிக் குதித்து ஓடிவந்து தன் மூக்கால் அசுவாரூடனாயிருந்த மானின் வயிற்றில் முட்டி முலையைத் தேடிப்பிடித்துப் பாலை உறிஞ்சுகிறது. தன்னிலும் தானீன்ற குட்டியிலும் ஒருங்கே உயிர் ஒளிர்வதை நினைக்க அசுவாரூடனது மனதில் இன்பம் ஊறுகிறது.

இத்தருணம் 'விர்' என்ற ஒலியுடன் ஓர் அம்பு பறந்து வந்து மானாக இருக்கும் அசுவாரூடனது வயிற்றில் தைத்துப் பொருக்கமுடியா வலியைக் கொடுக்கிறது. இதை உணர்ந்த அசுவாரூடனாகிய மான் ஓட்டம் பிடிக்கவும் கன்றும் உடனே புறப்பட்டுவிட்டது. இருவருமாக இது காறும் விட்டுப் பிரிந்திருந்த மான் கூட்டத்தைநோக்கி ஓடுகின்றனர். அதற்குள் இன்னமோர் அம்பு வந்து குட்டியின் கழுத்தில் தைக்கவும் அது வலி பொறாது முனங்கிக் கீழே விழுந்துவிடுகிறது. குட்டியை விட்டு ஓட மனது இடந்தரவில்லை. கன்று எழுந்து நிற்க முயன்று தள்ளாடி மீண்டும் கீழே விழுகிறது. இதற்குள் ஓர் இரண்டு கால் மிருகம்—மனிதன்—விரைவாய் ஓடி வந்து கன்றின் கழுத்தை வெட்டி விடுகிறான். தாய்மானாகிய அசுவாரூடன் படும் பாட்டைச் சொல்லவும் வேண்டுமா?

"இவை உண்மையல்ல; நான் மீண்டும் கனவு காண்கிறேன்" என எண்ணி விழித்துக்கொள்ளப் பெரும் முயற்சி ஒன்று செய்கிறான். பெருங்கூச்சலிட்டுக்கொண்டு அசுவாரூடன் தொட்டியினின்றும் தலையை வெளியே நீட்டினான்.

"அப்பா, என்ன கஷ்டங்கள்! அதுவும் எவ்வளவு காலத்திற்கு அனுபவித்தேன்" என்றான்.



கிழவன் "அஃதெப்படி? நீ இப்பொழுது தானே தண்ணீரில் மூழ்கினாய். உடனே தலையை வெளியே நீட்டிவிட்டாயே. இதோ பார். குடத்திலிருக்கும் நீர் முற்றிலும் இன்னும் ஊற்றியாகவில்லையே! போகட்டும். இப்பொழுதாவது உணர்ந்துகொண்டாயா?" என்றான்.

அசுவாரூடன் பதிலொன்றுங் கூறாது கிழவனை மனப் பீதியுடன் பார்த்தான்.

கிழவன் பின்னும் "இப்பொழுது நீயும் நரசிம்மவர்மனும் ஒன்றே என்பதையும், நீ கொன்ற போர்வீரர்களெல்லாம் நீயே என்பதையும் தெரிந்துகொண்டாயா? இதுமட்டுமல்ல. நீ விளையாட்டிற்காக வேட்டையாடியும், உணவிற்காகவும் கொல்லும் பிராணிகளும் நீயே. உன்னில்மட்டும்தான் ஆவி ஆத்மா இருப்பதாக நினைத்திருந்தாய். உன்னை மூடியிருந்த அஞ்ஞானத்திரையை நான் சிறிது நேரத்திற்கு நீக்கினேன். பிறருக்குத் தீங்கிழைப்பதெல்லாம் உனக்கே இழைத்துக்கொள்கிறாய் என்னும் உண்மையை உணர்ந்தாய்!

"எல்லாவற்றிலும் விளங்கும் ஆத்மா ஒன்றே. அவ்வாத்மாவில் ஓர் அணுவளவுதான் உன்னிலும் ஒளிர்கிறது. உன்னில் பிரகாசிக்கும் இவ்வணுவைத்தான் நீ இன்பதுன்பங்களுக்குள்ளாகவோ அது தங்கி நிற்கும் இவ்வுடலின் வாழ்க்கையைக் குறைக்கவோ முடியும்.

"தன் ஆத்மாவைச் சுற்றியுள்ள மாயையாகிய கோட்டைச் சுவர்களை நாசப்படுத்தி மற்றப் பிராணிகளையும் தானாகவே கருதி யவற்றிடம் அன்பு செலுத்தலால் உன் ஆத்மா விருத்தியடையும்; பூர்ணத்வம் அடையும்.

"உன்னிட மட்டுமே ஆத்மாயிருப்பதாகக் கருதி அதன் சுகத்தை விருத்திசெய்ய எண்ணங்கொண்டு அதற்காகப் பிறரது இன்பத்தைப் பறித்தலே உன் ஆத்மாவைத் துன்பத்திற்குள்ளாக்கவும் உன் வாழ்க்கையைக் குறைக்கவும் ஏற்ற வழி.

"மற்றவரிடம் விளங்கும் ஆத்மாவை நாசஞ் செய்ய உனக்குச் சக்தி கிடையாது. நீ கொன்றவரின் ஆத்மா உனக்குப் புலப்படாது மறைந்திருக்கிறதேயன்றி அழிந்துவிடவில்லை. நீ உனது வாழ்க்கையைச் சுகமுற்று நீடிக்கச் செய்யப் பிறரது வாழ்க்கையைக் குறைக்க முயன்றாய். ஆனாலது உன்னால் முடியாது. ஆத்மாவிற்குக் காலதேசமென்ற பேதமாவது அழிவாவது கிடையாது.

"ஒரு க்ஷணவாழ்வு, ஆயிரங்கால வாழ்க்கை, இன்னும் பிரபஞ்சத்தில் தோன்றியும் கண்ணுக்குப் புலப்படாது மிருக்கும் வாழ்க்கைகள் என்ற எல்லாவற்றிலும் நின்றொளிரும் ஆத்மா சமமானதே; ஒன்றே. ஆத்மாவை யழிக்கவாவது, மாற்றவாவது ஒருவனால் முடியாது. ஏனெனில் அஃதொன்றேயுள்ளது; உண்மையானது; மற்றவை எல்லாம் இருப்பதாக வெளித் தோற்றந்தான்."

இவ்வாறு உபதேசித்துக் கிழவன் மறைந்தான்.

மறுநாட்காலை அசுவாரூட நரபதி நரசிம்மவர்மனையும் மற்றுமுள்ள கைதிகளையும் விடுதலை செய்ய உத்திரவிட்டான்.

மூன்றாம் நாள் தனது மகன் நரபரிபாலனை யழைத்து இராஜ்யத்தையவன் வசமொப்பித்துத்தான் புதிதாகக் கற்ற உண்மைகளை ஆழச் சிந்தித்துக்கொண்டே அடவி புகுந்தனன் அசுவாரூடன்.

பிற்காலங்களில் பல வருடங்களுக்குப் பிறகு அசுவாரூடன் சன்னியாசிக் கோலத்துடன் ஊர்ஊராய் அலைந்துகொண்டு ஜனங்களுக்கு

பரமாத்மா ஒன்றே என்றும், பிரபஞ்சத்தில் தோன்றும் ஜீவன்களெல்லாம் அதன் சிறு பாகங்களாகிய அணுக்களே எனவும், பிறர்க்குத் தீங்கிழைப்பவன் தனக்கே துன்பத்தை விளைத்துக்கொள்கிறானெனவும் உபதேசித்து வந்தான். அவன் "ஏகம் ஸத், விப்ரா: பகுதா வதந்தி" 'தத்வமஸி' என்ற வாக்கியங்களின் உண்மையான பூரணக் கருத்துக்களை யுணர்ந்து விட்டானன்றோ!

(இது 'டால்ஸ்டாய்' (Tolstoy) என்பவர் எழுதிய சிறு கதைகளில் ஒன்றின் போக்கையும் கருத்தையும் தழுவியுள்ளது.)

# தாம்பத்யமுறை அல்லது மனைவிமக்களும் முக்திமார்க்கமும்.

(ஸ்வாமி ஸ்ரீராம தீர்த்த பரமஹம்ஸர்.)

361-ம் பக்கத் தொடர்ச்சி.

ஸ்ரீமான் வெ. க. ராமநாதன், B.A., B.L.

இவ்வாறாக, ஈசுவரனும் நீயும் சமமானவர்கள், ஏகமான வஸ்து, இரண்டற்றவர்கள் என்ற உண்மையைக் கண்டறியுமுன் முதன் முதல் நீயும் உன் மனையாளும், உன் குழந்தைகளும் இம்மட்டும் நீங்கள் மூவரும் பேதமற்ற ஒரே ஜீவன் என்ற உண்மையைக் கிரஹிக்க வேண்டும். முதன்முதல் நீயும் உன் மனைவியும், உங்கள் இருவருடைய சேர்க்கையாலுண்டாகிய உங்கள் குழந்தைகளும் இம்மூன்று அம்சங்களும் ஒன்றேயாகும் என்கிற உண்மையைக் கிரஹித்துக்கொள்ளாமல் நீ ஸர்வ சிருஷ்டியுடன் ஒற்றுமை பாராட்டுவதென்பது எவ்விதம் இயலும்?

படிப்படியாகப் பரிபக்குவமடைய வேண்டிய அவசியத்தை வேதாந்த சாஸ்திரம் பெரிதும் வற்புறுத்துகின்றது. உன்னுடன் நெருங்கிப் பழகும் உன் மனைவிமக்களுடன் முதன்முதல் இவ் வொற்றுமை பாவத்தை அப்பியாஸிக்கத் தொடங்குதல் வேண்டும். உனக்குப் பெரிதும் அருமையாயும் ஆசையாயுமுள்ள ஜீவன்களுடன் நீ வேற்றுமையற்றுக் கலந்து ஈடுபடவேண்டும். உன் அவாக்களும் அவர்கள் அவாக்களும், உன் உத்தேசமும் அவர்கள் உத்தேசமும் ஒருவகைப்பட்டனவாக ஆகட்டும்; அவர்களுடைய சரீரத்தில் பட்டால் உன் சரீரத்தில் பட்டதுபோல் ஏகீபவித்த சரீர உணர்ச்சி ஏற்படட்டும்; நாலாறுங்கூடி ஒரு பாலாறாகப் பிரவாஹிக்கட்டும்; இவ்வாறே அநுபவங்கள் முதிர்ந்துகொண்டே வரட்டும். அடுத்தபடியாக இதர குடும்பங்களையும் உன்னுள் அடக்கிக்கொள். அதற்கு அடுத்தபடியாக சகல குடும்பங்களையும் உனதாகப் பாவிக்கத் தலைப்படவேண்டும். உலகத்திலுள்ள சகலமான சரீரங்களும் உனதென உணர்ச்சி உதயமான பின்பு, அவைகள் அனைத்திலும் அந்தர்யாமியாய் நிற்கும் ஈசனும் அந்த சர்வ ஜகத்தும் நீயும் ஒன்று என்ற ஞானம் ஏற்படலாகும். பிரதி ஜீவனையும் ஜீவராசிகளனைத்தையும் நீ உன்னுடன் கொண்டு செல்லலாம்.

வேதாந்த சாஸ்திரப் பிரகாரம் ஒருவன் சகல வஸ்துக்களிடமும் பிரேமை பாராட்டித் தன் முழு வஸ்துவுமே அன்பின் உருவமாக மாறித். தன் தேகமே சர்வ ஜகத்தாகவும் சர்வ



ஜகத்தே தனது தேகமாகவும் அறிந்து அன்பு பூண்டு நடந்து கொண்டாலொழிய எவராலும் பரம்பொருளைக் கண்டறிதல் இயலாது. ஆத்மா அல்லது ஸத்யம் என்பதின் நிஜரூபத்தைக் கண்டறிவதில் இதுவே முதற் பிரயத்தனமாகும்; அதாவது, உனக்கும் அகில சிருஷ்டிக்கும் யாதொரு பேதமுமின்றி நீயே அந்தச் சிருஷ்டிகளனைத்துமாக விளங்குவது. இதன் பின்னர் இக்கொள்கைக்கு மேலானதொரு படியை யடைதல் வேண்டும்.

மாயை இரண்டு விதங்களென்பது சகலரும் அறிந்த விஷயம்; அதாவது உள்மயக்கம், புறமயக்கம் என்பன. நான் வேறு, நீ வேறு என்ற மயக்க புத்தி உள்மயக்கத்தின் பாற் படும். இந்த உள்மயக்கத்தின் காரணமாகத்தான் ஜனங்கள் தாங்கள் கண்ணுறும் பிரதி வஸ்துவினிடத்தும் ஈசுவரனை ஆரோபித்து அங்கிருப்பதும் ஈசுவரன், எங்கிருப்பதும் ஈசுவரன் என்ற சர்வேசுவரத்வ புத்தியைக் கொள்ள முடியாமலிருக்கிறார்கள். பிரபஞ்சத்திலுள்ள சகல வஸ்துக்களினிடத்தும் ஒற்றுமைக் குணத்தைக் காணவொட்டாமல் நம்மைத் தடுத்து நிற்கும் மனோவியாதிக்குக் காரணமும் இந்த மாயைதான்; பலகோடி உருவங்கள், பல்லாயிர நாமதேயங்கள் என்பவைகளினால் ஏற்படும் வேற்றுமைத் தோற்றமே புறமயக்க மாகும்.

மனிதன் இருவித மயக்கங்களையும் ஒழித்தல் வேண்டும். முதன்முதல் எல்லா வஸ்துக்களினிடத்தும் அவை தம்முள் உளதாகிய ஒற்றுமை பாவத்தை உய்த்துணர்தல் அவசியம். இவ்விருவகை மயக்கங்களையும் ஒழிக்கவேண்டியவன் பிரபஞ்சத்தில் பிரதிவஸ்துவினிடத்திருக்கும் ஆத்மாவும் ஜகத் முழுவதும் வியாபித்திருக்கும் ஆத்மாவும், அதாவது ஆறு, குளம், ஏரி, குட்டை, புல், பூண்டு, செடி, கொடி, புழு, பூச்சி, பறவை, விலங்கு, மானிட ஜாதி அனைத்திலும் விளங்கும் ஆத்மாவும் தனது ஆத்மாவென்றே அறிகிறான். ஆரம்ப காலத்தில் தன் பெண்டு பிள்ளைகளிடம் அவன் ஒற்றுமை பாவத்தைக் கண்டறிந்துள்ளதால் இந்த மேலான நிலையை அவன் எளிதில் அடைகிறான். இவ்வாறாக ஸ்தாவர ஜங்கமங்களாதி சகல ஜீவராசிகளிடத்தும் விளங்கும் பஹிர் ஆத்மாவுக்கும் தன்னுள் இயங்கும் தானெனும்படியான ஆத்மாவுக்கும் பேதங் காணாத நிலையினின்றும் அடுத்த நிலையாக இந்த மாயை அடியோடு ஒழியுமிடத்து, அதாவது மறையும்போது, வெளிரூபங்கள், நாமதேயங்கள், வியக்ருதிகள் யாவும் மறைந்த பின் சரீரரூபமாய் நின்ற ஜகத் முழுவதும் ஒழிகின்றது. அவ்வாறு வெளி சரீர சம்பந்தமான பற்றை விட்டுவிட்டு நமது அவற்றினுள்ளே இயங்கும் ஆத்ம நிலையைப் பற்றுகிறது. ஆரம்பத்தில் சர்வ ஜகத்தையும் நமது சரீரமெனப் பாவித்து அடுத்தபடியாக அவ்வாறு நமது சரீரமாகப் பாவிக்கப்பட்ட சர்வ ஜகத்தை யொழித்து அவற்றின் உட்பொருளாகிய ஆத்மாக்களினின்றும் வேறில்லாத என்னுடைய ஆத்மா — அதுதான் பரமாத்மா — அதுதான் தத்வப் பொருள் என்பதில் புத்தியை லயப்படுத்தல் வேண்டும்.

தத்வத்தைக் கண்டறிந்து ஸ்வாநுபவம் பெற்ற ஒருவன் முதன் முதல் சர்வ ஜகத்தும் தானேயாகி அதன் மூலம் சர்வ ஜகத்தையும் ரக்ஷிக்கிறான். அதாவது, உன் கையே உனக்குத் துணை. நீயே உன் மோக்ஷத்தைத் தேடிக்கொள்கிறாய். இதுதான் வேதாந்தத்தின் ஸாரம்.

முதன்முதல் உன் தாயார், தகப்பனார், பிறகு உன் மனைவி, அப்புறம் உனது மக்கள், நண்பர்கள் இவர்களுடன் உன் ஒற்றுமையைக்

கண்டறிந்து, அதன் பின் உன் நாட்டார், அடுத்தபடி உலகத்தாரனைவரும் என்று படிப்படியாக விருத்தியடைந்து செல்லுதல் வேண்டும். இந்த உணர்ச்சி ஏற்படுவது ஆரம்பத்தில் கஷ்டமாயிருக்கும். சிறிது போன பிறகு எளிதில் மேலேறிச் செல்லலாம். மனிதன் முதன்முதல் பிறிதொருவருடன் தன் ஏகிபவித்த பாவத்தை உணர்ந்து அவருடன் ஐக்யமானால் வெகு சீக்கிரத்தில் ஒன்றியிருந்து எல்லாவற்றுடனும் தன்னுடைய ஐக்ய பாவத்தை அநுபவித் தறியலாம்.

ஒரு மனிதன் தனக்கும் தன் பெண்டு பிள்ளைகளுக்குமுள்ள ஒற்றுமையை உணரத் தொடங்கியவுடன் சிறிது காலத்திற்கெல்லாம் பெண்டு பிள்ளைகளின் வெளி ரூபத்தையும், வர்ணத்தையும், அங்கங்களின் அமைப்பையும், இதர சின்னங்களையும் மறந்து நாளடைவில் தன் ஒற்றுமையுணர்ச்சியை உள்ளிருக்கும் ஆத்மாவிடம் நிறுத்தித் தனக்கும் அவர்களுக்கும் அடிப்படையாயுள்ள நிலையான வஸ்துவின் தத்வத்தை அறியலாகிறான். பிரதி மனிதனுடைய அநுபவத்தினின்றும் இதன் உண்மை புலப்படலாம். நமக்கு வயது முதிரமுதிர நம் நேசத்துக்குப் பாத்ரமாய் நிற்கும் வஸ்து மேலும்மேலும் துல்யமடைந்து வருகின்றது. நமது ஆசைக்கும் அன்புக்கும் இலக்காய் நிற்கும் வஸ்து உயரியதாய் ஸ்தூல ரூபமற்றதாகிக் கடைசியில் எதைக் கண்டு நாம் காதலிக்கின்றோம், நம்முடைய அன்புக்கும் பாத்திரம் எது என்பது புலப்படாமல் போய்விடுகிறது. ஆனால் நமது அன்பும் ஆசையும் மாத்திரம் பெருகுகின்றதே யொழிய குறைகின்றதில்லை.

இந்த அநுபவம் சற்று அதிகமாகவோ குறைவாகவோ பிரதி ஸ்திரீ புருஷர்களுக்கும் ஏற்பட்டிராமலிராது. நாம் காதலிக்கும் ஸ்திரீ புருஷருடைய வெளித்தோற்றங்கள் அதாவது அவர்களுடைய சரீர அமைப்பும் அங்கப் பழுதுகளும் குரூபங்களும் நாளடைவில் மறைந்துவிடுகின்றன. உள்ளேயிருக்கும் ஆத்மாவையும், அகத்தேயுள்ள பரஸ்பர ஆர்வத்தையும், நமது மனதுடன் ஒத்தியங்கும் அவர்களுடைய மன நிலையையும் காதலிக்கத் தொடங்கிவிடுகிறோம். தூயகுணங்களையும், மலர்ந்த அன்பு நிலையையும் பற்றுகிறோம். இந்த அநுபவங்கள் ஏற்படாதவர்கள் எவரேனு முண்டோ? நாம் மனப்பூர்வமாய் நேசிக்கும் நமது பந்து மித்திரர்களுடைய அங்கக் குறைவுகள் எதுவும் நமது அகக் கண்களுக்கு மாத்திரமே யன்றிப் புறக்கண்களுக்குக்கூடப் புலப்படுவதில்லையாகின்றன. அவ்வித நேசத்திலாவது, அவ்வாறு நாம் காதலிக்கும் நபருக்காவது நம்மிடம் மனப்பூர்வமான நேசமிருக்குமாயின் நமது மனதும் உருகி அவ்விடம் இழுக்கப்பட்டுச் செல்கின்றது.

அப்புறம் அவர்களுடைய குரூபங்களெல்லாம் மறைந்து, வெளித்தோற்றங்களெல்லாம் மறைந்து, அவர்களிடம் இருக்கக்கூடிய அழகும் நற்குணங்களும் உயரிய மனோபாவங்களும் மாத்திரமே நமக்குத் தென்படுகின்றன. அவைகள் நமது நேசத்துக்குப் பாத்திரங்களாகின்றன.

உலகிலுள்ள வஸ்துக்களின் வெளித்தோற்றங்கள் யாவும் கேவலம் சித்ரங்களாகவே நமது புத்திக்குட்பட்டு, அக்காரணத்தால் புத்தியானது அத்தோற்றங்களைப் பாராட்டாமல் உள்ளிருக்கும் சாசுவதமான அம்சங்களின்மீது சென்று நமது கண்களுக்குப் புலப்படும் எவ்விதப் பொருளினுடையவும் எவ்விதப் பிராணியினுடையவும் வெளித்தோற்றங்களில் புத்தியானது தயங்கி நிற்காமல் அவற்றைக் கண்டதும் அவ்வஸ்துக்களின் அகத்துள்ள ஆத்மகுணங்களைச் சிந்திக்கத் தொடங்குங்காலத்தில்



அதாவது நமது புத்தியானது முன் வாக்கியத்திற் கூறப்பட்டபடி ஜீவன்களுடைய உயரிய மனோபாவங்களைப் பற்றி நிற்கும் நிலைக்கு அடுத்தபடியான நிலையை எய்துங்காலத்தில் நாம் பிரதி வஸ்துக்களின் உள்ளே மறைந்து நிற்கும் கடவுள் தன்மையை, அதாவது உண்மையான அந்தராத்மாவைக் காண்கின்றோம். இந்நிலையை அடைந்தவுடன் சர்வப் பிரபஞ்சத்தினுடையவும், தன்னுடையவும் இரண்டற்ற ஒரே நிலையை, ஏகீபவித்த தன்மையை, உணர்வது சுலபசாத்தியமாகிறது.

இந்நிலையில் சிறிது காலம் நின்று அநுபவம் பெற்ற பின்பு அடுத்தபடியாக அகம் புறம் என்ற பேதமின்றி ஈசுவரத் தன்மையென்ற கடலில் அமிழ்ந்து ஆழ்ந்து ஆநந்தமடைகிறோம். இவ்விதம் தம்மையும் மறந்து தமக்கு அந்நியாயமானதாகத் தோற்றும் தோற்றங்களும் உண்மையில் தாமே யாகிறோம். தம்மை விட்டு அவை பிறிதானவையல்ல என்ற தத்வம் ஏற்கெனவே உதயமாயிருப்பதால் அவைகளையும் மறந்துவிட்டு அகச் செயலும் புறச்செயலும் ஏதுமற்று ஸ்தம்பித்து அபேத நிலையில் அமர்ந்து ஆழ்ந்து அநுபவித்துக் கடைசியில் அந்நிலையிலேயே லயித்துவிடுகிறோம். இதுவே கடவுள் நிலை. இதுவே நிர்வாணம். இதுவே ஸமாதி. இந்நிலையில் மனம் அலைவதில்லை, மனம் எதிர்ப்பதில்லை, மனம் சலிப்பதில்லை. மனம் சலனமற்றால் இயங்காது இராது. ஆதலினால் சலனமறும்போதே அது நசித்ததாகிறது. இம்மனமற்ற நிலையே நிலை!

நமது கிருகஸ்த தருமத்தையும், உலக சம்பந்தத்தையும் உலக அநுபவத்தையும் கொண்டு எவ்வாறு நாம் படிப்படியாக மேலேறிப் பரிபக்குவமடைந்து அத்துரிய நிலையை எய்தலாம்?

பூர்வத்தில் நல்ல குணவதியாகிய வயோதிக ஸ்திரீ யொருவள் ஒரு ஸந்யாஸியினிடம் சென்று, தனது வீடுவாசல்களையும், நாடுநகரங்களையும், உற்றார் உறவினர்களையும், தன் மக்களையுங்கூட விட்டுவிட்டு ஸம்ஸார பாசங்களை யெல்லாம் அறுத்தெறிந்து, சகலவிதமான பந்தங்களையு மொழித்து ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அவதாரக்ஷேத்ரமாகிய பிருந்தாவனத்துக்குச் செல்லும்படி தான் உத்தேசித்திருப்பதாகக் கூறி அவருடைய அநுமதியைக் கேட்டாள்.

அப்போது அவளுடன் அவளுடைய பேரப்பிள்ளையும் ஸந்யாஸி முன் நின்றிருந்தான். அம்முனிச் சிரேஷ்டர் அவளைப் பார்த்து "இதோ பார், உன் பேரப்பிள்ளையின் கண்களின் மூலமாக உன் கண்களுள் ஊடுருவிப் பாய்ந்து உன்னைப் பார்த்து நிற்கின்றதே. அது யாது? இக்குழந்தையின் ஒவ்வொரு மயிர்க்காலினின்றும் இமைகொட்டாது உன்னைப் பார்த்து நிற்கும் அந்த சக்தி யாது? எந்தத் தெய்விகமான சக்தி அவ்விதம் உன்னைப் பார்த்து நிற்கின்றது? சொல் பார்ப்போம்" எனக் கேட்டார். அந்த விருத்த ஸ்திரீயானவள் "அது கடவுளாகத் தானிருத்தல் வேண்டும். இந்தப் பால் மணம் மாறாத அருமைக் குழந்தையிடம் யாதொரு கெட்ட எண்ணமும், துஷ்ட சிந்தையுங் கிடையாது. இக்குழந்தை நிர்த்தோஷி; மகா பாவனமானது. இம்மதலை யழும்போது அவ்வழுகைக் குரலும் ஈசன் குரலைத் தவிர்த்துப் பிறிதில்லை" என்றாள். "நீ பிருந்தாவனம் சென்று அங்கே கிருஷ்ண பரமாத்மாவின் விக்ரகமொன்றைக் கதியென நம்பிப் பூஜிக்கவேண்டுமல்லவா? அதாவது அந்த பிம்பத்தில் நீ ஈசுவரனை ஆராதிக்கவேண்டும். அந்தக் கிருஷ்ண விக்ரஹத்தைப் போன்றதல்லவா இந்தக் குழந்தையின் உருவமும்?" என்றார். அப்புண்

ணியவதி சற்றே யோசித்துப் பார்த்தாள். முடிவில் இக்குழந்தையையே கிருஷ்ண பரமாத்மாவின் அவதாரமாக மனதில் பாவித்து, அக்கிருஷ்ணனை இக்குழந்தையின் சரீரத்து வாயிலாக உபாஸிப்பதே உத்தமமெனத் தேர்ந்தாள். குழந்தையின் கண்களில் நின்று காண்பவர் அக்கடவுளே யன்றோ? இக்குழந்தைக்குப் புதிய புதிய ஆற்றலையும் வல்லமையையும் அளிப்பவர் சாக்ஷாத் அந்தக் கருணா மூர்த்தியே யன்றோ? இம்மதலையின் செவி சம்பத்தைப் பாதுகாப்பவர் அப்பரமேசுவரனே யன்றோ? இக்குழந்தையின் கூந்தலைத் தினத்துக்குத் தினம் வளர்ப்பவர் அவரே யன்றோ? இச்சின்னஞ் சிறு சரீர முழுவதும் வியாபித்து அந்தர்யாமியாய் அந்த மானிட யந்திரத்தை யியக்கி ஜீவனப் பரிபக்குவ நிலைக்குக் கொண்டு வரும் சூத்ரதாரி அந்த ஒன்றான தத்வப் பொருளே யன்றோ? இதுதான் தெய்வம். இக்குழந்தைதான் கண் கண்ட தெய்வம்.

அந்த ஸந்யாஸி மகா புருஷனுடைய வாக்கின்படி அவள் இனி அக்குழந்தையைத் தன் பேரப்பிள்ளையெனக் கருதாது அக்குழந்தைக்கும் தனக்கும் எவ்வித உறவின் முறை உண்டென நினைக்காது அதனையே கடவுளென நினைத்து அவ்வித மனோபாவத்தால் பாசங்களை யொழித்து ஸம்ஸார பந்தங்களினின்றும் விடுபட வேண்டுமென அவள் மனதிற் கொண்டாள். முடிவில் ஒரே பந்தந்தான் தனித்து நம்மைப் பீடித்து நிற்றல் வேண்டும். அதாவது ஈசுவரத்தன்மை. ஈசுவரபாவம் என்பதுமாத்திரமே நிற்றல் வேண்டும். இதுவே ஸந்யாஸத்துக்கு மார்க்கம்.

(தொடரும்.)

# செலிமாபேகம்.

ஸ்ரீமதி பாகீரதியம்மாள்.

(380-ம் பக்கத் தொடர்ச்சி).

செலிமா கபடமறியாப் பரிசுத்த அந்தக்கரணமுள்ள பாலிகையாதலால் தான் சீக்கிரம் பேகமாகப் போகின்றோம் என்று நினைத்துக் குதூகலித்தனள் என்பதில் ஆச்சரியமில்லை. ஆயினும் எப்பொழுதும் ஆநந்த சாகரத்தில் கிரீடை செய்துகொண்டிருந்தாள் என்று மாத்திரஞ் சொல்லக்கூடாது. மாஹரூனது துக்கத்திற்குத் தானே காரணமென அடிக்கடி நினைத்து நினைத்து வேதனைக்குள்ளானாள். ஆனால் சில நாட்கள் சென்றபின் ஒன்றுமறியாத இச்சிறுமி எல்லாவற்றையும் மறந்தனள். விவாக சமாரம்பத்தின் வைபவங்களால் இவள் ஆச்சரியத்திலாழ்ந்தாள். பாதுஷாவின் ரங்க மஹாலின் ஐச்வரியத்திற்குத் தானே யஜமானியெனக் கருதி அதிக ஆனந்தமடைந்தாள். ரங்கமஹாலை யடைவதற்கு முன்னால் தன் மனோரதம் பூர்த்தியாய்விட்டதெனக் கருதினாள். மஹால் அன்று மிக்க அழகாகச் சித்திரிக்கப்பட்டிருந்தது. உலக முழுவதும் பரவியிருந்த ஐச்வரியம் அன்று அம்மஹாலில் ஒருங்கு கூடியிருந்ததெனச் சொல்லவும்வேண்டுமோ? அந்தப்புரத்திலுள்ள சுந்தரிகள் உத்தமமான ரீதியுடன் சிங்காரித்துக்கொண்டு புது பேகத்தை வரவேற்று உபசரிக்க உற்சாகத்துடன் காத்திருந்தார்கள். செலிமாவின் பல்லக்கு மஹாலை நோக்கி வந்துகொண்டிருக்கவே புதிய பேகத்தைத் தரிசிக்கும்பொருட்டு லக்ஷக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள் வழியெல்லாங் கூடியிருந்தார்கள். பல்லக்கு மஹாலை நோக்கி வந்துகொண்டிருக்கும்பொழுது செலிமா அரண்மனையினழகைக் கண்டு தான் வேறொரு லோகத்திலிருப்பதாகவே எண்ணினாள். அந்தப்புறத்தின் கதவருகிற் பல்லக்கு நின்ற



மாத்திரத்தில் பாதுஷா ஷாஜஹானது குமாரி ஜஹானாரா செலிமாவை எதிர்கொண்டழைத்து அன்புடன் அவளை மஹாலுக்குள் ளழைத்துச் சென்றனள். அந்தப்புரத்தில் தனக்குப் பிறர் செய்து வரும் உபசார மரியாதைகளைக் கண்ட சிறுமி செலிமா தன்னையே மறந்தாள்.

உபசார வார்த்தைகளானபின் ஜஹானாரா சமீபத்திலுள்ள வேறொரு அழகிய மஹாலுக்குள் செலிமாவை அழைத்துச் சென்று, "இதுவே பேகத்தினது மஹால்" எனப் பகர்ந்து அவளிடமிருந்து விடைபெற்றுச் சென்றனள். அரசர்களது அந்தப்புரத்தில் நடக்குஞ் சங்கதிகளை இச்சிறுமி எவ்வாறு அறிவாள்? ஜஹானாராவின் மொழிகளைக் கேட்டு இவள் மிக்க ஆனந்தமடைந்தாள். பிரேமையுடன் சலாம் செய்து ஜஹானாராவிற்கு விடைகொடுத்தனுப்பினாள்.

பாதுஷாவின் அந்தப்புரத்தில் இன்னுமொரு பேகம் அதிகமானதைக் குறித்து ஜஹானாராவிற்குமாத்திரம் கொஞ்சமேனும் சந்தோஷமுண்டாகாதிருந்தது. இதற்கு முன்னால் புதிது புதிதாகப் பேகங்கள் வந்தபொழுதெல்லாம் சில நாட்களுக்குப் பாதுஷா அப்பேகங்களின் வலையிற் சிக்கி ஆடிவந்துள்ளானாகையால், அந்தப்புரத்தை யடைந்த செலிமா மிக்க எழில் வாய்ந்திருப்பதால் அவளது வலையிலு மகப்படாதிரானெனத் தோன்றவே ஜஹானாராவின் மனதில் அசூயாக்னி எரியத் தொடங்கியது. ஜஹானாரா ஷாஜஹானது குமாரி என்பது வாஸ்தவமேயாயினும் அந்தப்புர முழுவதிலும் இவளே அதிகாரதோரணை நடத்துவதைப் பெரிய பூஷணமாகக் கருதியிருந்தனள். செலிமாவுக்கு முன்னால் அந்தப்புரத்திற்கு வந்துள்ள பேகங்கள் அதிகாரஞ் செய்து தலையெடுக்கவொட்டாது அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தன்னதிகாரத்தை விடாது நிலை நிறுத்தி வந்தனள். ஆனால் சுந்தரி செலிமாவின் வலைக்குள் பாதுஷா அகப்படும் பக்ஷத்தில் தன்னை யொருவருங் கவனிக்க மாட்டார்களெனக் கண்ட ஜஹானாராவைக் கோபம் அசூயை இரண்டுஞ் சேர்ந்து வாட்டின.

கோபங்கொண்ட ஜஹானாரா நேராக மும்தாஸ் பேகத்தை நோக்கிச் சென்றாள். அன்று நடந்த விவாக மகோற்சவங்களுக்கு மும்தாஸ் வந்தவளல்ல. அன்று முழுவதும் அவள் தன் மஹாலை விடுத்து வெளிக் கிளம்பினவளல்ல. ஜஹானாரா மும்தாஸ் பேகத்தின் அறைகுட் சென்றபொழுது மும்தாஸ் கண்ணீர் பெருக்கிப் படுத்திருந்தனள். பாரத கண்டத்துப் பாதுஷாவின் பட்டராணியான மும்தாஸ் கேசகலாபம் அவிழ்ந்து தரையிற் தொங்க, ஒரு சுவர்ண மஞ்சத்திற் படுத்து, மிருதுவான மகமற் தலையணைகளிற் தன் எழில் மிக்க வதனத்தை மறைத்து ஒரு குழந்தையைப்போற் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தனள். மும்தாஸைக் கண்ட ஜஹானாராவிற்கும் தன்னையறியாது துக்கம் மேலிட, "அம்மா! இவ்வுலகிற்கு அதிபதியான பாதுஷாவின் பட்டராணியும் இவ்வண்ணம் கண்ணீரைப் பெருக்குவது அழகோ?" என்றனள்.

மும்தாஸ் அழுதுகொண்டே தன் பெண்ணை நோக்கி, "ஜஹானாரா! உன் வார்த்தைகள் எனது வருத்தத்தை அதிகரிக்கச் செய்கின்றன, குழந்தாய்! பத்தினியின் அந்தக்கரணமெப்படியிருக்குமென நீஇன்னுமறிந்தவளல்ல. யாருக்காக நான் எல்லாவற்றையும் அர்ப்பணஞ் செய்தேனோ, யாருக்காக இப்பிராணனை வைத்திருக்கின்றேனோ அவர் என்னைக் கவனியாதிருக்கும் பொழுது அபலையின் மனதிற்கு என்ன வருத்தமுண்டாகும்? அந்தக்கரணம் என்ன ஸ்திதியிலிருக்கும் என்பதைப் பற்றி உன்னால் கற்பனை செய்யவும் முடியுமா? உன் தந்தை பாதுஷா, பாரதகண்டத்திற்கெல்லாம் அதிபதி, அதி சாமர்த்தியசாலி, புத்திமான்.

அவர் செய்து வருவதெல்லாம் நல்லதென்றே செய்துவருகின்றார். ஆனால் நானோ அபலை. அழாது வேறென்னதான் செய்ய முடியும்?" என்றனள்.

"சே! சே! அம்மா! நானுமது துக்கத்தை அதிகரிக்க வந்தவளல்ல். நான் உமது குமாரியாயிருந்தாலும் ஸ்திரீயல்லவோ? ஸ்திரீகளது மனது எப்படியிருக்குமெனக் கொஞ்சமேனும் எனக்குத் தெரியாதிருக்குமோ? தந்தை செய்யும் காரியம் நியாயமல்லவென நானுமறிவேன். ஆயினும் பட்டமகிஷியாகிய நீர் இதற்காக இவ்வண்ணம் சோகமடைவது யோக்கியமாகாது அம்மா! இப்படித் தாங்களும் அழலாமா?"

"ஆனால் நான் என்னதான் செய்யமுடியும்? நான் ஸ்திரீயாகப் பிறந்ததே துரதிர்ஷ்டம். இரண்டாவது பாதுஷாவை இச்சித்து அவரை மணந்துகொண்டது அதிலுந் துரதிர்ஷ்டம். பாதுஷா உதார குணமுள்ளவர், பராக்கிரமசாலி, ஆனால் நானோ ஒரு ஸ்திரீ. பரதகண்டத்திற் கதிபதியான பாதுஷா என்னைப்போலுள்ள ஸ்திரீயின் பிரேமபாசத்தை ஒருபொருட்டாக எண்ணப்போகின்றாரா? எனது மூடத்தனத்தால் நான் எல்லாவற்றையும் அவருக்கு அர்ப்பணஞ் செய்தேன். எனது ஆயுள் நாட்களை எனது பிராணேச்வரருக்குச் சேவை செய்தே கழித்தேன். எனது பிராணபதியின் சகவாசமே எனக்குச் சுகம். ஆனால் ஜஹானாரா! கபடமற்ற எனது பிரேமையையும் ஏகநிஷ்ட சேவையையும் பாதுஷா பங்கஞ் செய்ததால் நான் அழாமல் வேறென்னதான் செய்யக்கூடும்?"

மும்தாஸ் பேகத்தின் நேத்திரங்கள் நீரால் நிறைந்திருந்தன. ஜஹானாரா உடனே எழுந்திருந்து நின்று ஆவேசத்துடன், "அம்மா! இவ்வண்ணம் அழுதுகொண்டேயிருப்பதால் வரும் லாபமென்ன? புதிதாக வந்திருக்கும் அந்த ஸ்திரீயைக் கண்ணாற் கண்டபின்னும் பேசாமல் வாயை மூடிக்கொண்டிருக்கலாமா? அம்மா! இப்படியிருப்பது தகுதியல்ல. பரதகண்டத்திய அதிபதியின் பட்டமகிஷியும் இப்படியிருந்தால் சோபிக்குமா? பட்டமகிஷியெனில் பெண் சிங்கம். பெண் சிங்கத்தின் தைரியத்தை வெளிக்காட்டவேண்டாமா? பாதுஷாவின் பிரேமஸ்தானமோ உங்களைச் சேர்ந்தது. வேறொரு பிராணி உங்களது சுகத்தைக் கெடுத்து உங்களைக் கீழே தள்ள எண்ணும்பொழுது நீங்கள் பேசாதிருப்பது அவமானத்திற்கிடமே."

ஜஹானாராவின் வார்த்தைகள் மும்தாஸ் பேகத்தின் மனதைக் கலைக்காதிருக்கவில்லை. தானிதுவரை சம்பாதித்திருந்த வித்தை வியர்த்தமாகவில்லையென்று அவளுக்குத் தோன்றியது. தன் வார்த்தைகள் தன் தாயின் மனதைப் பேதிக்கவே அதிக ஆனந்தங்கொண்டாள். மும்தாஸ் பேகமும் யோசனையிலாழ்ந்தாள். ஜஹானாரா அப்படியே அவளை விடுத்து வெளிக்கிளம்பினாள். மிக்க நேரம் யோசித்தும் மும்தாஸ் ஒரு நிச்சயத்திற்கும் வாராதிருந்தனள். ஸ்திரீ சுபாவத்திற்குச் சகஜமாயுள்ள அசூயையும் அகங்காரமும் இவள் மனதிலுந் தோன்றின. ஆனால் நற்குண நற்சுபாவமுள்ளவளானதால் இவள் மனதில் அவை யொன்றும் சரியாய் ஊன்றவில்லை. எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாய் யோசித்தாளோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாய் உயிரை வெறுத்தாள். கடைசியாக அங்கிருந்து எழுந்து மனதை வேறு வழியிற் செலுத்த வெண்ணி முத்து மஹாலின் உப்பரிகை மேலேறிச் செல்ல எத்தனித்தாள். மும்தாஸ் பேகமும் ஷாஜஹானும் பல நாட்கள் நிலாக்காலங்களில் அவ்வுப்பரி



கையினின்றும் யமுனாநதியின் நீலவர்ண ஜலத்தினழகைக் கண்டு களித்து உட்கார்ந்திருக்கின்றார்கள்.

சூரியன் மேற்குத் திசையை யடைய இன்னுமதிக நேரமிருந்தது. அந்தப்புரத்திற்குப் பாதுஷா சீக்கிரம் வருவது வழக்கமில்லாததால் மும்தாஸ் முத்துமஹாலுக்குச் சென்று சாந்தமுடன் சிருஷ்டியினழகைக் கண்டு களிக்க உத்தேசித்துத் தன் மஹாலை விடுத்து வெளிப்பட்ட மாத்திரத்தில் பாதுஷாவின் மஹாலை நோக்கி செலிமா போய்க்கொண்டிருந்தது இவளது நேத்திரங்களுக்குத் தென்பட்டது. அச்சமயம் செலிமா புது வஸ்திரந் தரித்து ரத்னாலங்காரங்களை அணிந்திருந்தனள். பிரேமை மிகுதியால் அவளது முகம் மனோஹரமாயிருந்தது. மும்தாஸ் க்ஷணநேரம் அவளது முகத்தைப் பார்த்தாள். எழில் மிக்க செலிமாவின் முகத்தை இவள் சற்று நேரம் உற்று நோக்காதிருக்க முடியவில்லை. லாவண்யமே உருவாய் வந்த முகத்தைக் கண்ட மாத்திரத்தில் மும்தாஸ் திடீரென மூர்ச்சித்தனள். ஆனால் அவளைக் கீழே விழவொட்டாமல் அருகிலிருந்த தாசி பதிமா தாங்கிப் பிடித்துக்கொண்டாள்.

கொஞ்சநேரஞ் சென்றபின் மும்தாஸ் கண்களைத் திறந்து எதிரிலிருந்த தன் விசுவாசமுள்ள தாசியை நோக்கிப் "பதிமா! இப்பொழுது நான் என்ன செய்வேன்?" என்றனள். தன் யஜமானியின் குரல் கேட்டுப் பதிமாவின் கண்கள் அகண்டு பிரகாசித்தன. வாயைத் திறக்காமல் பேகத்தை அறைக்குள்ளழைத்துச் சென்று சுவர்ண மஞ்சத்திற் படுக்கச் செய்து சிச்ருஷை செய்து அருகிலுட்கார்ந்திருந்தனள்.

பகலுக்குப் பின் இரவும் இரவிற்குப் பின் பகலும் நியமித்த வண்ணமிருப்பதுபோல் வழக்கப்படி ஒவ்வொன்றும் நடந்துகொண்டிருந்தது. செலிமாவும் ரங்கமஹாலில் சுகதுக்கங்களை அனுபவித்துக்கொண்டிருந்தாள். இவளது பாசத்திற்குப் பாதுஷா கட்டுப்படாமலிருக்கும் வண்ணம் ஜஹானாரா தன்னாலான முயற்சிகளைச் செய்து கொண்டிருந்தனள். பதிமாவும் தன்னால் இயன்றவற்றைச் செய்தாள். ஆனால் யாருக்கும் பலன் கிடைக்கவில்லை.

செலிமாவுக்கு அந்தப்புர வைபவத்தாலுண்டான ஆனந்தம் குறைந்துகொண்டே வந்தது. மிக்க தயாளுவும் உதாரகுணமுமுள்ளவனான தன் பிராணபதியினது முகத்தைக் கண்டு தன் ஆயுள் வியர்த்தமல்லவெனச் சமாதானஞ் செய்துகொள்ளுவாள். ஷாஜஹானது முகத்தைக் கண்டு மதுரமாகச் சம்பாஷிப்பதே சுகமெனக் கருதுவாள். ஆனால் ஈச்வரனது இச்சை வேறுமாதிரியாக இருந்தது. பாதுஷாவின் தரிசனம் இருக்கஇருக்கக் குறைந்துகொண்டே வந்தது. செலிமாவின்மேற் கொண்டிருந்த பிரேமை குறைந்து விட்டதின் காரணமாக ஷாஜஹான் வாராதிருந்தனனென நினைக்கக்கூடாது. இவ்வருஷ முழுவதும் தன் மனதை ராஜ்ய பாரத்திற் செலுத்த நேரிட்டது. பிறரை நம்பி அவரிடம் இராஜ்ய பாரத்தைக் கொடுக்காமல் தானாகவே ஒவ்வொன்றையும் பார்த்து வந்தனன். செலிமாவை மணஞ்செய்துகொண்ட வருஷம் முக்கியமான ராஜ்ய காரியங்களைச் செய்யவேண்டி பாதுஷா மிக்க நேரம் தர்பாரிலேயே கழிக்கவேண்டியிருந்ததால் ரங்கமஹாலுக்குச் செல்லவும் சமயங் கிடைக்காமலிருந்தது.

பாதுஷாவின் தரிசனம் துர்லபமாயிருக்கும் பொழுது செலிமாவுக்கு வேறென்ன ஆனந்தமிருக்கும்? ஷாஜஹானைக் காணாத இவளுக்கு எங்கும் சூன்யமாகத் தோற்றியது. சாந்தமாயோடிக்கொண்டிருக்கும் யமுனையின் ஜலத்

தை நோக்கியவண்ணம் தன் மஹாலின் ஜன்னலிலுட்கார்ந்திருப்பாள். ஷாஜஹானும் தானும் இவ்வண்ணம் பன்முறை யுட்கார்ந்திருந்ததை நினைத்து நினைத்து வருந்துவாள். தன்னிளமைப் பருவத்தில் தானடைந்துள்ள சுகங்கள் ஒவ்வொன்றாய் ஞாபகத்திற்குவர நேத்திரங்கள் நீரால் நிறையும். தன் பிறந்த அகத்திலிருந்து சாதாரணமாகக் காலங்கழித்திருந்தால் சிரேஷ்டமாயிருந்திருக்கும் என எண்ணுவாள். மாஹரூனது அழகிய முகம் தன் நேத்திரங்களுக்கு முன் அடிக்கடி தோன்றியது. தானாகவே தன் ஜீவனுள்ளவரை துக்கத்தை வருவித்துக்கொண்டோமெனவும் தனது ஆப்த மித்திரனது மனதைப் புண்படுத்தக் காரணமாயிருந்தோமெனவும் மனதிற் தோன்றவே கண்ணீர் வடித்தவண்ணமிருந்தாள்.

இவ்விதஞ் சோகத்திலாழ்ந்திருந்த செலிமா ஒரு நாள் யமுனையைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தனள். வழக்கப்படி தன் பிறந்த அகத்தைப் பற்றியும் குழந்தையாயிருந்தபோது தானனுபவித்த சுகத்தைப் பற்றியும் நினைத்து நினைத்துக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். செலிமாவின் தாசி மறைவாயிருந்து இவளை அதிகநேரம் உற்று நோக்கியிருந்தாள். பேகத்தின் துக்கத்திற்குக் காரணம் யாதென அறிய இச்சைகொண்டாள். செலிமாவோ தன்னையறியமல் 'அப்பா! அம்மா!' வென்றும் மற்றுஞ் சில வேளைகளில் "மாஹரூன்!" என்றுஞ் சொல்லிவந்த வார்த்தைகள் இவள் காதில் விழுந்தன. இரவு தூங்கும்பொழுதும் இவ்வார்த்தைகளே பேகத்தின் வாயினின்றும் வருவதை இத்தாசி பன்முறை கேட்டுள்ளாள். நிதமும் இவ்விதம் வருந்தும் பேகத்தைக் கண்ட தாசி மனஞ்சகியாது இச்சங்கதியை ஒரு நாள் தன் சினேகியான பதிமாவிடஞ் சொல்லலுற்றாள். பதிமா ஒன்றையும் விடாது சங்கதிகளைத் தீரவிசாரித்துக் கொண்டனள். மாஹரூன் என்ற பெயரைக் கேட்டமாத்திரத்தில் பதிமா சந்தோஷங்கொண்டனள். ஆனால் கொஞ்சமேனும் வெளிக்காட்டாது அவளிடமிருந்து விடை பெற்றுச் சென்றனள். மாஹரூன் என்ற பெயருடன் ஒருவன் சில நாட்களுக்குமுன் அரண்மனையில் வேலையிலமர்ந்துள்ள சங்கதி இவள் காதில் விழுந்திருந்தது. சீக்கிரம் தன்னிடத்தைச் சேர்ந்து தனக்கு வேண்டியவர்களது உதவியால் மாஹரூனை இன்னானென அறிந்துகொண்டனள்.

இது நடந்த நாலைந்து நாட்களுக்குப் பிறகு மாஹரூன் அரண்மனையை யடுத்திருந்த நந்தவனத்திற் தரையை நோக்கிய வண்ணம் யோசனையிலாழ்ந்துட்கார்ந்திருக்கப் பதிமா சந்தடியே செய்யாது அவன் பின் புறமாகச் சென்று 'மாஹரூன்' என்றனள். ஒரு ஸ்திரீயின் குரல் காதில் விழுந்த மாத்திரத்தில் மாஹரூன் திடுக்கிட்டான், பீதியடைந்தான், அங்கிருந்து ஓட எண்ணினான். இவனது ஸ்திதியை அறிந்த பதிமா இவனது உடுப்பை இறுகப் பிடித்துக்கொண்டு "பயமேன்? நான் கேட்பதற்குமாத்திரம் பதில் சொல். செலிமாவை நீ இச்சிப்பது வாஸ்தவமா?" என்றனள்.

மாஹரூன ஆச்சரியத்திலாழ்ந்தவனாய், "நீ யார்? எங்கிருப்பவள்? என் சங்கதி யெல்லாவற்றையும் நீ யெப்படி அறிந்தாய்?" எனக் கேட்டனன்.

"நான் பாதுஷாவின் ரங்கமஹாலிலுள்ள ஒரு தாசி. உன்னை இங்கே அடிக்கடி பார்த்திருப்பதால் இதைக் கேட்டேன். அரண்மனையில் நானென்ன வேண்டுமானாலுஞ் செய்வேன்."

"செலிமாவை இச்சிப்பது வாஸ்தவமென்று கேட்கின்றாய்? செலிமாவே என் ஜீவன்; செலிமாவே என் பிராணன்; அல்லா எனக்காகவே



அவளை நிர்மாணஞ் செய்திருக்கிறார்; அந்த ஸ்திரீ ரத்னத்தைப் பாதுஷா ஹரணஞ் செய்து என் வாழ்நாட்களை நாசஞ் செய்தார். அந்த ஸ்திரீயை நான் இச்சியாதிருக்க முடியுமா? எனது இருதயமான கோவிலில் எந்த இடத்தில் அவளது சிம்மாசனமிருக்கிறதென்றும் எவ்விதமாய் நானவளை ஆராதனை செய்து வருகிறேனென்றும் உனக்கெப்படித் தெரியும்? நிதமும் நானிங்குட்கார்ந்து என் துக்கத்தை நீக்க வழி தேடிக்கொண்டிருக்கிறேன். ஒரு முறையேனும் அந்த ரமணியின் மூர்த்தியைத் தரிசித்தாலல்லாது என் பிராணன் இத்தேகத்தை விட்டுப் பிரியாது. ஆயினும் இவ்வெண்ணம் வியர்த்தமே."

"ஒரு முறைகூட நீ அவளைப் பார்க்கவில்லையா?"

"இல்லை. சீ! வேண்டாம்—பார்க்கவே வேண்டாம். அந்நாட்களை நினைக்கும்பக்ஷத்தில் எனது துக்கமதிகரிக்கின்றது. நினைத்து நினைத்து வருந்துவதில் லாபமென்ன?"

இதற்குள் மாஹரூனது மனதிற் சமுசயமுதிக்கவே, "இச்சங்கதிகளை உன்னிடமேன் பகர்ந்தேன். இதில் உனக்கென்ன சம்பந்தம், எனது அந்தரங்கத்தை அறிந்துகொள்ளவே வந்துள்ளாய். இதை விட்டுச் செல் சீக்கிரம்" என்றனன்.

பதிமா புன்னகை கொண்டாள். "மாஹரூன்! நான் உனது சினேகிதி. இப்பிரேம காரியத்தில் உனக்குச் சகாயஞ் செய்ய இஷ்டங்கொண்டுள்ளேன. நிதமும் அவளது சந்நிதானத்திலிருந்து அவளைத் தரிசனஞ் செய்ய வேண்டுமென உனக்கு இச்சை யில்லையா?" என்றனள்.

"அவளருகில் வசிக்கவும் நிதமும் அவளைத் தரிசிக்கவும் நீ செய்வாயாகில் என்னவேண்டுமானாலும் செய்யத் தயாராயிருக்கின்றேன்."

"அவளருகில் வசிக்க உனக்கு இஷ்டமிருக்குமானால் இருட்டின பிறகு நீ இங்கு வா. பிறகு நானதற்கு வேண்டியதைச் செய்து உன்னை அந்தப்புரத்திற்கு அழைத்துச் செல்லுகிறேன்.

"அதெப்படி முடியும்?

"அதைப்பற்றி உனக்கேன் கவலை; என்மேல் விசுவாசம் வைத்துச் சூரியாஸ்தமனமான பிறகு இங்கே வா" எனப் பகர்ந்து பதிமா அங்கிருந்து புறப்பட எத்தனிக்க மாஹரூன் அவளது கரங்களைப் பிடித்து, "நீ சொல்லுவது வாஸ்தவந்தானா? வாஸ்தவமாகவா என்னை அந்தப் புரத்திற்கு அழைத்துச் செல்லப்போகின்றாய்?" என்றனன்.

"ஆமாம். அழைத்துச் செல்ல எனக்குத் தைரியமுண்டு. என் வார்த்தையை நம்பு. பதிமா இதுவரைப் பொய் பேசினவளல்ல."

"என்னை மன்னிக்கவும். எனது வாழ்நாட்கள் வீணாகப் போய்விட்டன நீயாவது என் மேற் தயை கொள்ளவேண்டும். என் வாழ்நாளின் கடைசியாகத் தங்கி நிற்கும் ஆசையைப் பங்கஞ் செய்து என்னை மானுவஸ்தைக்குள்ளாக்காதே."

தன் வார்த்தையில் நம்பிக்கை வைக்கும்படி பதிமா மறுபடியும் மாஹரூனுக்கு வற்புறுத்திச் சொல்லி அவ்விடத்தை விட்டகன்றனள்; மாஹரூன் அவளைப் பார்த்தவண்ணம் ஸ்தம்பித்து நின்றனன். இவனது மனதில் அநேக எண்ணங்கள் ஒன்றின் பின்னொன்றாகத் தோன்றின. தான் செய்ய உத்தேசித்திருக்கும் அக்கிரமச் செயலை எண்ணித் தன்னைத் தானே நொந்துகொண்டனன். ஆனால் கடைசியாகப் பதிமாவுடன் நிச்சயித்ததே நிலைத்தது.

அன்று பாதுஷா தன் பரிவாரங்களுடன் காஷ்மீரஞ் செல்ல நிச்சயித்திருந்ததால் அதற்குவேண்டிய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்

தன. பிரயாணத்திற்காக அரண்மனை முழுவதும் எங்கும் ஒரே கலவரமாயிருந்தது. அந்தப்புரத்திலுள்ள பேகங்களும் பிரயாணத்திற்கு வேண்டி ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார்கள். தன் காரியஞ் சித்தி யடைந்ததைப் பற்றிப் பதிமா மனம் பூரித்தாள்.

(தொடரும்.)

# வாழ்க்கைக் களஞ்சியம்.

ஸ்ரீமான் க. அமுதன் எழுதியது.

(376-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆதர்சத்தை புத்தியில் பிரதிஷ்டை செய்தவர்கள்— ஆதர்சத்தைப் சித்தத்தில் பிரதிஷ்செய்தவர்கள்— ஆதர்சத்தைப் பிராணனில் பிரதிஷ்டை செய்தவர்கள் எனப் பலவகையினர்கள் உண்டு. ஆதர்சத்தின் வன்மையை நோக்குங்கால், பிராணனில் நிலையுற்றபொழுது நிறைவன்மையையும், சித்தத்தில் அதைவிடக் குறைவாகவும், அறிவில் பின்னும் குறைந்தும் விளங்கும்; ஆதர்சத்தின் விரிவைக் கவனிக்குமிடத்து அறிவில் நிலையுரின் விசாலப் பெருக்கத்தையும், சித்தத்தில் அப்பெருக்கம் குறைந்தும், பிராணனில் பின்னும் குறைந்தும் காணப்படும்; ஆதர்சத்தின் ஒளியை அளவிடுமிடத்து அறிவுத் தலத்தில் பிரதிஷ்டை பெறின் நிறையொளியையும், சித்தத்தில் சிறிது குறைந்தும், பிராணனில் மங்கியும் இலங்கும். ஓர் ஆதர்சத்தைப் புத்தி, சித்தம், பிராணன் முதலிய மூன்றினும் ஒழுங்குற நிலைக்க வைத்தவர்கள் ஓரிருவரேயாம். இதை முன்னிட்டே ஆதர்ச வாழ்க்கையினர்களில் ஒரு சிலர் ஒளியிற் சிறந்தும், ஒரு சிலர் வலியிற் சிறந்தும், ஒரு சிலர் எழிலின்பத்திற் சிறந்தும் காணப்படுகிறார்கள். ஒளி வலி யின்பங்களில் சம அளவிற் சிறந்து காணப்படும் மகனீயர்கள் தற்கால பாரதத்தில் இல்லையென்று கூறல் உண்மையாகும்.

ஆதர்சவாழ்க்கையினர்களை இரண்டு கூறுகளாக வகுக்கலாம். ஒரு சாரார் அறவின்ப நாட்டத்தினர்; மற்றொரு சாரார் எழிலின்ப நாட்டத்தினர். உதாரணமாகக் காந்தியடிகள் அறவின்ப வாழ்க்கையில் நாட்டமுடையோர்; மகா கவி இரவீந்திரர் எழிலின்ப வாழ்க்கையில் நாட்டமுடையோர்; ஒன்று Moral side of Nature இன் இயக்கம்; மற்றொன்று Æsthetic side of Nature இன் இயக்கம். இதை எளிதில் அறியலாம். இவை இரண்டினும் சம வளர்ச்சிப் பெருக்க முடையார்களை வாழ்க்கையில் காணலரிது.

ஆதர்ச வாழ்க்கையினர்கள் ஆதர்சத்தைப் பகவானாகக் கொள்பவர்கள்; "தன் முயற்சி" என்பதில் நம்பிக்கைகொண்டவர்கள்.

ஆதர்சம் பகவானின் தோற்றமென்பதுண்மையே—ஏனெனின் அனைத்தும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் தோற்றங்கள். ஆயினும் ஸ்வயம் பகவான் வேறு.

ஸ்வயம் பகவானை வழிபடுபவர்களே அத்யாத்ம வாழ்க்கையினர்களாம். செயலில் "தன் முயற்சி" யற்றுப் பகவானின் திருவுள்ளத்தில் ஈடுபட்டு அவ்வுள்ளத்தின் சக்தியின் கருவியாக மாறி நிற்பவர்களே அத்யாத்ம வாழ்க்கையினர்கள் எனப்படுவோர்கள்—

"सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं  ज ।"

என்பது கண்ணன் வாக்கு.

இங்கு "ஸர்வ தர்மங்கள்" என்பதில் ஜாதி தர்மம், குல தர்மம், தேசத்தை ஒட்டிய தர்மங்கள், பொதுஜன தர்மம், ஜன சமூக தர்மம், பரோபகார தர்மம் முதலியனவும் மற்றும் பலவும் அடங்கும். தர்மத்தைக் கைவிடுவதெனில் அதர்மத்தைக் கைப்பற்றுவதென்பது பொருளல்ல. "मामेकं शरणं व्रज." நமது ஸ்வபாவத்திற் கேற்ற ஸ்வதர்மத்தை இறைவன் காட்டிக் கொடுக்கவல்லார். இது அனுபவத்தில் கண்ட உண்மை. ஸர்வ தர்மத்தையும் விட்டுப்பகவானை ஆட்கொள்ளல் என்பது அரிய செயல்களைத்திலும் அரிது. உதாரணமாக, காந்திவள்ளல் தன்னுடைய "அஹிம்சா தர்மத்தைக்" கைவிட்டுவிட்டுப் பகவானிடம் அடைக்கலம் புகவல்லாரானென்பதை யோசிக்கவும். பகவத் தன்மை முற்றிலும் அஹிம்சையில் அடங்கும் என்று நினைப்பவர் காந்தியடிகள்; அஹிம்சா தர்மம் எனப்படுவது பகவானின் பல—எண்ணிறந்த—ஆதர்சத்தோற்றங்களில் ஒன்றே என நினைப்பவர்கள் அத்யாத்மிக வாழ்க்கையினர்கள். ஆதர்ச வாழ்க்கையினர்கள் தாங்களாகவே ஆதர்சத்தைத் தேர்ந்து அறிந்து கைக் கொள்கிறார்கள்; வாழ்க்கை யறத்திற்கு வழிகாட்டிக்கொடுக்கும்படிக்கும், தங்களை அவனிச்சைப்படி நடத்திக்கொள்ளும்படிக்கும் அத்யாத்மிக வாழ்க்கையினர்கள் பரம்பொருளாகிய உண்மைப் பொருளிடம்—ஸ்ரீகிருஷ்ணனிடம்—அடைக்கலம் புகுகிறார்கள். இதுவே இவ்விரண்டு வகை வாழ்க்கைக்குமுள்ள வித்தியாசம். பரமேச்வரன் நம்மை அஹிம்சையின் பொருட்டும் ஆட்டி வைக்கலாம்—ஒன்றுஞ் செய்யாதிருக்கும்படியாகவும் கட்டளையிடலாம்; அனைத்தின் பொறுப்பும் அவனது. இது பொதுமக்கள் பொருட்டு சொல்லப்பட்டதன்று; அனைவர் பொருட்டுஞ் சொல்லப்பட்டதென்று இந்த உத்தம இரகசியத்தை உலகில் ஒரு சிலரே—ஓரிருவரே—முனைந்து உண்மையில் கையாடவல்லார்கள். ஏனையர், உளத்தில் உதித்தவையனைத்தையும் ஸ்ரீ கிருஷ்ணனின் கட்டளையென நினைப்பவர்களேயாம். நாம் ஸ்ரீ கிருஷ்ணனை வழி படுவதுமட்டிலும் இதற்கு போதாது—நம்மை ஸ்ரீ கிருஷ்ணனும் கருணைகூர்ந்து ஆட்கொள்ளல் அவசியம்—ஸர்வதர்ம பரித்யாஜ்ஞமே இதற்கு வழி—"நான்ய: பந்தா அயநாய வித்யதே."

புறவாழ்க்கையினர்களில் அநேகர் பற் பல சமயங்களில் ஆதர்ச வாழ்க்கையினால் வலிந்து இழுக்கப் படுவதுண்டு; இன்னொருவர் வாழும் அகவாழ்க்கையைக் கண்டு மோகிப்பவர்களின் தொகை வெகு அதிகம். மோகத்தினாற் புறவாழ்க்கையைத் துறந்து அகவாழ்க்கையை எட்ட முடியாது அல்லாடுபவர்கள் பலர். ஒரு சிலர் உண்மையில் அகவாழ்க்கை ஒளியை ஸ்வயமாகப் பெறுகிறார்கள். இவர்கள் மற்றவர்களின் அகவாழ்க்கையைக் கண்டு அதன் மகிமையினால் தூண்டப்பட்டதனால் மட்டிலும் அகவாழ்க்கையைத் தொடங்கியவர்களன்று; தங்களகத்துள் கிளறுண்டு ஒளிபெற்றதன் பயனாக அகவாழ்க்கையைத் தொடங்கியவர்களே அதில் நீடித்து வாழவல்லார்கள். மற்வர்களைப் பார்த்துத் தொடங்குவதைக் காட்டிலும் உள்ளத்திற் திறப்பு ஏற்பட்டு அதன் பயனாக அகவாழ்க்கையைத் தொடங்குபவர்களே சிறந்த அகவாழ்க்கையினர்கள். இன்னு மொருமுறை சொல்லுமிடத்து அகவாழ்க்கை செல்வத்தின் பொருட்டன்று—புகழின் பொருட்டன்று—வெளிப்பகட்டின் பொருட்டன்று; அது உளத்தூண்டலின் பொருட்டும், அதன் தற்பூர்த்தியின் பொருட்டும், அத்தற்பூர்த்தியினால் உண்டாகும் ஒளிரும் வன்களியின் பொருட்டுமேயாம்.

ஆதர்சவாழ்க்கையினின்று அத்யாத்மிக வாழ்க்கையைக் கைப்பற்றுபவர்களின் தொகை வெகுசிறிது. புறவாழ்க்கையினன் ஆதர்சவாழ்க்கையின் பொருட்டு குடும்பம், செல்வம், புகழ் முதலியவைகளில் உள்ள பற்றுகளை நீக்க எவ்வ

ளவு சிரமப்படுகிறானோ அதைவிட ஆதர்சவாழ்க்கையினன் தன் ஆதர்சத்தைக் கைவிட்டுவிட்டுக் கண்ணனைப்பகவானெனக் கைப்பற்றப் பலமடங்கு சிரமப்படுவான். செல்வத்தைத் துறப்பதைக் காட்டிலும் ஒருவன் தான் கொண்டுள்ள ஆதர்சத்தைக்கைவிடல் அரிது. ஆதர்சத்தில் உண்மைப்பற்று ஏற ஏற புறவாழ்க்கையை விட்டு நீங்கல் எளிதாகும்; அவ்வாறே கண்ணன் அநுபவமும் அநுக்கிரகமும் அதிகரிக்க அதிகரிக்க ஆதர்சத்தில் உள்ள காதலை விட்டகல அவ்வளவு சிரமமிராது.

அர்ஜுனன் க்ஷத்திரிய ஆதர்சத்தைக்கைக்கொண்டவன்—க்ஷத்திரியன். உச்சியுள்ளே நிற்கும் தேவ தேவனாகிய கண்ணபிரான் அர்ஜுனனை அத்யாத்மிக வாழ்க்கையின் பொருட்டு ஸர்வதர்மத்தையும்—க்ஷத்திரிய தர்மம் உள்பட—பரித்தியாகம் செய்துவிட்டு "என் ஒருவனிடமே அடைக்கலம் புகு'! என்று சொல்லி அவனுக்கு,

"अहं त्वां सर्व पापेभ्यो मोक्षयिष्यामि माशुचः"

என்னும் உறுதி மந்திரத்தை மொழிந்தார். ஸர்வதர்மங்களின் இறுதியற்ற ஓயாசலனங்களின்று அகத்தை நீக்கி அதன் உறுதியால் கைப்பற்றிய பிறகு அவர் ஆக்ஞைப்படி நிறைவேற்றப் பட்ட க்ஷத்திரிய தர்மமானது பரிபக்குவமானது. தெய்வதம் நிரம்பியது. கண்ணனுடைய கட்டளையைப் பெறுவதற்கு முன் அர்ஜுனன் க்ஷத்திரிய தர்மமாகிய ஆதர்சத்தை இராஜஸீக ஸ்வபாவம் ஒன்றாலேயே நிறைவேற்றியிருக்க முடியும். கண்ணனிடம் சரணம் புகுந்து அவர் காட்டிய வழிப்படி நடப்பது அத்யாத்மிக வாழ்க்கை முறை.

நிகழ்காலப் பாரதநாட்டுப் பொதுமக்கள் ஜாதிவகுப்பிற் கொண்டுள்ள பற்று தாமஸிகஸ்வபாவத்தால் புறவாழ்க்கையின்று உதித்துளது; ஆகவே இவர்கள் புறவாழ்க்கையினர்கள். பழம் பாரதத்துக் கர்ணன் ஸாத்விக ஸ்வபாவத்தால் ஈகையறத்தை முற்றிலும் கைக்கொண்டு ஆதர்ச வாழ்க்கையை நடத்தியவன். பார்த்தன் த்ரிகுணாதீதமாகிய அத்யாத்மிக வாழ்க்கையினன். இவை மூன்றும் மூவகை வாழ்க்கைக்கு உதாரணங்கள்.

# பர்வதகுமாரி.

(372-ம் பக்கத் தொடர்ச்சி.)

(ஸ்ரீமான் மகேச குமார சர்மா எழுதியது).

(ஐந்தாம் அத்தியாம்).

## பர்வதத்தின்மேல்.

பிரதிபை பர்வதத்தின்மேல் ஏறஏறக் களைப்படைந்து இரண்டொரு தடவை மறுபடியும் உட்கார்ந்து சிறிது இளைப்பாறி மீண்டும் நடக்கத் தொடங்கி, இவ்வாறு ஒரு சிகரத்துக்குப்பின் இன்னொரு சிகரமாகத் தாண்டிக் கடைசியில் அதிக கஷ்டத்தோடு பர்வதத்தின் உச்சியிலுள்ள சமதரையான பூமியை அடைந்தாள். அங்கே போய் அவ்விடத்தினின்று பார்க்கும்போது மலைக்குச் சமீபத்திலுள்ள வனங்கள், நதிகள், கிராமங்கள் முதலியவை சிறுதும் புலப்படவில்லை. கேவலம் வெகு தூரத்தில் சிறியவைவயும் பெரியவையுமான அநேக மலைகளும் மேக மாலையைப்போன்ற வெகு தூரத்திலுள்ள மலைத்தொடர்களும் தென்படுகின்றன. இதுவன்றி நாற்புறத்தும் நீலக்கோடுபோல் அடிவானமும் அஸ்பஷ்டமாகத் தெரிந்துகொண்டிருக்கிறது. அந்தச் சமதரையான



பூமியில் அடர்ந்த காடுகள் இல்லை; ஆனால் அங்கு சிற்சில இடங்கள் மிகச் சுத்தமாயும் நிர்மலமாயும் நெடிய புற்கள் சூழ்ப்பெற்றும் இருக்கின்றன. அதன் நடுவில் ஒரு சிறிய பொய்கை இருக்கிறது. அப்பொய்கையின் நீர் மிக நிர்மலமாயும் மலர்ந்த தாமரைகளால் சோபிதமாயும் இருக்கிறது. நானாவிதமான நீர்வாழ் பறவைகள் அதில் விளையாடிக்கொண்டும் தம் தீங்குரலொலியால் வாயுமண்டலத்தை நிறைத்துக்கொண்டும் இருக்கின்றன. அந்த நிர்ஜனஸ்தானத்தில் இவ்விதமான ஜீவன்களைப் பார்த்துப் பிரதிபைக்கு அதிக ஆச்சரியமுண்டாயிற்று. இந்தப் பிரதேசம் ஜனங்கள் நிறைந்ததென்றும் இப்பொழுதுகூட இவ்விடத்தில் ரிஷிகளும் முனிவர்களும் நிவாசம் செய்கிறார்களென்றும் அவளுக்குத் தோற்றியது. அதனால் அவள் அதிக ஆவலோடே—"அண்ணா! இங்கிருந்து ரிஷிகுகைகள் எவ்வளவுதூரம்?" என்று கேட்டாள். அதற்கு சுசீலகுமாரன்—"பொய்கைக்கு வடபாரிசத்தில் பெரிய பெரிய விருக்ஷங்களால் சூழப்பட்டுள்ள பர்வத சிகரம் காணப்படுகிறதே அதில்தான் ரிஷி குகைகள் இருக்கின்றன" என்றான். அதன் பிறகு பிரதிபைத் தன் தமையனுடன் மேற்சொல்லிய பிரதேசத்திற்குச் சென்று, அங்கே பெரிய பெரிய விருக்ஷங்கள் அடர்ந்திருப்பதையும், அவற்றின் கிளைகள் காய்கனி மலர்களின் பாரத்தினால் தாழ்ந்து தலை வணங்கியிருப்பதையும், அடியிலுள்ள தரை சுத்தமாயும் நிழலாற் குளிர்ந்தும் இருப்பதையும் கண்டாள். ஒரு பக்கத்தில் கருங்கற்கள் இயற்கையாகவே படிகளாய் அமைந்திருக்கின்றன. அவற்றின் மேல் அந்தச் சிகரத்திற்கு அனுபசமாய் ஏறிச் செல்லலாம். அந்தச் சிகரம் ஓர் அகன்ற அகண்டமான கருங்கல்லினால் அமைந்துள்ளது. அக்கல்லில்தான் சிறு சிறு குகைகள் தோண்டப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு குகைக்கும் ஒவ்வொரு கதவு இருக்கிறது. அதுவும் கல்லாலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. அவற்றின் கூறைகள் அதிக உயரமல்லாதிருந்தும், அவற்றுள் நெடிய சரீரமுள்ள ஒருவன் கஷ்டமின்றி நடமாடக்கூடும். குகைகளின் விஸ்தாரம் இரண்டு மூன்று மனிதர்கள் வசிப்பதற்குத் தகுதியாயிருந்தது. பிரதிபை ஆச்சரியத்துடன் அக்குகைகளுக்குள் பிரவேசிக்கத் தொடங்கினாள். ஆனால் எந்தக் குகையிலும் அவளுக்கு ஒரு மனிதனது உருவங்கூடத் தென்படவில்லை. அவளது உடல் சிலிர்த்தது. குகையில் உட்கார்ந்துகொண்டு பார்த்தால் பொய்கையின் அபூர்வமான அழகிய காட்சி நன்றாகத் தெரிந்தது; ஆனால் அங்கிருந்து பூமண்டலத்தின் எந்த வஸ்துவும் புலப்படவில்லை. சந்தடி நிறைந்த பூலோகத்தை மறதியென்னும் ஆழங்காண முடியாத கடலில் அமிழ்த்திவிட்டுச் சித்தத்தைச் சாந்தமான சமாதியில் நிறுத்துவதற்கு இத்தகைய அழகிய பிரதேசம் வேறொன்றைக் காண்பது அரிதினும் அரிது. பிரதிபை யோசிக்கலாயினாள்—"இந்த இடத்தில் எத்தனை தவசிகள் தவம்புரிந்துசித்தியடைந்திருப்பார்களோ! அவர்களின் பவித்திரமான சக்தி இன்றுவரையிலும் இந்தப் பிரதேசத்தில் வியாபித்திருக்கிறதுபோலும்; இவ்விடத்தில் வீசும் காற்று இப்பொழுதும் அவர்களின் ஸோ'ஹம் மந்திரோச் சாரணத்தின் நாதத்தினால் சப்தித்துக்கொண்டிருப்பதுபோலும் தோற்றுகிறது." பிரதிபை ஒரு குகைக்குள் நுழைந்து கீழேயுள்ள அருவியின் இரமணீயமான சோபையைப் பார்க்கலாயினாள். அருவியின் நாற்புறங்களிலும் விருக்ஷங்கள் வரிசை வரிசையாய் வளர்ந்திருந்தன. ஓரிடத்தில் கதலி வனம்; மற்றோரிடத்தில் உள்ளத்தைக் கொள்ளைக் கொள்ளும் உபவனம்; பிரிதோரிடத்தில் பூப்பூத்த

பாதபங்களின் பந்தி. பிரதிபை சிறிதுநேரம் மௌனமாயிருந்து பிறகு தமையனை நோக்கி—"அண்ணா, இப்பொழுதே சம்சாரத்தை விட்டு இவ்விடத்தில் வசித்திருக்கவேண்டுமென்று இச்சை உண்டாகிறது. இந்தக் குகைகளில் வாசம் செய்துகொண்டு, இந்தப் பொய்கையின் நிர்மலமான ஜலத்தைப் பானம் செய்து, இங்கே எளிதில் கிடைக்கும் கந்தமூலங்களையும் புசித்துக்கொண்டு மிகுந்த வாழ்நாளைக் கழிக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. சம்சாரத்தின் சாரமற்ற கோலாஹலத்தில் இன்னும் மூழ்கியிருக்க இப்பொழுது இச்சையுண்டாகவில்லை. செல்வம், சுற்றம், மானம், மரியாதை இவைகளால் நாம் என்ன அடையப்போகிறோம்; இவையெல்லாம் நமக்கு அமிர்தத்துவப் பேற்றை அடைவிப்பதில் ஏதேனும் சகாயம் செய்யப்போகின்றனவா? சம்சாரமெல்லாம் நாலுநாளைய வாழ்வுதானே? பிறகு எங்கே செல்லவேண்டிவருமோ யாருக்குத் தெரியும்? அப்படியிருக்க, இந்த நிலையற்ற வாழ்க்கையை அறநெறியில் செலுத்த முயல்வது நமது கடமையல்லவா?" என்றாள்.

சுசீலகுமாரன் கூறலுற்றான்—"பிரதிபா, நீ சொல்வது சரியே; ஆனால் சம்சாரத்தைத் துறந்து இந்தக் குகைகளில் செயலற்று உட்கார்ந்திருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. எனக்குத் தோற்றுவதென்னவென்றால், சம்சாரம் சாரமற்ற கோலாஹல மயமானதென்பது உண்மையே; ஆனால் இந்த மனோஹரமான பிரதேசத்தை அமைத்த பிரகிருதியே இந்த சம்சாரத்தையும் உண்டாக்கி யிருக்கிறாள். சிறிது ஆராய்ந்து பார்; இந்த சாரமற்ற சம்சாரத்தைச் சுவர்க்க துல்லியமாகச் செய்யும்பொருட்டே இன்றுவரையில் எத்தனை மஹான்கள் ஜன்மமெடுத்திருக்கிறார்கள்? அவர்கள் இந்த ஜகத்தின் க்ஷேமத்தின் பொருட்டுத் தங்கள் உயிரைக்கூட லக்ஷியம் பண்ணாமல் தத்தம் செய்து போயிருக்கிறார்கள். நான்மாத்திரம் தனியாக நாவுக்குச் சுவையான உணவுகளைப் புசிக்க வேணும், நீ எப்பொழுதும் அறைவயிற்றுக் கஞ்சிக்குக்கூட வழியில்லாமல் அலையவேணும் என்றிருப்பது நல்ல காரியமா? எனக்கு எது நல்லதென்று தோற்றுகிறதோ அதை உனக்கும் பங்கிட்டுக் கொடுக்கிறேன். நான் அவ்வப்பொழுது இந்த ஸ்தானத்திற்கு வந்து அனுபவிக்கும் ஆனந்தத்தை உனக்கும் பங்கிட்டுக் கொடாமல் தரித்திருக்க என்னாலாகாது. மானுடவியற்கையே இப்படி இருக்கிறது; ஆனால் நாம் அற்ப மனிதராயிருக்கிறோம்; நமது ஜகத்தும் நம்மைப்போலவே குறுகியதாயிருக்கிறது. நாம் கேவலம் நமது அண்ணன் தம்பிமாரையும் பந்துமித்திரர்களையும் மாத்திரம் நம்மவர்களென்று கருதி அவர்களின் சுகத்திற்காகவும் நன்மைக்காகவும் உடல் பொருளாவிகளால் உழைத்து வருகிறோம். ஆனால் மஹான்களாயும் விசால இருதயமுள்ளவர்களாயும் இருப்பவர் இந்தக் குறுகிய பிரதேசத்தின் எல்லையைக் கடந்து, "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற முதுமொழியைக் கடைப்பிடித்து உலகனைத்தையும் தமதாகக்கருதி சர்வ ஜனங்களினதும் க்ஷேமத்தின் பொருட்டுத் தம் உயிரையும் பொருட்படுத்தாது உழைக்கின்றனர். பூர்வகாலத்தில் ரிஷிகள் இவ்வாறே செய்து கொண்டிருந்தனர். அவர்கள் நிர்ஜனமான வனங்களில் தவம் புரிந்து பெற்ற அரிய தத்துவ ஞானத்தைப் பிரசாரஞ் செய்வதற்காகக் கிராமங்களுக்கும் நகரங்களுக்குங்கூடப் போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் எல்லாவற்றிற்கும் முன்னர் தமது உத்தம புருஷார்த்தத்தைச் சாதித்துக்கொண்டு, பின்னர் லோகஹிதத்தின் பொருட்டு வாழ்நாளைச் சமர்ப்பித்தனர்—ஜடபாதனைப்போல் செயலற்று விழுந்து



கிடக்கவில்லை. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்றபடி அவர்கள் உண்மையாக உழைக்கும் கர்மவீரராயிருந்தனர். ஆரிய ஜாதியில் இக்காலத்திலும் மிச்சமாயிருக்கும் உயர்வும் தூய்மையும் அம்மஹானுபாவர்களின் கர்மயோகப் பயனேயாம். இப்பொழுதோ அந்தத் தவமும் இல்லை; அந்தக் கர்மவீரத்துவமுமில்லை; அத்தன்னலமறுப்புமில்லை; ஆதலாலன்றோ நாம் இந்த அதோகதியை அடைந்திருக்கின்றோம்."

இவ்வாறு பேசிவிட்டு சுசீலகுமாரன் சிறிது நேரம் சும்மா இருந்து மீண்டும் பின்வருமாறு மொழியலுற்றான்—"பிரதிபா, உலகத்தைத் துறப்பது அவசியமென்று எனக்குத் தோற்றவில்லை. அதோடுகூடச் சம்சாரத்தின் சாரமற்ற கோலாஹலத்தில் மூழ்கி நம்முடைய லட்சியத்தினின்று பிறழ்வதும் உசிதமென்று நான் கருதவில்லை. ஏனெனில் ஆத்மசிந்தை செய்வதும், இடையிடையே நிர்ஜனமானதொரு ஸ்தானத்தை யடைந்து தவம் புரிவதும் நமக்கு மிக்க நன்மை பயப்பதேயாகும். இருதயத்தில் வெறுப்பும் விரசத்தன்மையும் உண்டாகும் அந்தக் கணமே பிரகிருதியின் ஏகாந்தமான மடியில் சிறிதுகாலம்வரையில் அமர்ந்து வாழவேண்டும். அப்படிச் செய்வதனால் தென்பும் திகழ்ச்சியும் உண்டாகும்; நிர்ஜீவமான தேகத்தில் நவஜீவ களை வரும்; நவசக்தி தோன்றும்; இருதயத்தில் நவீன பலமும் நவீன உற்சாகமும் தலைகாட்டும். மலைவீழருவியின் அந்த ஓய்ச்சலில்லாத நீர் வீழ்ச்சியில் கர்மயோகத்தின் எவ்வளவு அழகிய திருஷ்டாந்தத்தை நீ கண்ணுற்றாய்! ஆனால் அந்த ஓய்ச்சலில்லாத நீர்வீழ்ச்சிக்கு மூலம் எங்கே இருக்கிறதென்பதைப்பற்றி நீ யோசித்தாயா? அதன் மூலம் இந்தப் பொய்கையேயாம். இதோ பார்; இந்த நிர்ஜனமான பர்வத சிகரத்தில் இந்தப் பொய்கை தன் விசாலமான மார்பகத்தே மழைநீரைப் பிரயத்தின பூர்வகமாகச் சேகரித்துவைத்துப் பிறகு பர்வதத்தின் அடியிலுள்ள முகத்தின் வாயிலாக அச்சேகரித்த ஜலத்தை ஓய்ச்சலில்லா நீர்த்தாரையாக வீழ்த்திக்கொண்டிருக்கும் விதத்தை. அந்த நீரைப் பருகி எத்தனை ஜீவன்கள் விடாய் தீர்த்துக்கொள்ளுகின்றனவோ, அதில் நீராடி எத்தனை சந்தாபமுற்ற சரீரங்கள் குளிர்ச்சியடைகின்றனவோ, அந்த நீர்ப்பாய்ச்சலினால் எத்தனை பிரதேசங்கள் பசுமையாகி வளமாகிச் செழித்து இந்திரனது நந்தன வனம்போல் விளங்குகின்றனவோ யாரே விளம்பவல்லார்? மனிதனது கர்மயோகமும் இப்படியே இருத்தல்வேண்டும். அதாவது, ஏகாந்தத்தில் தவம் புரிந்து வாழ்க்கையைப் புனிதமாக்கிக்கொண்டு, பிறகு பர்வதத்தின் அடிவாரத்துள்ள அருவியைப்போல் தர்ம க்ஷேத்திரத்தில்—வினைக்களத்தில்—இறங்கி லோகஹிதமான காரியங்களைச் செய்வதில் தற்பரனாக இருக்கவேண்டும். பிரதிபா, சம்சாரம் துறக்கத்தக்கதன்று. இந்தப் பொய்கையையும் அருவியையும் போலவே மானுட வாழ்க்கையும் அமைந்து ஒழுங்காய் நடைபெறவேண்டுமென்று என்புல்லறிவிற் தோற்றுகின்றது."

தமையனது உபதேசத்தைக் கேட்கக் கேட்கப் பிரதிபையின் சித்தம் ஆனந்தத்தால் பூரித்துப்போயிற்று. ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் அவளது மனத்தில் ஏதோ ஒரு விஷயத்தின் சிந்தை எழவும் அதனால் அவளது மலர்ந்த முகம் வாடிப்போயிற்று.

பிரதிபை சிந்தையில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு சுசீலகுமாரன் "பிரதிபா, நேரம் அதிகமாய்விட்டது. இனி அகத்துக்குப் போகவேண்டும், புறப்படு. இந்த உன்னத சிகரத்திலிருந்து இப்பொழுது இறங்கிப்போவோம்," என்று சொல்லிப் புறப்பட்டான். பிரதிபையும் ஒன்றும் பேசாமல் அவன் பின்னாலேயே நடந்து சென்றாள்.

(தொடரும்.)

# மேனாட்டில் சிசுசம்ரக்ஷணை.

(353-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஸ்ரீமான் எஸ். ஆர். வேங்கடரமணய்யர், B.A.

அமெரிக்கா தேசத்து அரசாங்கத்தார் குழந்தைகளின் முன்னேற்றத்தைக் கருதி மிக்க ஆராய்ச்சிசெய்து புதிய முறைகளைக்கொண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காக அதிக உற்சாகத்தைக் காட்டி வருகிறார்கள். குழந்தைகளின் நன்மையைத் தேடுவதில் அவர்கள் ஏராளமான திரவியத்தைச் செலவழித்து வருகிறார்கள். இந்தக் காரணத்தைக் கொண்டே வாஷிங்டன் என்னும் நகரத்தில் குழந்தைகளின் நன்மையை நாடி ஒரு சங்கத்தை ஸ்தாபித்திருக்கின்றனர். அச்சங்கத்தின் வேலை என்னவென்றால் குழந்தைகளின் க்ஷேமத்தைப் பற்றிய எல்லா விஷயங்களையும் நன்கு விசாரித்து அரசாங்கத்தார் அதற்கென்று நியமித்துள்ள இலாகா தலைவருக்குத் தெரியப்படுத்தவேண்டியது. மேலும் சிசுமரித்தல், ஜனனவிகிதம், அனாதைகள், சிறுவர்களின் நியாய ஸ்தலங்கள், வீட்டைவிட்டு ஓடுதல், அபாயகரமான வேலையைச் செய்வது, சாதாரண விபத்துக்கள், குழந்தைகளை வருத்தும் வியாதிகள், தொழில் வசதிகள், குழந்தையைப் பற்றிய சட்டங்கள், இவைகளைப் பற்றியவைகளை எல்லாம் நன்கு விசாரிக்கவேண்டியது இச்சங்கத்தின் கடமைகளாகும். சுருங்கச் சொல்லின் குழந்தைகளின் சுகத்தை நாட என்னென்ன செய்யவேண்டுமோ அவையாவும் செய்வது இச்சங்கத்தின் பொறுப்பாகும்.

இவ்விதமாக விஷயங்களை விசாரித்து வந்ததன் பலனாக சில முக்கியமான விஷயங்களை யறியலாயிற்று. அவை யென்னவெனில், சிறு வயதில் குழந்தைகளின் வாழ்நாள் யாவும் வீணாவதற்குக் காரணம் தாய்மார்களுக்குக் குழந்தையை எப்படிப் போஷிப்பது என்ற விஷயமும், குழந்தைகளுக்குத் தாய்மார் செய்யவேண்டிய கடமைகளும் தெரியாமலிருப்பது தான் பெண்களிடத்தில் இம்மாதிரியான அஞ்ஞானம்தான் சிசுக்கள் சிறு வயதில் அதிகமாக மரித்துப் போவதற்கு முக்கிய காரணம். இக்குறைகளை யெல்லாம் நீக்குவதற்காக இச்சங்கம் பல விஷயங்களிலும் உழைத்து வருகிறது. சிசுசம்ரக்ஷணைக் கண்காட்சி சபைகளுக்கு வேண்டிய காட்சிப் படங்களைத் தயாரித்துச் சிசுசம்ரக்ஷணையைப்பற்றிய விவரங்களை அச்சடித்து ஜனங்களுக்குக் கொடுத்தும் கண்காட்சி சபைக்கு வரும் தாய்மார்களுக்கு விஷயங்களை நன்கு எடுத்துச் சொல்லியும் வருகின்றது. இதற்கென்றே பிரத்தியேகமான உபன்னியாசகர்களை நியமித்திருக்கிறார்கள். இவர்கள் குழந்தைகளின் சுகத்தையும் சௌக்கியத்தையும் கோரி அநேகம் ஆயிரம் பிரசுரங்களைப் பிரசுரித்து உதவி வருகின்றனர். ஒவ்வோர் சமயத்தில் குழந்தைகளின் போஷணையைப்பற்றி வாரம் வாரம் துண்டுப் பத்திரிகைகளை அச்சடித்து எல்லாருக்கும் கொடுக்கின்றனர். குழந்தைகளின் க்ஷேமத்தை நாடிய தாய்மார் அநேகம் பேர் வேறு விதத்தால் அடையக்கூடாத அனுகூலங்களையும் இதன் மூலமாய் அடைய ஏதுவாகின்றது. சாதாரணமாய் அத்துண்டுப் பத்திரிகைகள் குழந்தைகள் விஷயத்தில் தாய்மார்கள் கவனிக்கவேண்டிய ஆகார விஷயத்தைப் பற்றியும் ஆரோக்கியத்



தைப்பற்றியும் அதிவிவரமாய் எடுத்துக்கூறும். குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுத்து ஜனங்கள் அனுசரித்து வந்த கெட்ட வழிகளைக் கண்டித்துக் குழந்தை பிறந்தது முதல் அதன் நான்காவது ஆண்டுவரை உணவு எவ்விதம் கொடுத்து வரவேண்டும் என்ற விஷயத்தையும் எடுத்துக் கூறும். குழந்தைகளுக்குத் தகுந்த ஆரோக்கியத்தைக் கொடுப்பதற்கு விளையாட்டும் சில நேரம் போக்குகளும் இன்றியமையாதன வென்று முன்னமேயே சொன்னோம். குழந்தைகளின் க்ஷேமத்தைக் கோரும் ஒவ்வொரு இயக்கமும் நேரப் போக்குகளுக்குத் தகுந்த இடம் கொடாவிடில் அம்மட்டில் அவ்வியக்கம் குறைவுள்ளதாகும். சில நாளைக்கு முன் இவ்விஷயமாக அதிக ஊக்கங் கொண்டு இச்சங்கமானது குழந்தைகள் விளையாடுவதற்கான புதிய மைதானங்களையும் விளையாட்டிடங்களையும் ஏற்படுத்திக்கொடுத்தது. கிராமாந்திரங்களிலும் கூட பள்ளிக்கூடத்தைச் சுற்றியுள்ள மைதானங்களில் விளையாட்டிற்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திற்று.

இச்சங்கத்தின் வேறு சில முக்கியமான நடவடிக்கைகளைப் பற்றிக் கவனிப்போம். இச்சங்கமானது நாட்டில் ஆங்காங்கு ஒவ்வொரு காலத்தில் மகா நாடுகளைக் கூட்டுகிறது. இம்மகாநாடுகளுக்குப் பெற்றோர்கள் அழைக்கப்படுகின்றனர். அவர்கள் வந்து தங்களது குழந்தைகளை அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட வைத்திய நிபுணர்களைக் கொண்டு பரீக்ஷை செய்து கொள்ளலாம். அவ்வைத்திய நிபுணர்கள் குழந்தைகளை நன்கு பரிசோதித்துக் குழந்தைகளுக்குள்ள குறைகளை எடுத்துச் சொல்லி அக்குறைகளைத்தீர்க்க ஏற்ற மருந்தையும் ஆகாரத்தையும் சொல்லுவதன்றி, பெற்றோர்களிடத்துக் குழந்தைகளின் க்ஷேமத்தைப் பற்றிய பல விஷயங்களைப்பற்றியும் சம்பாஷிக்கிறார்கள்.

இச்சங்கத்தால் கூட்டப்படும் மகாநாடுகளில் ஒரு முக்கியமான அம்சம் என்னவெனில் குழந்தைகளை வளர்ப்பதில் தாய்மார்கள் தங்களது கடமைகளை எவ்வாறு குறைத்துக் கொள்ளலாம் என்பதை எடுத்துக் காட்டும் பல வித காட்சிகளுண்டு. சாதாரணமாகக் குழந்தைகளைக் குளிப்பாட்ட உபயோகிக்கும் கருவியும் (apparatus) குழைந்தைகளுக்கு உணவு தயார் செய்வதில் உபயோகப்படுத்தும் கருவிகளும் இக்கண்காட்சி சபையில் வைக்கப்பட்டிருக்கின்றன. குழந்தைகளுக்கு ஏற்ற உடுப்பு, படுக்கை, என்பவைபோன்ற விஷயங்களைக் காட்சி சபையில் ஏற்ற கருவிகளைக் கொண்டு ஜனங்களுக்கு எடுத்துப் போதித்து வருகின்றனர்.

அமெரிக்கர்களுடைய சாமர்த்தியத்தையும் திறமையையும் சுகத்தையும் இச்சங்கமானது ஆயிரம் விதங்களில் அபிவிருத்தி செய்து வருகின்றது. குழ்ந்தைகள் மரண விகிதத்தைப் பல விதத்திலும் குறைத்து வருகிறது. வியாதிகளைப் பறவவொட்டாமல் ஜனங்களுக்கு நேரும் துன்பங்களைத் தீர்த்து வருகிறது. இதனால் தேசத்திற்குப் பல விதத்திலும் நன்மை ஏற்பட்டு வருகிறது என்பதில் ஐயமில்லை.

ஆகவே ஒரு தேசத்தில் வசிக்கும் குழந்தைகளின் க்ஷேமத்தையும் நலத்தையும் தாய்மாரும் பொது ஜனங்களும் அரசாங்கத்தாரும் ஒருவரோடொருவர் சேர்ந்துழைத்து நாடுவது மிக்க அவசியமென்று இதனால் நன்கு புலப்படுகிறது.

குழந்தைகளின் க்ஷேமத்தை நாடவேண்டின் அவர்களது குறைகளை ஆராய்ந்து அறிய வேண்டுவது மிக்க அவசியம். அங்ஙனம் ஆராய்ந்தறிந்த குறைகளுக்குத் தக்க பரிகாரங்

களையும் தேடவேண்டுவதும் மிக்க அவசியம். இக்காரணத்தைக் கொண்டே அயோவா (Iowa Illionois) என்ற நகரத்தில் சிசு க்ஷேமபரிசோதனை மண்டலம் (The Child Welfare Research Institute) என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்திருக்கின்றனர். இதற்கென்று வருஷத்தில் ரூ. 75,000 செலவழிக்கின்றனர். இம்மண்டலத்தின் அலுவல்கள் என்னவென்று கவனிப்போம். நூதனசாஸ்திர முறைகளைக் கொண்டு குழந்தைகளின் குறைகளை நன்கு பரிசோதித்து அதற்கு வேண்டிய பரிகாரம் செய்வது; அங்ஙனம் ஆராய்ந்தடைந்த உண்மைகளை ஜனங்களுக்கு நன்கு அறிவித்தல்; இங்ஙனம் ஜனங்களுக்கு உபகாரமாயிருக்கும்படி அநேகம் மாணவர்களை இவ்விஷயத்தில் தேர்ச்சிபெறச் செய்து பிரசாரம் செய்யச் சொல்வது என்ற இவைபோன்ற வேலைகளைச்செய்து வருகின்றது மேற்கூறிய மண்டலம். இம்மண்டலத்தாருக்கு வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் அவ்விடத்தில் அமைந்திருக்கின்றன. படிக்கப் புத்தகசாலைகளும் பரிசோதனைக் கூடங்களும் (Research Laboratories), விஷயங்களைக் கேட்டறிந்து கொள்வதற்கு வித்வ சிரோன்மணிகளும் அந்நகரத்தில் உண்டு. இம்மண்டலமானது மற்றைய அநேக விஷயங்களைப்பற்றிப் பரிசோதனை செய்வதுடன் குழந்தைகளின் போஷணையைப் பற்றித் தீவிரமாய் ஆராய்ச்சி செய்து உழைத்து வருகிறது. பாலின் குணங்களை நன்கு அறிவதற்காக சீமைப்பெருச்சாளிகளுக்கும் (Guinnea Pigs), வெள்ளை எலிகளுக்கும் பால் கொடுத்துப் பரிசோதனை செய்து அங்ஙனம் அவர்கள் அறிந்த உண்மைகளை ஜனங்களுக்கு இலவசமாய் அச்சடித்துக் கொடுக்கின்றனர்.

இம்மாதிரிப் பரிசோதனைகளெல்லாம் புத்தகப் படிப்பைக் கொண்டு செய்வதல்ல. உள்ளதை உள்ளவாறே எடுத்துக்கொண்டு பரிசீலனைகளைச் செய்கின்றனர். உதாரணமாக அம்மண்டலத்திற்குச் சமீபத்திலிருக்கும் ஒரு சிறிய சமூகத்தை எடுத்துக்கொண்டு அதைப்பற்றிய விஷயங்கள் யாவையும் ஜனங்களைக் கொண்டு விசாரித்து அறிந்து அப்படியே குறித்துக் கொண்டு பிறகு பரிசோதனை செய்கின்றனர். முதன் முதலில் 5 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளைப் பரிசோதிக்கின்றனர். அவர்களுடைய தேகத்தின் ஸ்திதியைப்பற்றியும், மனப்பான்மையையும், குணம், நடத்தை, சகவாசம், அவர்களது இளமைப் பருவத்தின் நன்மையையும் பிரசவமாவதற்கு முன்னும் பிரசவம் ஆனபின்னும் தாயின் ஸ்திதியையும் நன்காராய்கின்றனர். இங்ஙனம் பரிசோதனை செய்வதால் ஒவ்வொரு குழந்தையின் வெவ்வேறான குணங்களுக்கும் நடத்தைக்கும் மனப்பான்மைக்கும் காரணம் சொல்லக்கூடும். குழந்தைகளுக்கு நல்ல நடத்தையும் வழக்கமும் பிடிபடுவதும், கெட்ட வழக்கங்கள் பிடிபடுவதும், குழந்தைகள் இளமைப் பருவத்தில் எங்ஙனம் வளர்க்கப்பட்டனர், எவ்வகை நண்பர்களோடு பழகினர், பெற்றோர் எப்படிக் குழந்தையை நடத்திவந்தனர், பெற்றோர்கள் எத்தன்மையவர் என்பவைகளைப் பொருத்திருக்கிறது. மேல் சொன்னவையாவும் நல்லவை யெனின் குழந்தையும் நன்னடக்கை யுளதாயிருக்கும். அவை கெட்டவை யெனின் குழந்தையும் கெட்ட குணங்களை உடைத்தாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நம்மிந்திய நாட்டுக் குழந்தைகளின் நிலைமையைக் கவனிக்குமிடத்து அவர்களது பரிதாப நிலைமை நன்கு விளங்கும். சாதாரணமாய் ஒரு வருஷத்தில் ஒரு மகாணத்தில் லக்ஷக் கணக்கில் மூன்று வயதிற்குக் குறைந்த குழந்தைகள் இறக்கின்றனர். தேசத்தின் நன்



மைக்கும் ஆதாரத்திற்கும் மிகவும் அத்தியாவசியமான இவ்வளவு குழந்தைகளை இங்ஙனம் வீணாக மண்ணிற்கு இரையாக்குவது நியாயமா? இங்ஙனம் லக்ஷக்கணக்கான குழந்தைகளின் மரிப்பிற்குக் காரணமாயிருக்கும் நிலைமைகளையெல்லாம் நன்காராய்ந்து அவைகளை அறவே ஒழித்தல் நமது கடமையல்லவோ? நம் சமூகத்திலுள்ள சில கெட்ட பழக்க வழக்கங்களும் அஞ்ஞானமும் நீங்கினால் நமது குழந்தைகளுக்கு நன்மையுண்டு. குழந்தை அழும்போதெல்லாம் உணவு கொடுத்தலும் அது அழும்போது நல்லவார்த்தை சொல்லிச் சாந்தப்படுத்தாமல் கைநோவப் புடைப்பதும், குழந்தையின் தேக ஸ்திதியை அறியாமல் ஜீர்ணிக்க முடியாத தின்பண்டங்களைக் கொடுப்பதும் நீங்கவேண்டும். குழந்தைகளின் தேக அமைப்பைப்பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும். ஏனென்றால் இப்புவியில் ஜனித்த ஒவ்வொரு குழந்தைக்கும் நன்கு வளரவும், தேக சௌக்கியத்துடன் வாழவும் உரிமையுண்டு. இவைகளை நாம் புரக்கணித்தால் நாம் நம் தேசத்திற்குச் செய்யவேண்டிய விசேஷமான கருமங்களில் ஒன்றை விட்ட பிரஷ்டர்களாவோம் என்பதில் சந்தேகமில்லை. நமது தேசத்தின் பிற்கால வாழ்வும், மேன்மையும், வலிமையும் நமது குழந்தைகளின் நல்வாழ்வைப் பொருத்தேயிருக்கின்றது. ஆகவே இவ்விஷயத்தில் அமெரிக்கா நமக்கு நல்ல வழிகாட்டியாக விருக்கிறது. நாட்டில் ஏற்படும் சிசுக்களின் மரணத்தை நாம் அமெரிக்காவில் கையாடிவரும் முறைகளினால் குறைக்கக்கூடும் என்பது தெளிவு. குழந்தைகளின் வாழ்க்கையை உண்மையிலேயே மிகச் சந்தோஷமுள்ளதாகச் செய்யலாம். ஆரோக்கியமுள்ளதாகச் செய்யலாம்; மிகச் சாமர்த்தியம் உள்ள குழந்தைகளைப் பெறலாம். ஆகவே இவ்விஷயத்தில் வேண்டிய ஊக்கங்கொண்டு உழைக்கவேண்டுவது அவசியம். இப்பொழுதே ஆரம்பிக்க வேண்டும். இந்திய நாடு தன்னைத்தானே தான் சீர்படுத்திக்கொள்ளவேண்டும். நம் பிரயத்தினம் வீணாகாது. நாம் பிரயாசப்படாதது தான் குற்றம். அதுதான் நமது துக்கத்திற்குக் காரணம். நாம் பிரயாசப்பட்டால் நமக்கு சந்தோஷமுண்டு, ஜயமுண்டு, சுகமுண்டு. ஒவ்வொருவருக்கும் இவ்விஷயத்தில் பொறுப்புண்டு. என்றாலும் அரசாங்கத்தாரின் உதவியின்றி இவ்விஷயங்களில் திருப்திகரமாக வேலை செய்யமுடியாது என்பது திண்ணம். ஆகவே இதற்கு வேண்டிய உதவியைச் செய்ய அரசாங்கத்தாரும், தனிகரும், பெற்றோர்களும், அபிமானிகளும் முன்வந்து உழைக்கவேண்டுவது அவசியம்.

---

## ஜோதிடம்.

(மகாத்மாவின் விடுதலையைத் தெரிவித்த ஜோஸ்யர்.)

தர்ம நியாயமான 5 கேள்விகள் எழுதியனுப்பினால் எதிர்காலப் பலனைத் தெரிவிப்போம். லெட்டர் எழுதும் நேரத்தையும் குறித்தனுப்பவேண்டும். 5 கேள்விகளுக்கு ரூ. 1-0-0. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் ரூ. 0-4-0. ஒரு வருஷம் மாதவாரி பலன் எழுத ரூ 2-0-0. (8-2-24 சென்னை ஆந்திரபத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:—திருத்தணி ஹனுமார் உபாஸி சடகோபாசாரியார் ஸ்வாமி மகாத்மா காந்தியடிகள் 5—2—24ல் விடுவிக்கப் படுவாரென்று 12—11—23ல் எங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்திருந்தார். அதன்படியே மகாத்மா விடுவிக்கப்பட்டார். இவரது ஜோதிடத் திறமையை மனப்பூர்வமாக விக்கியாபனம் செய்து கொள்ளுகிறோம்). மற்றும் விவரத்திற்கு எழுதவும்.

ஆஞ்சனேயஸ்வாமி ஜோதிடாலயம்,

திருத்தணிகை, சித்தூர் ஜில்லா.

# கலாவதி அல்லது காலத்தின் கொடுமை.

(387-ம் பக்கத்தொடர்ச்சி).

(சகோதரி வி. பாலம்மாள்.)

## 8-வது அதிகாரம்.

உலகில் பெண் மக்கள் கண்ணியமாய் வாழ்வதற்குக் கல்வியறிவு முக்கியம். அதற்கடுத்தபடியாகக் கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல்; தன் தலைவிதி உயர்வாகவோ தாழ்வுற்றோ எவ்வித மிருப்பினும் பொறுமையைக் கைவிடாதிருத்தல்; இவை யவசியமானவை. இவையனைத்தும் நமது கலாவதியிடம் ஒருங்கே அமையப் பெற்றிருக்கின்றனவே. அவ்விதமிருக்க இவள் இவ்வித நிலைக்காளானதெப்படி? ஆனால் தலைவிதி என்று பெரியோர் சொல்லுவார்களே. அத்தலைவிதிதான் கலாவதியை இக்கதிக்கு ஆளாக்கிவிட்டதோ? உலகில் மூடர் தம் மனமாறச் செய்தவற்றையே தலைவிதி என்றும் அறிஞர் தம்மையறியாது நேரும் பிழையைத் தலைவிதி என்றும் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். படித்தவளும் புத்திசாலியுமாகிய கலாவதியின் விஷயத்தில் மேற்கூறியதை ஒப்பிட்டுச் சொல்லமுடியுமா? முன்பின் சற்று மறியாமல் இக்காரியம் கலாவதிக்கு ஏற்படுவதெங்ஙனம்? இது விஷயத்தில் கலாவதி மௌனம் சாதிப்பதேன்? அளவற்ற ஆஸ்திக்கு அதிகாரியாயிருக்கும் தான் மற்றவர்க்குப் பயந்து நடத்தல் அனாவசியமென்று இவள் நினைத்தாளோ? உள்ளம்நொந்து புண்படும்படி அயலார் வம்பு பேசுவதைச் சகித்துக்கொண்டு மனங்குன்றாது முகங்கோணாது காலங் கழிக்கின்றாளே. இதை யனுசரித்தே பெண்களுக்குக் கல்வி கற்பிக்கக்கூடாதென்றும் சுதந்திர மளிக்கக்கூடாதென்றும் சிலர் வாதுபுரிகின்றனரோ. ஆனால் நமது கலாவதி கற்ற கல்வி பெண் மக்கட்குரியதாயிற்றே. எதனால் பெண்பால் மேன்மையடைவாளோ, எதனால் தன் வாழ்நாட்களின் லக்ஷியத்தைப் பரிபூரணமாயறிந்து கொள்வாளோ, எதனால் பெண்களுக்குச் சிறப்பை யுண்டாக்கக் கூடிய நடவடிக்கைகள் இன்னவை யென்றுணர்ந்து கொள்ளக்கூடுமோ அத்தகைய கல்விப் பயிற்சியை யடைந்திருக்கும் கலாவதியின் நடவடிக்கைகளில் தோஷம் கூறல் பொருத்தமானதன்றே. பெரும்பாலும் முகச்சாயலையே யனுசரித்து இருக்கும் சிறுகுழந்தை; நடு வயதும் பணக்கட்டுமுள்ள பெண்பால்; இவ்விரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது என்னென்று தான் சொல்வது? வெளியில் தன் கண்காணாவிடத்தில், காதுகேளாவிடத்தில் வாய்க்குவந்ததைப் பிதற்றித் திரியும் ஜனங்களின் சொல்லை நாம் சட்டை செய்யாவிடினும் சந்தர்ப்ப சாக்ஷியம் சரிவர இருக்கும்போது என்ன செய்வது? தக்க அந்தஸ்திலிருக்கும் பெண்பாலைக் கண்டு இவ்விஷயமாக நேரில்பேசுவது முடியாத காரியமன்றோ. நேரில் கண்டு கேட்டால் ஏதேனும் விஷயங்கள் புலப்படக் கூடுமானாலும் உண்மையில் கலாவதியின் கெட்ட நடவடிக்கையாலேயே அக்குழந்தை யவளுக்குப் பிறந்திருக்கக் கூடுமானால், இச்சந்தர்ப்பத்தில் பிறர் தலையிடுதல் சற்றும் பொருந்தாத செய்கையாயிற்றே. கலாவதியின் பருவ வயதையும் அவள் தனித்திருத்தலையும் இஷ்டம்போல் நடக்கக்கூடியவாறு பொருள் படைத்திருப்பதையும் கவனித்தால் அவள் மனம் தகாத வழியில் ஏன் சென்றிருக்கக் கூடாது. கலாவதியின் உயர்ந்த நடவடிக்கையையும் கல்வியையும் கண்ணியமான நிலைமையையும் பதிபக்தியையும் பரிசுத்தம் வாய்ந்த உள்ளத்தையும் உற்று நோக்கினால் இப்பெரும் பழியை அவள் மீது எவ்வாறு சுமத்துவது? தற்கால ஸ்திதியையும் ஜனங்களிடையே உள்ள பிரஸ்தாபத்தையும் திராசின் ஒரு புறத்திலும் அவளது நற்குணத்தையும் நன்னடவடிக்கைகளையும் மற்றொரு புறத்திலும் வைத்து நிறுக்குமளவில் அடடா! என்ன ஆச்சரியம்! இரண்டும் சமமாயிருக்கிறதன்றி சற்றேனும் ஏறத்தாழ விளங்கவில்லையே! இதற்கென்ன செய்வது. போகப்போக விஷயம் எவ்வாறு இருக்குமோ? அதைத் தெரிந்து கொள்வதெப்படி?

ஏனிவ்வளவு அவசரம். வக்கீல் சாமேச்வரனால் தூண்டப்பெற்ற நமது சந்திரசேகரன் இனி க்ஷணநேரமும் சும்மாயிரானென்பது திண்ணம். விஷயமின்னதென்று விளங்காது நாம் விழிப்பதைக்காட்டிலும் சந்திரசேகரனைப் பின் தொடர்வோம்.

## 9-வது அதிகாரம்.

கும்பகோணம் நகரம் முழுதும் சப் கோர்ட்டில் நடைபெறும் வியாச்சிய விஷயமாகவே பிரஸ்தாபித்துக்கொண்டிருந்தது. கோர்ட்டுகளில் தினம் பொழுது விடிந்தால் பல கேஸ்கள் தீர்க்கப்படுகின்றனவாயினும் இக்கேஸ் மட்டும் அனைவர்க்கும் மெத்த பரபரப்பை உண்டு பண்ணிற்று. அயலூரார்களும் இக்கேஸ் என்னமாய் முடியப்போகிறதோ வென்ற ஆவலினால் தினசரிப்பத்திரிகையை அன்றாடம் எதிர்பார்த்தவண்ணமிருந்தனர். சொத்து பாத்தியதை வியாச்சியம், வாதி சந்திரசேகரன், பிரதிவாதி கலாவதியம்மாள் என்று கொட்டைபோன்ற எழுத்துக்களில் தலைப்பெயரிட்டு தினசரிகள் அன்றாடம் சொந்த நிருபர்களால் தந்திமூலமனுப்பப்படும் கோர்ட்டு நடவடிக்கைகளை ஒன்று விடாது பிரசுரித்துக்கொண்டிருந்தன.

பிரதிவாதியாகிய கலாவதி கோர்ட்டு முன்னிலையில் விசாரிக்கப்படப்போகிறாள் என்ற விஷயம் எப்படியோ நகர் முழுதும் ஒரு நொடிப்பொழுதில் பரவிவிட்டது. அன்று காலை எட்டுமணியிலிருந்தே ஜனங்கள் கோர்ட்டு வாயிலில் கூட்டங்கூடவாரம்பித்தனர். கோர்ட்டுக்கு வரும் வக்கீல்களுடையவும் ஜட்ஜியினுடையவும் வண்டி வருவதற்கும் இடமில்லாமல் ஜனக்கூட்டம் திரண்டிருந்தது. வேறு விதக் கேஸாகவிருந்தால் கலகம் விளைந்துவிடுமோவென்று போலீஸ்படை எச்சரிக்கப்பட்டிருக்கும். ஆனால் இச்சமயம் அங்குள்ள கூட்டம் விரட்டித் தள்ளப்படாமல் கூடிக் கிடந்தது. இக்கேஸைப்பற்றி ஒவ்வொருவரும் தமக்குத் தோன்றியபடி விவகரித்துக்கொண்டிருந்தது ஆச்சரியமல்ல. வெறும் வாயை மெல்லுபவன் பிடி அவல் கிடைத்தால் விடுவானா?

கோர்ட்டினுள்ள பாரிலும் அன்று பெருங்கூட்டமாகவே இருந்தது. தினப்படி கோர்ட்டுக்கு வந்து கஷ்டப்படவேண்டிய அவசியமின்றிச் சுகவாசிகளாய் வீட்டோடு இருந்த வக்கீல்களும் அன்று அங்கு விஜயம் செய்திருந்தனர். வாதிக்கு பாரிஸ்டர் ராமவர்மாவும் பிரதிவாதிக்குப் பாரிஸ்டர் ஸத்தியநாதனும் ஆஜரா

ஆஜராகப் போவதால் அவர்கள் வாதத்தைக் கேட்கவேண்டுமென்ற ஆவலால் அடுத்த ஊர்களிலுள்ள பிரபல வக்கீல்களும் அன்று வந்திருந்தனர். கறுப்பு அங்கியை மூலையிலெரிந்து தலைப்பாகையை மேஜைமீது வைத்துவிட்டு நாற்காலியிலுட்கார்ந்தபடி வக்கீல்கள் இக்கேஸைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

நீலகண்டன்:—காலம் போன போக்கைப் பார்த்தீர்களா? இதுவரையில் இதுபோன்ற கேஸைக் காதாலேனும் கேட்டதுண்டா?

மூர்த்தி:—தெரியாமலா பெண்கள்பேரில் சொத்து எழுதிவைக்கக் கூடாதென்று சொல்லுகிறார்கள்.

சோமு:—நீர் சென்ற மாதம் வாங்கிய வீட்டைக்கூட மனைவிபேரால்தானே வாங்கியிருக்கிறீர். இன்று பிரமாதமாய்ப் பேச வந்துவிட்டீரே.

நீலகண்டன்:—பிரதிவாதி உங்களுக்கேதேனும் பந்துமுறையாகவேண்டுமோ?

சோமு:—எங்கள் ஜாதிகூட அன்று. ஒரு பெண்பால்மீது கேஸ் வந்திருக்கிறதென்றால் மனம வருந்தாது வம்பு பேசி ஏளனம்செய்தலழகோ?

மூர்த்தி:—ஓகோ! நீர் சமத்துவக்கக்ஷியில்சேர்ந்தவரோ. சரிதான்; இப்போதுதான் எனக்கு விளங்கிற்று. மனைவி யிறந்தால் கணவன் வேறு மணந்து பிள்ளைகுட்டி பெறுவதுபோல் கணவனிறந்த கைம்பெண்ணும் தனக்குள்ள ஆஸ்திக்காக ஏன் ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்துக்கொள்ளக்கூடாது என்கிறீர்.

சோமு:—உம்மை வக்கீலாக நியமிக்கும் கக்ஷிக்காரன் வாயில் மண்விழுமன்றி அவன் கடைத்தேரமாட்டான். வாய்க்கு வந்ததையெல்லாம் பேசும்படிதான் நீர் படித்திருக்கும் சட்ட புத்தகங்கள் போதிக்கின்றனபோலும். அது அனாதைக் குழந்தையென்று பிரதிவாதி வக்கீல் சொல்லவில்லையா?

தேசிகன்:— அதெல்லாம் கிடக்கட்டும். கேஸ் ஆரம்பித்த தினத்தன்று ஒரு வக்கீல் வந்திருந்தானே; அவன் பெயரென்ன? குசால்தாஸ் தானே. அவனைப் பிறகு கோர்ட்டில் காணவில்லையே.

நீலகண்டன்:—பிரதிவாதிக்காக அவன் வந்திருந்தான். நாள் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் பீஸ் பேசியிருந்தான். விபசாரியாய் விட்ட பெண்பிள்ளைக்குப் புருஷன் சொத்தில் பாத்தியதை கிடையாதென்பது தானே இவ்விவகாரத்திற்கு மூலகாரணம். அவ்வாறிருக்கப் பிரதிவாதி தரப்பில்என்னவென்று பேசுகிறது? ஒருநாள் பீஸ் பணத்தோடு அவன் ஒழிந்துவிட்டான்.

சோமு:— சந்திரசேகரனுக்குச் சடனுபத்திரவம் அதிகமாய்விட்டிருப்பதால் அவன் தமையன் மனைவி விபசாரியாய்விட்டாள் போலும்!

மூர்த்தி:—பிள்ளையைப் பெற்றுவிடுவதைக் காட்டிலும் விபசாரத்திற்கு வேறு சாக்ஷி வேண்டுமோ?

சோமு:—அவ்வாறானால் இதுவரை ஏன் சந்திரசேகரன் சும்மாவிருந்தான். அவள் கர்ப்பிணியாயிருக்கும்போதே கேஸ் போட்டிருக்கலாமே.

தேசிகன்:—நீங்கள் எல்லாம் கற்றுக்குட்டிகள். புத்தகத்திலுள்ளதை மனப்பாடம் பண்ணிவிட்டீர்களன்றி உலகானுபவமின்னதென்றே தெரியாது. பணக்கட்டுள்ள ஒருத்தி தன் கர்ப்பத்தைப் பிறர் அறியாவண்ணம் ஒளித்தல் சிரமமானதா?



நீலகண்டன்:—ஏதோ தற்காலக் குடும்ப வாழ்க்கையில் பல ஊழல்கள் நிரம்பியே இருக்கின்றன. ஆனாலும் பெற்ற பிள்ளையைப் பகிரங்கமாய் வைத்து வளர்த்து வருகிறாளே. இதுவன்றோ ஸ்திரீ சாகசம்.

சோமு:—அவளிடம் குழந்தை யிருக்கிறதென்பதற்கு ஆதாரமென்ன?

தேசிகன்:—அவள் வீட்டு வேலைக்காரரும் புரோகிதருமே சாக்ஷிகள்.

நாதமுனி:—என்னவிருந்தாலும் அவள் படித்த பெண்பிள்ளை; கெட்டிக்காரியாயிற்றே. கர்ப்பந்தரித்ததே தீர்த்தயாத்திரை என்று சாக்கிட்டுக் கோபாலபுரம்விட்டு நகர்ந்துவிட்டாள். பிரசவகாலத்திற்கு பதரிகாச்ரமம் செல்வதாய் வழிகாட்டினாள். பிறகு காசிவாசம் செய்யவாரம்பித்தாள். பெற்றமனமல்லவா! அத்துடன் குழந்தையும் பத்தரைமாற்றுத் தங்கத்தை உருக்கி வார்த்தது போல வடிவழகுடன் இருக்கிறதாம். ஆனால் அவள்மட்டும் அனாதைக் குழந்தை என்றே கேட்பவர்களிடம் சாதித்து வருகிறாளாம்.

காமேச்வரன் ;—கையில் சொத்து ஏராளமாயிருக்கிறது. நகைகளிலும் ரொக்கத்திலும் மட்டும் லக்ஷம்ரூபாய்க்குமேல் வைத்துக்கொண்டிருக்கிறாள். நம்மை யார் என்னசெய்ய முடியும் என்ற தைரியமே இதற்குக் காரணம்.

சோமு:—அது கிடக்கட்டும். உங்கள் கக்ஷிக்காரர் சந்திரன் ஒரு வங்காளிப் பெண்ணையழைத்து வந்திருக்கிறாராமே?

காமேச்வரன்:— அவருக்கென்ன மகாராஜன். பிரபு. அப்பெண்ணை விவாகம் செய்துகொண்டிருக்கிறார்.

சோமு :—அந்த விவாகச் சடங்குக்கு நீர்தான் உபாத்தியாயர்போலும். உமக்குப் பெருத்த தக்ஷிணை கிடைத்ததாமே.

காமேச்வரன்:—அதற்கென்ன. மந்திரத்தைச் சரிவர உச்சரிக்கத் தெரியாத வாத்தியார் செய்து வைப்பதுதான் கலியாணமோ? சட்ட நிபுணர் முன்னிலையில் ஒப்பந்தப் பத்திரம்மூலம் மணப்பதில் குறைவென்னவிருக்கிறது? அந்தப் பத்திரத்தில் நான் சாக்ஷிபோட்டிருக்கிறேன். இதனாலென்ன?

சோமு:—அவளென்ன முகமூடி யில்லாமல் வெளிவரக்காணோமே?

இதற்குள் கோர்ட்டு ஆரம்பமாயிற்றென்றறிந்ததும் வக்கீல்கள் தங்கள் சம்பாஷணையை நிறுத்திவிட்டு எந்தக் கக்ஷியின் வக்கீல் முடிவில் ஜயமடைகின்றாரோ அவருக்கு வக்கீல் சங்கத்தில் ஒரு டீபார்ட்டி கொடுப்பதாகத் தீர்மானித்துச் சென்றார்கள்.

## 10-வது அதிகாரம்.

மணி பதினொன்று அடித்தது. கோர்ட்டு சேவகன் "பேசாதே, பேசாதே" என்று அதட்டிக்கொண்டிருந்தான். அங்குள்ள ஜனங்களின்பார்வையெல்லாம் சாக்ஷிக் கூண்டையே உற்று நோக்கியவண்ணமிருந்தது. அனுதாபத்தாலும் வேடிக்கை பார்க்கும் எண்ணத்தாலும் பல பெண்மணிகளும் அங்கு குழுமியிருந்தனர். சுகவாசிகளான வாலிப ஆடவர்கள் மேலுள்ள ஆட்டோடில்பகார் போன்ற பரிமள வஸ்துக்களின் வாசனை யொருபக்கம் மனோகரமாய் வீசிக்கொண்டிருந்தது. வேடிக்கை பார்க்க வந்துள்ள அப்பாசாமி வாத்தியார் மடிசஞ்சியைத் தலையின்மீது வைத்தபடி வியர்வை ஆறாய்ப் பெருக நெருக்கடியில் நின்றுகொண்டு எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார். வக்கீல் காமேச்வரன் அன்று புதிய உடை உடுத்திருந்ததுடன் வழக்கமில்லாது புதிதாய் காலர் கட்டிக்கொண்டதால் அடிக்கடி கழுத்தைத் தூக்கித்தூக்கி அவஸ்தைப்படலானார். நெக்டை ஹாட் பூட்ஸ் இவைகளுடனும் காதில் வைரக்

கடுக்கன் விரல்களில் மோதிரங்கள் இடுப்பில் வெண்மையான கிளாஸ்கோ மல் அல்பாகா லாங்கோட் இவைகளுடனும் பல வக்கீல்கள் அவர்களுக்கென்று ஏற்பட்ட இடத்தில் வரிசை வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள். வக்கீல் சோமுமட்டும் தலையோடு கால் வரை சுத்தக் கதருடை யணிந்திருந்தார். நாகரிக உடையுடுத்திருந்த சீமான்கள் இவரை ஒரு கோமாளி வேஷக்காரனைப்போல் பார்த்துக்கொண்டிருந்தனர். சாக்ஷிக்கூண்டில் நிற்கப்போகும் கலாவதி இப்படி யிருப்பாள், அப்படி யிருப்பாள் என்று அவரவர்கள் தங்கள் நிலைமையை யனுசரித்தே தீர்மானிக்கவாரம்பித்தனர். தலைமையாசனத்தில் வீற்றிருக்கும் ஜட்ஜியின் முகம்மட்டும் தினப்படி போலக் குளிர்ச்சியுற்றிருக்கவில்லை. இயற்கையில் புன்னகை தவழும் அவர் முகம் ஒளிகுன்றி வருத்தமுற்றிருப்பதை எடுத்துக் காட்டிற்று. பிரதிவாதி கலாவதியம்மாள் என்று உறத்த குரலில் சேவகன் மும்முறை கூவினான்.

வாதி பிரதிவாதி தரப்பு வக்கீல்கள் கையில் கட்டுப் புத்தகங்களுடன் தொண்டைக் கம்மலுக்காக சற்றுக் கனைத்துக்கொண்டு தத்தமிடத்திலிருந்தெழுந்தனர். சுமார் முப்பத்திரண்டு வயதுள்ள பெண்மணி ஒருத்தி சாக்ஷிக்கூண்டில் வந்து நின்றாள். வெண்துகிலுடுத்துத் திடீரெனக் கலாவதி அங்கு வந்து நின்ற காக்ஷியானது சாக்ஷாத் சரஸ்வதி தேவியே வெண்டாமரைவிட்டெழுந்து ஆகாய மார்க்கமாய் வந்திறங்கி விட்டனளோ என்று சிலருக்கும் ஆகாய நதியில் நீராடச் செல்லும் யக்ஷகன்னியோ என்று சிலருக்கும் ஆச்சரியத்தை விளைவித்தது. அவள் உயர்ந்த சேலை கட்டியிருப்பாள், ஆபரணங்களணிந்திருப்பாள், ஒய்யாரமாகப் பேசுவாள் என்று இவ்வாறெல்லாம் மனதிற்குத் தோன்றியபடி எண்ணியிருந்தவர்கள் கலாவதியின் கதராடையையும் அவள் ஆபரணம் சிறிதுமற்றிருப்பதையும் அவளது சாந்தமும் அமைதியுமே உருவாகக் கொண்டுள்ள முகப்பொலிவையும் கண்டு ஏமாந்தனர். "சர்வ வல்லமையுள்ள கடவுளுக்கு முன்பாக" என்று பிரமாணம் செய்தாள். வாதி தரப்பு வக்கீல் கேட்டுவரும் கேள்விகளுக்குத் தங்கு தடையின்றிச்சுமுகத்துடன் கலாவதி பதிலளித்து வருவது கண்டு அனைவரும் அதிசயித்தனர். நாகராஜனை மணந்தது, சந்திரனை வளர்த்தது, கணவனிறந்தது, உயிலின் விவரம், சந்திரன் துஷ்ட சகவாசத்தால் இவளை யவமதித்தது, இது தாங்காது கலாவதி தீர்த்தயாத்திரை சென்றது முதலிய விஷயங்கள் அவ்விசாரணையால் படிப்படியாய் வெளியாயின.

"உம்மிடம் வளரும் ஆண்குழந்தையைப் பற்றி என்ன சொல்லுகிறீர்" என்று வாதி தரப்பு வக்கீல் கேட்டார். இக்கேள்வி கோர்ட்டிலுள்ள ஒவ்வொருவர் மனதிலும் புதிய உணர்ச்சியை யுண்டாக்கிவிட்டது. பதில் என்ன வரப்போகிறதென்று ஜனங்கள் எதிர்பார்த்திருந்ததால் எங்கும் சந்தடியற்றிருந்தது. இக்கேள்விக்குக் கலாவதி சற்றும் பின்னடையாது "அனாதையாகிய அக்குழந்தை ஹரித்துவாரத்தில் ஒருவரால் எனக்களிக்கப்பட்டது" என்று விடையளித்தாள். கூட்டத்திலுள்ள சாது புருஷர்கள் இந்த பதில் கேட்டு ஒரு பெருஞ் சுமை தலையை விட்டிறங்கியது போலத் திருப்தியுற்றனர். சீச்சீ ! இவ்வளவு தானா, கேஸ் ஸ்வாரஸ்யமாயில்லையே என்று சிலர் வருந்தினர்.

வக்கீல்:—ஆனால் அக்குழந்தை உமது வயற்றில் பிறந்ததல்லவென்றே சொல்லுகிறீர்களா ?

கலாவதி:—அது அனாதைக் குழந்தைதான் என்னால் அன்போடு வளர்க்கப்படுகிறதென்றே சொல்லுகிறேன்.



வக்கீல்:—குழந்தை உமக்கு எப்படிக் கிடைத்தது ?

இதைக் கேட்டதும் கலாவதி நடுநடுங்கிவிட்டாள். அவள் தேகம் நின்ற நிலையில் தரிக்கமாட்டாது கிடுகிடுவென்று ஆடத்தொடங்கியது. செந்தாமரை யொற்ற முகம் திடீரென வெளுத்தது. குபீரென வியர்வைத் துளிகள் நெற்றியில் படர்ந்தன. பேசமாட்டாது பதைபதைத்தாள். இக்காட்சியைக் கண்டு ஜட்ஜ் மனம் வருந்தினார். பெண்மக்களைப் பெரிதும் போற்றும் முஸ்லீம் மதத்தினராகிய அக்கனவான் பெரிய குடும்பத்துப் பெண்பால் ஒருத்தி சாக்ஷிக்கூண்டில் நடுநடுங்கி நிற்பது கண்டு வருந்தினார். இப்பரிதாபங் கண்டு ஜட்ஜ் மனந்தாளாதவராக "அம்மா, உங்கள் உண்மையை நிரூபிக்க சாக்ஷியமுண்டானால் தாராளமாய்த் தெரிவியுங்கள்" என்றார். கலாவதி சாக்ஷிக்கு எங்கே போவாள் ? அவளிடம் குழந்தையை யளித்தது யாரென்றும் அவரின் ஊர் பெயர் இன்னதென்றும் அவளால் கூறமுடியவில்லை. சொல்லுவதின்னதென்றறியாது விழித்தாள்.

உள்ளதையுள்ளவாறு சொல்லுவதில் பயமென்னவென்றாலும் சந்தர்ப்ப சாக்ஷியங்கள் தனக்கு முழு விரோதமாயேற்பட்டிருந்ததைக் கலாவதி அப்பொழுதே அறியலானாள். இனிக் கடவுளையன்றி வேறு துணையில்லை என்பதாக முடிவு செய்தாள்.

हा सर्वलोकनाथ
द्रुपदसुतामानरक्षक त्वरितम् ।
पालय मामशरण्यां
पार्थसहाय प्रभो परंधाम ॥ १ ॥
आर्तां मतीव खिन्नां
अबला मापद्गता महो दीनाम् ।
गजराजशोकनाशक
पदनतभक्तार्तिभंजन त्राहि ॥ २ ॥

(ஆசிரியர் இயற்றியது.)

(சர்வலோகேச்வரா! பாஞ்சாலி மானங் காத்தவனே ! பார்த்தசாரதியே! யானைக்கபயமளித்தவனே ! பக்தர் துயர் தீர்ப்பவனே ! அனாதையாய் வேறு கதியற்றிருக்குமென்னைச் சீக்கிரம் காப்பாற்றும் என்பது இதன் கருத்து.)

இவ்வாறு மனதிற்குள் கடவுளை பிரார்த்தித்த வண்ணம் கலாவதி சற்று உரத்த குரலில் "நான் சொல்லுவதெல்லாம் உண்மையென்பதற்குக் கடவுள்தான் எனக்கு சாக்ஷி" என்று பதிலளித்துவிட்டுத் துக்கம் தாங்காது திடீரெனத் தரையில் விழுந்து மூர்ச்சையானாள்.

(தொடரும்).

# அகலிகை.

ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது.

(390-ம் பக்கத் தொடர்ச்சி).

இந்திரன்:—காதலி ! உபதேசத்தைக் கேட்க எனக்கு அவகாசமில்லை. இன்னும் தாமசஞ் செய்யவேண்டாம்.

அகலிகை:—பாவி ! நான் உனக்கு எவ்வளவோ நீதிகள் எடுத்துக் கூறியும் செவிடன் செவியில் சங்கு ஊதியதுபோலாயிற்றே. அமரேசா! உனக்குக் கிடைத்திருக்கும் இந்திரப் பட்டம் நாய்க்குத் [illegible]போலிருக்கின்றது. உலகத்தில் சில விருக்ஷங்கள் புஷ்பித்தாலுங் காய்ப்பதில்லை. வயதிலே மூத்தோர்களாயினும் நல்ல காரியத்தைச் செய்ய அறிவில்லாதவர்கள் அநேகரிருக்கின்றனர். நிலத்தில் விதைத்து நல்ல நீர் பாய்ச்சினாலும் முளையாத வித்துக்களு மிருக்கின்றன. அது போல, யான் உனக்கு எவ்வளவு இதோபதேசஞ் செய்தாலும் அதனைக் கிரகிப்பதற்கு

உனக்கு அறிவிருப்பதாகக் காணவில்லை. யான் என் செய்வேன் ? இப்போது இங்கு யாருமில்லையென்று கூறுகின்றாயே. ஐயோ பாதக! அறிவிலந்தக! உள்ளும் புறமும் நிறைந்து விளங்கும் பகவானொருவர் பார்த்துக்கொண்டிருக்கின்றனரே; அதற்கென் செய்வாய் ?

இந்திரன்:—காதலி! இந்த ஞானோபதேசம் எனக்கு வேண்டா. நீயுண்பதற்கு அருகமானமூவா மருந்தாகிய தேவாமுதம் தருகின்றேன். அடிமையை அங்கீகரித்தல் வேண்டும்.

## அகலிகையின் சாபம்.

அதனைக் கேட்ட அகலிகை அத்தேவர்கோன் மேல் காதல்கொண்டவளாகிச் சற்று நேரம் ஒன்று முறையாதிருந்தனள். அச்சமயத்திலே, வைகறைப்பொழுதில் ஆச்சிரமத்தினின்றகன்ற கௌதம முனிவரும், மலர்கள் பொருந்திய நன்னீரில் மூழ்கிச் சந்தியா வந்தன ஜப முதலியவற்றைச் செய்து மீண்டும் வந்து தன் வாயிலில் நின்று "பெண்ணே! நீர் கொண்டு வருக" என்றனர். அவளும் வழக்கமாயுள்ள ஒழுக்கமின்றி நீரைக்கொண்டு வந்து கொடுத்தனள். அவளது நிலைமையைக் கண்டதும் முனிபுங்கவர் "மயில்போலுஞ் சாயலையுடையாளே! முழு நிலவுபோன்ற உன்னொளி முகம் இன்று பழுதுற்றது யாது காரணம்? பீடம் போடவில்லை, விரைந்து கால் கழுவ நீருங் கொண்டு வந்தாயில்லை, உள்ளதைச் சொல்க" என்றனர். அதனைக் கேட்ட அகலிகை மனமுந்தேகமும் நடுநடுங்கவும் தன் உயிர்த்துணைவராகிய கௌதம முனிவர் பாதங்களைப் பணிந்து, மிகுதியும் நாணமுடையவளாய் முகத்தை வளைத்துக்கொண்டு மெல்லிய சொற்கள் குளறும்படி நிலத்தைப் பார்த்த வண்ணமே தனது காற்பெரு விரலாற் கீறிக்கொண்டு "கருணையங் கடலே! தேவராஜனாகிய இந்திரன் தேவரீருடைய உருவத்துடன் வந்து இங்கு பொருந்தினான். அதனை அடியாள் சிறிதும் அறியேன்" என்று நடந்தவற்றையொன்றும் மறையாது கூறினள். அதனைக் கேட்ட

அகலிகையின் சாபம்.



கௌதமர் கோபாவேசத்தராய் அழலெனக் கண்கள் சிவக்கப்பெற்று, "அடி பாதகி! என்னைப்போலும் உருக்கொண்டு வந்த அவனை நானேயென்று முன்னே தயங்கினை. அஃதுண்மையே, பின்னர் நீ அவனை இன்னவனென்று தெரிந்தும் மறுக்காமல் தாமதித்தாய்; ஆதலின் ஒரு புலனுணர்ச்சியுமில்லாத கல்லாகி, மழை வெய்யில் காற்று இவற்றால் மோதுண்டு நெடுங்காலம் இந்நாட்டில் கிடப்பாயாக" என்று சபித்தனர். அச்சாபத்தைக் கேட்ட அகலிகையானவள் கரைந்த மனத்துடன் உடம்பு நடுங்கிக் கண்களில் நீரைத் தாரை தாரையாக உகுத்துத் தன் பதியாகிய முனிவரை நேரே பார்த்து "எம்பெருமானே! பெருந்தகையே! தயாநிதியே! சிறியவள் செய்த குற்றத்தை மன்னித்தற் பொருட்டன்றோ தேவரீர் செவியிற் பொருந்த உரைத்தேன்.

.........."விற்பிடித்து
நீர் கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்" என்பதற்கிடாகத் தேவரீர் பெருங் கருணைகொண்டு என் குற்றமுஞ் சாபமும் ஒழியும் வகையும் அனுக்கிரகிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தனள். அதனைக் கேட்ட முனிவர் பெருமான் "பெண்ணே! அவ்வாறு கல்லுருக்கொண்டு பல ஆண்டுகள் கழிந்த பின்னர், தாசரதியாகிய இராமபிரான் தமது இளவலுடன் விச்வாமித்திர முனிவரோடு இங்கெழுந்தருளுவர். அப்போது அவ்விறைவனது திருவடித் துகள் சிலையாய்க் கிடக்கும் உன்னைத் தீண்டினவப்போதே நீயுன் குற்றங்களினின்றும் நீங்கிப் பக்தியுடன் ஸ்ரீராமபிரானை ஆராதித்து அவரை வலம் வந்து நமஸ்கரிப்பாய். அப்போது இச்சாபமும் உன்னை விட்டு விலகும். பின்னர் என் பணிவிடைகளுக்குப் பாத்திரமாகக் கடவாய்" என்று சாப விமோசன காலத்தையும் உணர்த்தினர். உடனே உலர்ந்த காட்டினைப் பற்றி வளர்கின்ற அக்கினியைப்போல, முனிவரிட்ட சாபத்தால் அகலிகை வலிய சிலையாகிப் பூமியில் வீழ்ந்தனள்.

இந்திரன் சாபம்.



அகலிகைக்கு நேரிட்ட சாபத்தை ஆச்சிரமத்தினுள்ளேயிருந்து தெரிந்த இந்திரன் தான் செய்த குற்றம் தன் மனத்தைத் துன்புறுத்தக் கூட்டைக் கட்டுங் கோற்புழுப்போலவும், முட்டையிற் கட்டுண்ட கருவைப்போலவும் போக்கிடம் எங்குங் காணுதவனாய் முனிவர் சாபத்தாற் சாம்பாராய்ப்போவோமென்று அச்சமுற்றுப் பூனைபோல வடிவுகொண்டு வெளியேசெல்லயத்தனித்தான். அப்போது கௌதம முனிவர் அப்போலியாகிய பூனையைப்பார்த்து இவ்வடிவாக வருபவன் இந்திரனு இருத்தல்வேண்டுமென ஐயமுற்று "ஆரடா அதமனே! போகாதே நில். நீ யாவன் சொல், இல்லையேல் இப்போதே உன்னைச் சாம்பராக்குவது நிச்சயம்" என்றார். அவ்வுரை கேட்ட இந்திரன் தன் உண்மை வடிவேற்று நின்று சிம்புளைக்கண்ட சீயம்போல நடுங்கி "அடிகளே! யான் தேவர்கோனுன இந்திரன். மறச் செயலான இத்தீய கருமத்தை எனது வெளிற்றறிவினுல் செய்ய நேர்ந்தது. தாங்களே இப்பெரும் பிழையைப் பொருவிடின் பின் யாவர் தாம் பொருப்பர். அறிவிலியாகிய என்மீது கருணைகூர்ந்து அடியேனைக் காத்தருளல் வேண்டும்" என்றான். அதனைச் செவிபேற்ற கௌதமர் குரோதாவேசத்தினுல் கண்களில் தீப்பொறி பறக்க இந்திரனை நோக்கி "அடா தூர்த்தனே! நீ இப்பொழுது பரமேஸ்வரனுக்கு நிவேதனமாக வைத்த உணவைத் திருடியுண்ணப் புகுந்த நாய்போல நிற்கின்றாய், அதனுல் இப்போதே உன்னைச் சாம்பராக்குவேன், நீ இந்திரனு இருக்கின்றாய், தேவலோகம் பாழ்படுமேயென்று விடுத்தேன். உன் சரீர முழுதும் யாவரும் பழித்து வெறுக்கத்தக்க ஆயிரம் புண்ணுகப் பொருந்தக் கடவது என்று சாபமிட்டனர்.

உடனே பழுத்த பழமானது காற்றலைத்தலால் மரத்தினின்றும் நிலமிசைவீழ்ந்தாற்போல முனிவரிட்ட சாபமொழி வந்து இந்திரனைப் பொருந்தவும், அவன் உயிரொழிந்தவன்போன்று தனது தீச்செயலையும் அதனுல் நிகழ்ந்ததையும் எண்ணி எண்ணி நெஞ்சந்துணுக்குற்றுத் தன்னுற்றுங்க முடியாத துன்பசாகரத்தாழ்ந்து அவ்விடம் விட்டு நீங்கினன். பெற்ற பொருளைச் சிறிதாக மதித்துப் பெருத பொருளில்விருப்பங்கொண்டு அழியாத துக்கத்தையடைந்து, தனது உடலைப்பார்க்குந்தோறும் நாணமுற்றவனாய்த் தன்னுலகமாகிய பொன்னுலகஞ் செல்லும் எண்ணத்தைப் போகவிட்டு மனிதர் உறையாத இடத்திற் போயொளித்தனன்.

(தொடரும்.)

# பாபிலோனின் பெண்கள்.

சுவாமி அற்புதானந்தர்.

(400-ம் பக்கத் தொடர்ச்சி).

பாபிலோனியர்களும், அஸீரியர்களும், ஹிட்டெட்ஸ்களும் படையெடுப்புகளில் மிகச் சிறந்தவர்களாக இருந்த[illegible] இவர்களின் நாடுகள் பல பா[illegible]பெருகலாயின. இவர்கள் படையெடுப்பில் ஏதுங் காலமெல்லாம் தாம் வெற்றிகொள்ளும் நாட்டின் பொருள்கள் தம் அரசியலுக்கும், ஸ்திரீகளும் பெண்களும் தமக்குமெனவே ஏற்பட்டிருந்தன. பலர் இவ்விதக் கைப்பற்றுதல்களைத் தாமே அனுபவித்தனர். அல்லது மார்க்கெட்டி[illegible]



பொருளுக்கென விலை கூறி விற்றுவிட்டனர். எனவே இப்பெண்வர்க்கங்களின் சொந்தக்காரர்களினுல் ஏற்படும் கஷ்டங்கள் இப்பாபிலோனியர்களுக்கும் அஸீரியர்களுக்கும் ஹிட்டெட்ஸ்களுக்கும் ஒரு புறமிருக்க மறுபுறத்தில் பாபிலோனிலேயே இப்பெண்களினுல் ஆண்மக்களுக்குக் கஷ்ட நிஷ்டூரங்கள் ஏற்படாத வண்ணம் இந்த ஹம்முறப்பி என்ற சட்டம் ஏற்பட்டதெனவும் சில ஆசிரியர்கள் கூறியுள்ளார்கள். ஸர் பிளின்டர்ஸ் பெட்ரிக் என்ற ஒரு ஆசிரியர் பண்டைய எகிப்து என்ற சரித்திரத்தை வரையுங்காலத்தில், "நாகரிகக் குறைவுள்ள நாடுகளிலிருந்து கொண்டுவந்திருக்கப்பட்ட இவ்வழகிய பெண்கள் கணவனில்லத்தை சீருறச் செய்வதைப் பார்க்கிலும், கொள்ளையிட்டுச் செல்லவே முற்பட்டிருந்தனர்க" ளெனக் கண்டுள்ளார். இவ்விதமான அழகியபெண்கள் தம்மை பிரித்துக்கொண்டுவந்தவனுடன் கொஞ்சிக் குலாவும்போது இவள் எங்கு குத்துவாளை இரகசியமாகக் கொண்டிருக்கின்றனளோவென மிக்க அஞ்சவும் அல்லது எங்கு தன் உணவிலும் பானத்திலும் நஞ்சுகளையாவது விஷ வஸ்துக்களையாவது கலந்து வருகின்றனர்களோவென்ற திகில்களையும் இக்கணவர்கள் வகித்திருந்தனர்களென இன்னொரு சரிதையினர் கூறியுள்ளார். எனவேதான் இவ்வாடவர்கள் இதற்கு அஞ்சி வாழலாகினர்கள். இவர்கள் பலவிதமாய் சம்சயங்கள் கொண்டிருந்தனர்கள். எப்பொழுதாவது இவர்களின் கட்டுவேறு வீட்டின் பெண்களுடன் கலந்துகொண்டிருக்கின்றதென்று பார்த்தாலும் கேள்விப்பட்டாலும் முன்கூறிய தண்டனைகளை அளிக்க இந்நாட்டின் சட்டங்கள் இன்றியமையாதனவாகவிருந்தனவென ஒரு ஆசிரியர் கூறியுள்ளார். எனினும் ஒரு நன்மகன் இந்நாட்டின் சரிதையை வரையுங்காலத்தில் இந்நாட்டில் ஒரு மனைவியைக்காட்டிலும் அதிகமான மனைவிகளை ஆடவன் கைக்கொள்ளக்கூடாதென்றசட்டமும் தம் இல்லத்திலேயே தம் உறவின்முறையிலேயே பெண்கள் மனைவியாக ஆண்மக்களுக்கு ஏற்பட்டிருந்தால் பாபிலோனில் பெண்களின் காது முறுக்குதலும் காதில் தொளைபோடுதலும் மூக்கின் துவாரத்திற்கு மேற்பாகத்தை ஒருபுறமோ இருபுறமோ கத்தரித்துவிடும் கொடும் பாதகங்களும் ஏற்பட்டிருக்காதெனக் கூறியுள்ளார். அஸீரியாவில் ஒரு கைம்பெண் தன் இஷ்டப்படி வசிக்கக்கூடாது. அப்படித் தன் மாமனுர் மாமியாரை விட்டகலமுற்பட்டால் அவள் கணவனின் நகை முதலிய சொத்துகள் அரசியலுக்கு ஒப்படைக்கவேண்டும். மணமில்லாத இளைஞர்கள் மாமியார் மாமனுர் அனுமதியன்னியில் ஒரு கைம்பெண்ணை இச்சித்தனனென்ருவது அனுபவித்தனனென்ருவது மணந்தனன் என்ருவது வெளிவந்தால் அரசியல் இருவரின் சொத்துக்களைக் கைவசப்படுத்தி இவர்களைச் சிறையில் அடைத்துவிடும். இவ்வனுசிதங்களில் ஒருவன் ஒருவனைக் கொன்றுவிடுவானேல் அவன் உறவினர் அவனைக் கொல்லலாம் எனவும் சட்டங்களிருந்தன. கைம்பெண்களுக்கு புருஷனின் ஆஸ்திகளில் பிள்ளைகளுக்கு ஏற்படும் பாகங்களைப்போலவே ஒரு பாகம் ஏற்பட்டிருந்தது. சிறு குழந்தைகளுள்ள கைம்பெண் அந்நாட்டின் நியாயாதிபதியின் அனுமதியன்னியில் புனர் விவாகம் செய்துகொள்ளக்கூடாது. விவாகம் செய்துகொள்வாளாகில் புருஷனின் சகல சொத்துக்களும் பிள்ளைக்கு ஏற்பட்டுவிடும். அஸீரியாவின் விவாகங்களில் பெண்களைப் புருஷன் இரண்டு வருஷம் பருமரிக்கக் கட்டுப்பட்டிருந்தனன். இவர்களில் ஏற்பட்டிருந்த 'தலாக்' என்ற முறையில் இரண்டு வருஷத்திற்கு முன்னர் ஒருவரை ஒருவர் விடக்கூடாதவர்களாக இருந்தனர். இவ்விரண்டு வருஷத்திற்குப் பின்னர்

ஐந்து வருஷம்வரை தலாக்கைப் பெற்ற பெண்கள் தாயார் வீடுகளில் வசித்திருந்தால்தான் நியாயாதிபதிகளின் உத்திரவுகளன்னியில் புனர்மணம் புரிந்துகொள்ளலாம். ஒரு முறை 'தலாக்' பெற்றுள்ள பெண் பின்னர் அதே கணவனை மணம் புரியக்கூடாதவளாகுவள். இத் தலாக்குகள் ஆண்மக்களினாலேயே அநேகம் ஏற்பட்டிருந்தன. பெண்களின்மீது சுமத்தப் பட்டிருக்கும் வரம்புகள் மிகக் கடினமானவைகளாயிருந்தமையால் பெண்மக்கள் 'தலாக்' செய்துகொள்ள இச்சைபடக்கூடாதவர்களாகவே இருந்தனர். ஆண்மக்களுக்கு அவ்வித கட்டுப்பாடுகள் கிடையாது. இன்று 'தலாக்' செய்துவிட்டு நாளைக்கு வேறு மணம் புரியலாம். 'தலாக்' செய்யப்பட்ட பெண் அக்கணவனையே மணம் புரியக்கூடாதவளாக இருப்பதினால் அவள் இத் தலாக் செய்தவனின் இரண்டாம் கலியாணமான பெண்ணின் வேலைக்காரியாக இருக்கலாமென பற்பல விதமான ஆதிக்கியங்கள் பெண்மக்களுக்கென பெருகி உள்ளன. இவைகள் சீர்படும் நாட்களே அவர்களினதிர்ஷ்டவசமான நாட்களாகும்.

# மார்க்கோபோலோவின் யாத்திரைகள்.

ஸ்ரீமான் T. R. அனந்த நாராயணய்யர்.

(345-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வாறு நியமித்த கொஞ்ச நாளைக்கெல்லாம் குப்ளேகான் மார்க்கோபோலோவைச் சீனா தேசத்தின் தென்மேற்குக் கோடியிலுள்ள யூனன் மாகாணத்திற்கு ஒரு காரியமாக அனுப்பினான். தனது பிரஜைகளின் நடையுடைபாவனைகளை யறிவதில் குப்ளேகான் மிகவும் ஆஹ்லாதமுள்ளவனென்பதை மார்க்கோபோலோ அறிந்தவராதலால், அவர் யூனன்மாகாண ஜனங்களின் ஸ்வபாவத்தைச் சாங்கோபாங்கமாக அறிந்து, தான் அரசனிடம் திரும்பி வந்ததும், அவற்றை யுள்ளபடி யறிக்கையிட்டு அவனைக் களிப்பித்தார். முதியவர்களிருவரும் மஹாராஜனது கடாக்ஷத்திற்கு ஈடுபட்டு, அவனது நன்மையைக் கருதியவராய், மேனாட்டாரது சம்பிரதாயங்களை இன்னபடி அனுஷ்டிக்கவேண்டுமென்று தங்களாலான யோசனைகளைச் சொல்லி அவனுக்கு உதவி செய்துகொண்டு அவனது சபையிலேயே இருந்துவிட்டனர். இளையவர் ஓய்வொழிச்சலில்லாமற் பல துறைகளிலுமுழைத்து வந்தார். அவர் அடிக்கடி ராஜதானியை விட்டு நெடுந்தூரத்திலுள்ள பல விடங்களுக்கும் இராஜ காரிய நிமித்தம் சென்றதுமன்றி, ஒருக்கால் மூன்று வருஷகாலம் யாங்கோ நகரத்தையும் ஆண்டு வந்தார்.

திரைகடலோடிப் பாடு பட்டுத் தேடிய பணத்தைக் கொண்டு சொந்தவூர் சென்று அங்கு தனது வாழ்நாளின் மிகுதியை உறவினருடன் சுகமாகக் கழிக்கவேண்டுமென்று ஆசைப்படுவது மனிதரியற்கை. நமது யாத்திரிகர்களுக்கும் தங்களது சொந்த வூராகிய வெனிஸுக்குச் சென்று அங்கு தங்களது வாழ்நாளின் மிகுதியைக் கழித்தல்வேண்டுமென்ற ஆசையிருந்தது. ஆனால், இவர்களது வள்ளலாகிய குப்ளேகான் இந்த யோசனைக்கு இலகுவில் உடன்படவில்லை.

இப்படியிருக்க 1292-ம் வருஷத்தில், குப்ளேகான் தன்னுறவினனான பாரஸீகராஜன் ஒருவனுக்குக் கலியாணம் செய்வதாக நிச்சயித்த ஒரு மங்கோலிய இராஜ குமாரியை டாப்ரீஸ் என்னு மூருக்கு அனுப்பவேண்



டிவந்தது. அப்போது பல தேசங்களிலும் பிரயாணம் செய்து அனுபவமுடைய போலோக்கள்தான் இவ்விராஜகுமாரத்தியை க்ஷேமமாக டாப்ரீஸில் கொண்டுபோய்ச் சேர்க்கத் தக்கவரென்று தீர்மானித்து, குப்ளேகான் அவர்களது ஸஹாயத்தை வேண்டினான். தான் வேண்டிவந்த தருணம் இவ்வாறு தெய்வாதீனமாய் வாய்க்கவே, மார்க்கோபோலோ தன் தகப்பனுடனும் சிற்றப்பனுடனும் சின்சோவினின்றும் புறப்பட்டார்.

இரண்டு வருஷகாலம் இந்தப் பிரயாணத்தில் அநேகம் ஆபத்துகளுக்கும் அபாயங்களுக்கும் ஈடுகொடுத்துத் தங்களது பரிஜனங்களிலும் அநேகரைப் பறிகொடுத்துக் கடைசியாய் இராஜகுமாரியை உத்தேசித்த ஊருக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனர். அவ்வளவில் மணமகனாகவிருந்த அரசன் காலஞ்சென்றுவிட்டதினால் இவ்விராஜ குமாரி அவ்வரசனது மகனுக்கு மணமுடிக்கப் பெற்றாள். பின்னர் தங்களுக்கு நேர்ந்த வேறு இடையூறுகளுக்கெல்லாம் தப்பி இவர்கள் சுகமாகத் தங்கள் சொந்தவூர் சேர்ந்தனர்.

1298-ம் வருஷத்தில் வெனிஸ் நகரத்தாருடன் சமுத்திர யுத்தஞ்செய்து வெற்றி யடைந்த ஜினோவா நகரத்தார் மார்க்கோபோலோவையும் கைதியாகப் பிடித்தனர். இவ்விரு நகரத்தாரும் ராஜி செய்துகொண்ட அடுத்த 1299-ம் வருஷம் ஜுலை மாதம்வரையிலும் இவர் கைதியாகவே யிருந்தார். இவ்வாறு இவர் தமது வாழ்நாளில் ஒரு வருஷத்தைக் காராகிரஹத்தில் கழித்தார். அப்போது இவருடன் கைது செய்யப்பட்ட பைஸா நகரத்தவனான ரஸ்டிஸியானோ வென்பவன் இவரது பிரயாண விருத்தாந்தங்களை யெல்லாம் ஒரு புத்தகமாகத் தொகுத்து எழுத விரும்பவே இவர் அவைகளைப் பொழுது போக்காகச் சொல்லிவந்தார்.

மேற்குறித்த ஸமுத்திர யுத்தமும், அதில் வெனிஸ் நகரத்து அதிகாரியான ஆண்டிரியா டான்டோலோவென்பவருக்கும் அவரது கடற்படைக்கும் தோல்வி நேர்ந்திராவிடில் மார்க்கோபோலோவையாவது அவரது யாத்திரைகளையாவது பிற்காலத்தவர் கவனிக்க இடமிருந்திராது. அவருடன் அளவளாவின சிநேகிதர்கள் மாத்திரமே அவரைக் கண்டும் அவரது விருத்தாந்தங்களைக் கேட்டும் களித்திருப்பார்கள்.

கீழ்த்திசையினின்று திரும்பி வந்தபின் மார்க்கோபோலோ கலியாணம் செய்துகொண்டு மூன்று பெண்களைப்பெற்றார்.

இவர் 1324-ம் வருஷத்தில் தமது எழுபதாவது வயதில் உயிர்நீத்தார்.

மார்க்கோபோலோவின் யாத்திரைகளின் பிரதிகள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. இத்தாலி பாஷையிலுள்ள மிகப் பழைய பிரதியும் பிரெஞ்சு பாஷையிலுள்ள வேறொரு நூலின் மொழி பெயர்ப்பு. ஆனால் பைஸா நகரத்து ரஸ்டிஸியானோ வென்பவர் தமது முதல் நூலை லத்தீன் பாஷையில்தான் எழுதினாரென்பது நிச்சயம். ரஸ்டிஸியானோ தம்முடன் காவலான போலோவின் சொந்த வரலாறுகளைச் சொல்ல வாரம்பித்துப் பின் அவர் தாம் கண்டுங் கேட்டு மறிந்ததாகச் சொல்லிய விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு இந்நூலைத் தமது மனம்போனபடி யெழுதி வைத்தார்.

இனிவருவது ஜான் பிங்கர்ட்டன் என்பவர் ஆங்கிலத்தில் பதித்த மார்க்கோபோலோவென்னும் நூலின் மொழிபெயர்ப்பு.

(தொடரும்).

# ஞான விஞ்ஞான போதம்.

(ஸ்ரீமான் பா. ஆதிமூர்த்தி.)

## பிராணவாயு.

(1) களிப்புறு விழிப்பும், ஊக்கமும், அறிவும், களங்கமில் தெளிவும், நற்கவினும்,
ஒளிப்பெருக்குடைய நோக்கமும், மாசற்றுறுவலித்தாதுவின் வுயர்வும்,
அளப்பறும் பலமும், ஞானமும், பொறையும், அளித்து முத்தோட மூமகற்றிப்
புளிப்பென்னும் பதமும்! கடந்து நின்றனவால் பூரக கும்பகவாயு.

(2) பயில்வதற் கெளிதாய், பரிச மெல்லுருவாய், பரவிய பௌவமே யனைய
உயிர் நிலைதானாய், உண்மை விஞ்ஞானத்துச்சமாய், உணவினுக்குணவாய்,
மயிர்முனை முதலாய் உடற்பொறை எங்கும் வளர்ப்பதாய், மனமுதல் குணங்கள்
அயர்வுறுதாளும் அற்புதப் பொருளாய் அழித்தளித்தாக்கும் அக்காலே.

(3) அனலுவாகி, யுலகினைச் சூழ்ந்திங்க சலமும் சலமுமாயமைந்த
இனமுறு ஜீவதாதுவர்க்கங்கள் எரிந்திடாதிருஞ்சம மெய்தித்,
தின உணவாகி, உயிர்க்குழுப் பெருக்கித், திரவமும் ஆவியும் திரியாத்
தனிநெடும் கட்டியுருவில் முத்தொழில்கள் சரிவர நடத்துமச்சலனம்.

(4) ஜீவனினமுக்கச் செடிகளுக்குணவாய் செடிகளின் கழிவினைத்திரட்டிப்
பூவுலகிருந்த உயிர்க்குழுக்கீந்து, புனைதரு வளர்ச்சியைப் பெருக்கி;
தேவினில் முதல்வன் புரிதொழில்தானே செய்து அளிதது அமுதெனத் திரியுப்
ஆவியே யந்தவாயுவென்றுரைப்பேனலகி லாவண்டங்களறிய.

(5) எண்ணினுக் கடங்காப் பொருள்களைப் படைத்த இதழ்விரிமலர் மகனேனும்;
கண்ணினுக்கெட்டாப் புழுவினமேனும், கணப்பொழுதகன்றிடில் மடியும்;
திண்ணமீதறிவாளறிந்துளோருணர்வர் ஜீவனுயுலவு மத்திறல்சேர்
மன்னிய "ஜீவவாயுவின்" வலியை மனதில் நாம் எண்ணுதற்கரிதே!

(6) எழுவகைநிறமாய், எழுவகை யொளியாய், எழுவகைத்தோற்றமாய், எங்கும்
வழுவறக்கலந்த, வுயிரினுக்குயிராய் மாறுதலொழிந்தழிவிலதாய்;
மழுவலோன், திகரிவானவன்; மலரோன், மடியினும் வதிதருவளியாய்
உழுவலன்புடைய "ஜீவவாயுவை" நாம் உணர்ந்துளோம் உறுதுயரகன்றோம்.

வந்தேமாதரம்.



# நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்.

ஸ்ரீமதி செல்லம்மாள்.

தேகசுகம், பலம், மனோதிடம் ஆகிய மூன்றும் மானிடர்கள் ஜீவிப்பதற்கு வேண்டியவைகளாக இருப்பதால் தேக சிகிச்சையைக் கவனிப்பது முதற்கடமையாக இருக்கிறது.

மனிதர்கள் ஜன்மம் முதல் மரணம் வரையில் அனுபவிப்பது சுகம், துக்கம், சந்தோஷம், வியாதி. இத்தியாதிகளில் வியாதி முதற்படியாக இருக்கிறது. இதை நிவாரணம் செய்வது ஔஷதமே. ஈச்வர சிருஷ்டியில் அநேகம் மனிதர்களைப்போஷிக்கின்றன. அநேகம் விஷமிக்கச் செய்கின்றன. விஷ பதார்த்தங்கள் சரீர அக்கிரமங்களை கிரமப்படுத்துகின்றன. இவைகளுக்கு ஔஷதமென்று பெயர். இதன் முறைகளையும் சிகிச்சைகளையும் விளங்கச்செய்வது ஆயுர்வேத சாஸ்திரமே.

நான்கு உபவேதங்களில் ஆயுர்வேதமானது ஒன்று. இது எட்டு பிரிவுகளாக இருக்கிறது. இதில் முக்கியவை ஸஸ்திரீகம், காயசிகிச்சை, ரணசிகிச்சை, ஆயுதங்களினால் பிரயோகம் செய்து குணப்படுத்துகிறது. இந்தியாவில் வர்ணாசிரமபேதங்கள் ஏற்படவே மேற்கண்ட ஸஸ்திரீகம் என்னும் சிகிச்சை நம்முன்னோர்கள் பழக்கத்திற்கு கொண்டுவந்ததை அசுசிகொண்டு அலக்ஷியம்செய்துவிட்டதினால் அதன் பெருமை குறைந்துவிட்டது. ஆங்கிலேய அரசாக்ஷியரிடத்தில் மேற்படி வர்ணாசிரம பேதங்கள் இல்லாததினால் ஸஸ்திரீகம் என்னும் சிகிச்சையைக் கைக்கொண்டு அதனால் மேன்மையடைகிறார்கள். ஸ்ரீ மாகாத்மா காந்தியவர்களும் மானிட ஜன்மத்தில் பேதகமில்லை, யாவரும் சகோதாராக பாவிக்கவேண்டுமென்று அவர் போதிப்பது இந்தியர்கள் நன்மையைப்பற்றிப் பெருமையடைவதற்கே ஒழிய வேறல்ல.

கடவுளினால் சிருஷ்டிக்கப்பட்ட மூலிகை, கிழங்கு வகைகளும், ரசகந்த பாஷாண உபசாரங்களான சரக்குகளின் குணம் எங்கும் ஒரு விதமே. அது வித்தியாசப்படவில்லை. இதை உபயோகிக்கும் தன்மையும் ரூபமும் வேறுபடுமே ஒழிய, அதன் குணம் வேறுபடாது. ஆதலால் ஆங்கிலேய சிகிச்சை, யூனானி சிகிச்சை ஆயுர்வேத சாஸ்திரத்தை அனுசரித்துவந்ததே. ஆங்கிலேய அரசாக்ஷியார் ஆயுர்வேத சாஸ்திரத்தை இப்பொழுதுதான் அறிந்து இதன் பெருமையை கொண்டாடி எங்கும் விர்த்தி செய்யும்பொருட்டு பலவாறு முயற்சிசெய்து வருகிறதை நாம் அறிந்திருக்கிறோம்.

கிரேதாயுகத்தில் மனிதர்கள் சத்தியவந்தர்களாகவும் நோயற்றவாழ்வையும் அடைந்தார்கள். திரேதாயுகத்தில் மனிதர்கள் இரண்டிலொரு பங்கு துர்நடத்தையால் வியாதிகளுக்குட்பட்டு ஆயுள் க்ஷீணமானார்கள். துவாபரயுகத்தில் பாவகிருத்தியங்களினால் பாதி ஜனங்கள் பாவிகளானார்கள். நிகழும் கலியுகத்தில் நாளுக்கு நாள் பாவகிருத்தியங்கள் அதிகரித்து நானாவிதமான வியாதிகள் உலகமெங்கும் பரவி நலிவுடன்ஜீவித்துஅற்பஆயுளாகப் போய்விடுகிறார்கள். இந்தியாவில் நம்முடைய முன்னோர்களினால்ஆயுர்வேதம்பிரபலப்பட்டிருந்த காலத்தில் அது எங்கும் பரவி அராபியர், யூதேயர், எகிப்து தேசத்தார், கிரேக்கர் முதலானவர்கள் இந்து வைத்தியத்தைக் கற்றுணர்ந்தார்களென்றுதெரிந்திருக்கிறது. நம்முடைய இந்தியாவை முகமதியர்கள் அரசாக்ஷி செய்யும் காலத்தில் பூர்வீக வைத்திய சாஸ்திரம் மறைந்தவிடம் தெரியவில்லை.

முகமதியர்களுக்குப்பின் நம் இந்தியா ஆங்கிலேய அரசாக்ஷியில் வந்தபிறகு அவர்கள்

வைத்தியமே எங்கும் பரவும்படி செய்துவிட்டதினால் இந்து வைத்தியத்தின்பேரில் பிரீதி வைக்கவில்லை. இந்தியர்களும் இதை கவனிக்கவுமில்லை. இதனால் அநேக இந்து வைத்திய கிரந்தங்கள் வெளிவரவில்லை.

ஆயுர்வேத சாஸ்திரங்கள் அநேக தவமுனிவர்களால் பிரிக்கப்பட்டு இரண்டு லக்ஷத்து ஐம்பதினாயிரம் கிரந்தங்கள் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. ஆயுர்வேத சாஸ்திரமானது ஆயுளைத் தெரியப்படுத்தும் நூலாகையால் இது சாமானியமல்ல. நமது லோக குருவாகிய ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியாரும் ஆயுர்வேத சாஸ்திரத்திற்கு முடிவு இவ்வளவென்று சொல்ல முடியாதென்று எழுதி இருக்கிறார். ஆதலால் இந்த சாஸ்திரத்தை கையாளுவது சாமானியமல்ல.

ஒவ்வொரு மூலிகைகளிலும் பஞ்சபூதங்களின் பேதங்களும் பஞ்சவர்ணங்களும் அமர்ந்திருக்கிறது. சில மகாணங்களில் சில மூலிகையானது கிடைக்கும். சில மகாணங்களில் கிடைக்காது. ஆனால் வெளி மாகாணங்ளிலிருந்து மூலிகைகளை வரவழைத்து உற்பத்திசெய்தால் அதன் ரூபங்கள் வேறுபடுகிறது. இதன் காரணம் என்னவென்றால் பூமியின் சாரத்தினுடைய தோஷமாகிறது. தேர்ச்சியடையாத சில வைத்தியர்கள் மூலிகையின் பெயரை உணராமல் கேள்வியினால் சிலரைக்கேட்டுத் தெரிந்துகொண்டு வைத்திய சிகிச்சை செய்வதினால் ஔஷதங்களின் பெருமை குறைந்து விடுகிறது. ஆதலால் ஆயுர்வேத பாடசாலையில் மூலிகைகளை வரவழைத்து உற்பத்திசெய்து மாணாக்கர்களுக்குக் கற்பித்துக்கொடுப்பது நன்மை.

இக்கலிகாலத்தில் பூமி சாரம் வேற்றுமைப்பட்டதினால் தேகசாரமும் வேற்றுமை அடைகிறது. முன்னோர்கள் செய்த கிரந்த நூல்களில் வியாதிக்கு தக்கவாறு குறிப்பிட்ட ஔஷதத்தை இப்போது பிரயோகித்தால் வியாதியை கண்டிக்காமல் தேகநிலைமைக்கு விரோதமாகிறது. முன்னாளில் மனிதர்கள் நூறுவயதளவு ஜீவித்திருந்தார்கள். இக்கலிகாலத்திலோ நாற்பது அல்லது ஐம்பது வயதுக்குள் யமனுக்கு இரையாகிறார்கள். இவர்களுக்குண்டாகும் சிசுக்களுங் கர்பகாரதோஷம் சம்பவித்து அற்ப ஆயுளாகப் போய்விடுகின்றன. பூமிசாரத்தையும் தேகசாரத்தையும் ஊகித்து வியாதிக்குத் தக்கவாறு என்ன சிகிச்சைவேண்டுமோ அதை அறியவேண்டும். இது தவறினால் ஆயுர்வேதத்தின் பெருமை குறைந்து விடுவதுமன்னியின் வைத்தியர்களுக்கு நல்ல கீர்த்தியுண்டாகாது.

# புருராஜன்.

ஒரு சரித்திர சம்பந்தமான நாடகம்.

ஸ்ரீமான் R. நாராயணஸ்வாமி ராவ், B.A.

(398-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 3.

களம் 1. ஜீலம் நதியின் கீழ் கரை.

புருராஜன்:—மகாவீரரே, ஜயதேவரே, சேனாதிபதி, கஜதேவரே, நமது சேனை யுத்தத்திற்குத் தயாராக இருக்கின்றதல்லவா?

எல்லோரும்:—ஆம்.

புருராஜன்:—எனினும் நமது குதிரைப் படைகளைக் காட்டிலும் யவனர்களுடைய குதிரைப் படைகள் மிகுந்த தேர்ச்சியுள்ளவைகளாகத் தோன்றுகின்றனவென்று நம் அப்பாளிகள் தெரிவிக்கின்றனர்.

மகாவீரன்:—அது உண்மையென்றே வைத்துக்கொண்டபோதிலும், நமது காலாட்



படைகளுக்கு எந்தச் சேனையும் ஒப்பாகாது.

கஜதேவன்:—மகாராஜ்! யவனர்களுடைய சேனையை யழிக்க நம் கஜங்கள் ஒன்றே போதுமானவை.

புருராஜன்:—நீங்கள் சொல்வது உண்மையே. எனினும் நாம் சொல்வதைக் கேளுங்கள். யவன சைன்யம் ஆற்றின் அக்கரையையடைந்துவிட்டதன்றோ? அச்சைன்யம் ஆற்றைக் கடக்கும்பொழுது ஒருவரேனும் தாக்கக்கூடாது. இக்கரை வந்து சேர்ந்த பிறகே யுத்தம் ஆரம்பமாக வேண்டும். ஏனெனில் அவர்கள் ஆற்றைக் கடக்கும்பொழுது அவர்களைத் தாக்குதல் வீரர்களுக்கழகல்ல. ஆற்றைக் கடக்கும்பொழுது போர் புரிதல் பேடிகளுடன் போர் புரிதலை யொக்கும். ஆகையால் அதை மறவாதீர்கள்.

எல்லோரும்:—மகாராஜாவின் ஆக்ஞைப்படியே.

(காட்சி முடிகிறது.)

அங்கம் 3.

களம் 2. ஜீலம் நதியின் மேற்கரை.

அலெக்சாண்டருடைய கூடாரம்.

அலெக்சாண்டர்:—மைத்ரேயா, ஹிரோதத்தா, பாலினி, நீங்கள் அறிந்தமட்டில் எதிரிகளின் சங்கியை யென்ன?

மைத்ரேயன்:—எதிரிகளின் சேனை மிகவும் திரண்டதாகத்தானிருக்கிறது.

ஹிரோதத்தன்:—யானைகள் மட்டில் 2000 இருக்கின்றனவாம்!

பாலினி:—காலாட்படைகள் 50,000மும் குதிரைப் படைகள் 5,000மும் இருக்கின்றனவாம்.

மைத்ரேயன்:—அதிலும் புருராஜனே சேனையை நேரில் நடத்தப் போகிறானாம். அவன் மகா பராக்கிரமசாலியென்று எல்லோரும் சொல்லுகின்றனர்.

அலெக்சாண்டர்:—அது எனக்குத் தெரியும். ஆனால் நாம் எத்தனை நாட்கள்தான் இப்படி இக்கரையில் நின்றுகொண்டு இருப்பது? ஆற்றைக் கடக்கும்பொழுது எதிரிகள் நம்மைத் தாக்கினால் நாம் ஒருபோதும் வெல்ல முடியாது. ஆகையால் தந்திரத்தால் தான் நாம் புருராஜனை வெல்லவேண்டும்.

மைத்ரேயன்:—மகாராஜ், நாம் ஆற்றைக் கடக்கும்பொழுது ஒருவரும் நம்மைத் தாக்கக்கூடாதென்றும் பூரா சைன்யமும் ஆற்றைக் கடந்த பிறகே யுத்தம் ஆரம்பிக்கவேண்டுமென்றும் புருராஜன் உத்தரவிட்டிருக்கிறானாம். இன்று காலை எதிரிகளைவிட்டு ஓடி நம்மிடம் அடைக்கலம் புகுந்த யானைப் படைத்தலைவன் இவ்விஷயத்தை என்னிடம் தெரிவித்தான்.

அலெக்சாண்டர்:—ஆ! புருராஜன் அப்படி உத்தரவு செய்யக்கூடியவனென்பதில் எள்ளளவும் ஐயமில்லை. எனினும், நாம் புருராஜனைத் துரோகம் செய்து நம்மைச் சேர்ந்திருக்கும் அம்மனிதன் சொல்லை நம்பக்கூடாது. அம்மனிதன் பெயரென்ன?

மைத்ரேயன்:—அவன் பெயர் கஜதேவன் என்பது. இப்பொழுது நம் சேனையில் சேர்ந்து போர் புரிவதற்காக ஆயுதபாணியாய் இருக்கிறான்.

அலெக்சாண்டர்:—அவனை என்முன்னிலைக்கு அழைத்து வாருங்கள்.

(கஜதேவனை யழைத்துவரல்.)

அலெக்சாண்டர்:—ஹே கஜதேவா! நீ எதிரிகளிடமிருந்து இப்பொழுது நம் கட்சியில் சேர்ந்துகொண்டவனா?

கஜதேவன்:—ஆம், மகாராஜ்.

அலெக்சாண்டர்:—எவ்வளவு காலம் நீ புருராஜனிடம் யானைப்படைத்தலைவனாயிருந்தாய்?

கஜதேவன்:—சுமார் பதினைந்து வருஷங்களாக.

அலெக்சாண்டர்:—15 வருஷங்களாக உன்னையாதரித்த அரசனை இப்பொழுது நீ கைவிட்டுவிடக் காரணம் யாது?

கஜதேவன்:—மகாராஜ், பராக்கிரமம் பொருந்திய தங்களிடம் ஊழியம் செய்யவேண்டுமென்று ஆவல் கொண்டேன்.

அலெக்சாண்டர்—ஹே, கஜதேவா! புருராஜன் உனக்கு யாதாகிலும் தீங்கிழைத்தானா?

கஜதேவன்:—இல்லை, மகாராஜ்.

அலெக்சாண்டர்:—(கோபங் கிளம்ப) மைத்திரேயா! இத்தகைய துரோகிகளை நம்பவே கூடாது. இன்று புருராஜனுக்குத் துரோகம் செய்தவன் நாளை நமக்கே துரோகம் செய்வான். இத்தகைய துரோகிகள் தேசத்திற்கே இழிவைக்கொண்டு வருபவர்கள். துரோகம் செய்வதின் பலன் எல்லோருக்கும் தெரியவேண்டுமாகையால், இவனை நம் சேனையின் முன் நிறுத்தி ஒவ்வொரு வீரனாக வந்து இவன் கன்னத்தில் ஓர் அறை அறையவேண்டும். அந்தப்படி நம் சைன்யத்திலிருக்கும் வீரர்களெல்லோரும் அறைந்தபிறகும் இவன் மண்டை வீங்கிச் சாகாமலிருப்பின், நம்மிடமிருக்கும் கைமோனியனெனும் பேடியைவிட்டு இவன் சிரசைத் துண்டித்துவிடச் செய்!

மைத்ரேயன்:—ஆக்ஞை!

(கஜதேவனைப் போர்வீரர்கள் இழுத்துச் செல்லல்.)

(ஓர் சாரணன் பிரவேசித்தல்.)

அலெக்சாண்டர்:—என்ன விசேஷம்?

சாரணன்:—நான் தெற்கே ஜீலம் நதியோரமாய்ச் சென்று இறங்குவதற்கு இலகுவான துறையைத் தேடிப்பார்த்ததில் இங்கிருந்து ஒன்றரைக் காதத்திற்கப்பால் ஒரு துறையிருப்பதைக் கண்டேன். ஆற்றைக் கடக்க அது மிகவும் வசதியானது.

அலெக்சாண்டர்:—அங்கே எவ்வளவு ஆழமிருக்கிறதென்பதைப் பார்த்தாயா?

சாரணன்:—மகாராஜ், நானே ஆற்றைக் கடந்து பார்த்தேன். ஒரே ஓர் இடத்தில் மார்பளவு ஆழமிருக்கிறது. மற்ற இடங்களில் இடுப்புக்கு மேல் ஆழமில்லை.

அலெக்சாண்டர்:—அப்படியெனிற் சரி. மைத்ரேயா, ஹிரோதத்தா, பாவினி, எல்லோரும் நான் சொல்வதைக் கேளுங்கள். எதிரிகளின் படை திரண்டிருப்பதால் நாம் தந்திரத்தாலேயே வெற்றியடைய வேண்டும். சைன்யத்தின் ஓர் பகுதியை இங்கேயே விட்டுவிட்டு நாம் சேனையுடன் இரவில் கரந்து இங்கிருந்து நகர வேண்டும். நாம் செல்வது எதிரிகளுக்குத்தெரியவேகூடாது. பொழுது விடியுமுன் நாம் அத்துறைக்குச் சென்று ஆற்றைக் கடந்து திடீரென்று அக்கரையில் தோன்றி புருராஜனைத் தோற்கடிக்கவேண்டும். அதே சமயத்தில் நாம் இங்கு விட்டுச் செல்லும் சேனையின் பகுதியும் ஆற்றைக் கடந்து எதிரிகளைப் பக்கத்தில் தாக்கவேண்டும். அதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யுங்கள்.

எல்லோரும்:—ஆக்ஞை.

(செல்லல்.)

(காட்சி முடிகிறது.)

### அங்கம் 3.

### களம் 3. ஜீலம் நதியின் கீழ்கரை.

(அலெக்சாண்டர் யுத்த சபை கூடியிருத்தல்.)

அலெக்சாண்டர்:—தளகர்த்தர்களே! எதிரிகளுக்குச் சந்தேகம் விளைவிக்காமலேயே நாம் புருராஜனை நோக்கிச் செல்லவேண்டும். யுத்தம் நடத்தவேண்டிய முறையைச் சொல்லுகிறேன் கேளுங்கள். பாவினி! நீ உன் காலாட் படைகளை அதோ அங்கிருக்கும் மலைத் தொடருக்கப்பால் இட்டுச் சென்று அதைச் சுற்றி எதிரிகளுடைய சேனையைத் தாண்டி திடீரென்று வலதுபக்கமிருந்து தாக்கவேண்டும். எதிரிகள் வலதுபுறம் திரும்பி யுத்தம் செய்வார்கள். அப்பொழுது ஹே! மைத்ரேயா, நீ உன் காலாட் படைகளை நேராக முனைந்து நடத்தி எதிரிகளைப் பின்னால் தாக்கவேண்டும். எதிரிகள் இருபக்கமும் தாக்கப்பட்டால் சிலர் தென் திசை திரும்பி உங்களுடன் யுத்தஞ் செய்வார்கள். அதே சமயத்தில் நாம் ஜீலம் நதியின் மேலக் கரையில் விட்டு வந்திருக்கும் சேனாவீரர்கள் ஆற்றைக்கடக்க, எதிரிகள் சேனையில் ஏகக் குழப்பமாகிவிடும்! நாம் வெற்றியடைவது திண்ணம்! நான் சொல்வது விளங்குகிறதா?

எல்லோரும்:—உணர்ந்தோம்.

அலெக்சாண்டர்:—ஹிரோதத்தா! எதிரிகளுடைய யானைப் படைகளே நமக்குச் சகாயம் செய்யக்கூடும். எப்படியெனில் யானைப் படையானது தலைவனின்றித் தவிக்கின்றதன்றோ? நீ உன் வில்லாட்களைக் கொண்டு யானைகளின்மீது அம்பு தொடுக்கச் செய். வீரர்களின்மீது அம்பு தொடுக்க வேண்டாம். யானைகள் காயப்பட்டால் வெருண்டு கோபங்கொண்டு எதிரிகளையே மிதித்துச் சின்னாபின்னப் படுத்தும்.

ஹிரோதத்தன்:—மகாராஜாவின் ஆக்ஞை.

அலெக்சாண்டர்:—புருராஜனுக்கு மட்டிலும் யாதொரு கெடுதலும் நேரிடாத வண்ணம் கூடியமட்டிலும் சாக்கிரதையாக இருங்கள். புருராஜனை உயிருடன் கைது செய்ய வேண்டும். புருராஜன் தற்கொலை செய்துகொள்ள யத்தனித்தாலும் யத்தனிப்பான். ஆனால் அவன் அங்ஙனம் செய்யவிடாதீர்கள்.

எல்லோரும்;—ஆக்ஞை.

அலெக்சாண்டர்:—வாருங்கள். யுத்தகோஷம் செய்துகொண்டே சேனை புறப்படட்டும். வாருங்கள். யவன வீரர்களைப் போன்ற வீரர்கள் இவ்வுலகிலேயேயில்லையெனும் உண்மையை நிலை நாட்டுவோம்.

(சேனை யுத்த கோலத்துடன் புறப்படுகிறது.)

(காட்சி முடிகிறது.)

(தொடரும்.)



## ஜனாபாயி சரித்திரம்.

ஸ்ரீமான் S. N. கோபாலகிருஷ்ணய்யர்.

### முதல் அதிகாரம்.

உலகத்தில் எத்தனையோ இடங்களில் புண்ய க்ஷேத்திரங்களிருப்பினும், விசேஷமாக நம் தாய்நாடாகிய இப்பரதகண்டத்தில்தான் அநேக திவ்விய க்ஷேத்திரங்களிருக்கின்றன. இவைகளுள் பண்டரிபுரம் என்னும் க்ஷேத்திரம் ஒன்று இருக்கிறது. இவ்விடத்தில் ஸ்ரீ பண்டரிநாதன் ரகுமாயியுடன் கூடியிருந்து கொண்டு பக்தர்களுக்கு இஷ்டதேவதையாக வரப்ரஸாதங்களளித்துக் கொண்டும் துக்கங்களையகற்றி இன்ப சுகமெய்துகொண்டும் இருந்து வருகிறார். அப்பண்டரிநாதனுடைய நாமத்தை உச்சரிக்காத நா என்ன நா!

"ஆகா! பாண்டுரங்கா! பரமபுருஷா! நித்ய கல்யாண! மங்களதாயகா! யான் என்னென்று சொல்லுவேன். நீ எனக்குச் சகல

பாக்கியங்களைத் தந்தும், புத்திர சந்தானம் என்னும் பாக்கியத்தைக் கொடுக்கவில்லை. நான் முன் ஜன்மத்தில் என்ன பாபம் செய்தேனோ? கருணா நிதியான நீ அதை க்ஷமித்துக்கொண்டு புத்திர சந்தானத்தை அளிக்கக்கூடாதா?" என்று ஒரு பிராமணன் ஆழ்ந்த பக்தியிலிருந்தவாறே கதறிக்கொண்டிருந்தான். பிறகு சிறிது நேரத்திற்குள் பிராமணனின் முன்னால் ரகுமாயி சமேதராக பாண்டுரங்கர் தோன்றி "ஓ! பக்தா! பயப்படாதே. நீ முன் ஜன்மத்தில் ஒரு ஆண் சிசுவை ஹத்தி செய்ததால், இஜ்ஜன்மத்தில் நீ ஆண் குழந்தையை அடையமாட்டாய். ஆனால் உன் மனைவி வயிற்றில் ஓர் புத்திரி ஜனிப்பாள். அவள் சர்வ லக்ஷணங்களமைந்தவளாகவும், பகவத் தியானத்தில் ஈடுபட்டவளாகவுமிருப்பாள்" என்று சொல்லிவிட்டு அந்தர்த்தியானமானார்.

குருடனுக்குக் கண் கிடைத்ததுபோல, அப்பிராமணனுக்கு இம்மொழிகள் காதிற்பட்டதும் மிகவும் சந்தோஷமடைந்து, ஆனந்த பரவசனாகி, தன் மனைவியிடம் வந்து உரைக்க, அம்மாதும் அதிக சந்தோஷமடைந்தனள். இப்படியாகப் பல நாட்கள் சென்றன. பல நாட்கள் மாதங்களாகவே, அம்மாதுக்கு "தன் வயிற்றில் ஒரு புத்திரி உண்டாவாள்" என்ற குறிகள் தோன்றின. தோன்றலும் தன் நாயகனோடு இனிய சம்பாஷணைகளைப் பேசுவதும், பகவானை வணங்கலும், ஆராதிப்பதும், தான தர்மங்களைச் செய்வதுமாகிய இச்சுபகாரியங்களிலே அவ்வுத்தமி கண்ணும் கருத்துமாயிருந்தாள். நாளடைவில், ஓர் சுபதினத்தில் இம்மாது அதிரூபலாவண்ணியமான ஒரு பெண்மணியைப் பெற்றாள். பதினோராம் நாள் புண்ணியாகவாசன சடங்கு முதலியன முடிந்த பின்னர், அன்று சாயந்திரம் நாமகரணம் செய்யவேண்டிய வழக்கமாதலால், ஊரிலுள்ளோரை அழைப்பித்து, எல்லோருக்கும் சந்தன தாம்பூலாதிகள் கொடுத்து உபசரித்தவுடன், அந்த இளங்குழவிக்கு "ஜனாபாயி" என்ற பெயர் கொடுத்தார்கள். அன்று முதல் இந்தக் குழந்தையை அதிகப் பிரியத்தோடு, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தார்கள்.

### இரண்டாம் அதிகாரம்.

ஜனாபாயிக்கு வயது பத்தாயிற்று. ஒரு நாள் இவளுடைய தாய் தகப்பன்மார்கள் பண்டரிபுரம் போய் பாண்டுரங்கனை சேவித்துவிட்டு வரவேண்டும் என்று எண்ணங்கொண்டார்கள். அவ்வெண்ணப்படியே சென்று திவ்விய தரிசனம் செய்தார்கள். ஜனாபாயியின் பக்தியை என்னென்று சொல்வது! ஆகா! இக்காலத்தில் ஜனாபாயியின் வயதிற்கு சமானமாயிருக்கின்ற பெண்மணிகளின் பேதமையை என்னென்று சொல்வது! இதுவும் காலக்கொடுமைதான்.

தனக்கு எப்பொருளும் சொந்தமில்லையென்றும், உற்றார், உறவினர், பெற்றோர் முதலியோர்கள் மாயையினால் உண்டாக்கப்பட்டவர்களென்றும், மோக்ஷ சாம்ராஜ்யத்தையடைய பண்டரிநாதனுடைய நாமமே வழியென்றும் தீர்மானித்துக்கொண்டாள். தாய் தந்தையர்கள் தங்கள் ஊருக்குத் திரும்புங் காலத்தில் ஜனாபாயி அவர்களைப் பார்த்து என்ன சொன்னாள் என்று நினைக்கிறீர்கள்? "ஓ தாயே! ஓ தந்தையே! நீங்கள் என்னைப் பெற்றதற்காக நான் நன்றிப்பாராட்டக் கடமைப் பட்டவளாயிருக்கிறேன். இருந்தாலும் என் மனமானது உங்களிடத்திலும், மற்றுமுள்ளோரிடத்திலும் அன்பு செலுத்துவதற்கு இடங்கொடுக்கவில்லை. பின்னை என் மனம் எதற்கிடம்கொடுத்ததென்று கேட்பீர்களாகில், அதற்கும் பதிலளிக்கச் சித்தமாயிருக்கிறேன். என் மனமானது பண்டரிநாதன்



190370

மேல் சென்றுவிட்டது. அவரைத்தான் நான் நம்பியிருக்கிறேன். இனித் தாயும், தந்தையும், உற்றாரும், உறவினரும், எம்பெருமான்தான். ஆதலால் நான் அவரைவிட்டு வரமாட்டேன்" என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டாள்.

பெண்ணினுடைய மனம் சாக்ஷாத் பகவானின்மேல் சென்றுவிட்டால் யார்தான் என்ன செய்ய முடியும்? ஒன்றும் முடியாது. ஆதலால் தம்பதிகளிருவரும் பெண்ணைப் பண்டரிநாதனிடம் ஒப்பித்துவிட்டு தங்கள் ஊர் போய்ச் சேர்ந்தார்கள். இப்பெண்மணி கொஞ்ச நாள் சந்நிதானத்திலேயே தன் காலத்தைக் கழித்து வந்தாள். பிறகு ஒரு நாள் அவ்வூர் பாகவதர் ஒருவர் அவ்விடம் வந்தார். அவர் மகா பக்திமான். அவ்வூரில் அவருக்கு மரியாதை அதிகம். அவர் பெயர் நாமதேவர். இவர் அப்பெண்மணியாகிய ஜனாபாயியைப் பார்த்து "ஏ! பெண்மணி, ஏன் இங்கு தனித்திருக்கின்றாய்? உன் தாய் தந்தையர் யாவர்? உன்னுடைய வரலாற்றைக் கூறுவாய்" என, அப்பெண்மணியும், "எனக்குத் தந்தை பாண்டுரங்கன், தாய் ரகுமாயி," என்று சொல்ல, நாமதேவர் அவளைத் தமது கிருஹத்திற்கு அழைத்துச் சென்று வளர்த்துவந்தார். இப்படி வளர்த்து வருகையில் கண்டோர்களனைவரும் இவளைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, இவளுடைய வரலாற்றைத் தெரிந்துகொள்ள விரும்பினார்கள். யார் கேட்டாலும் இவள் அதற்கு "நான் நாமதேவர் வீட்டடிமை" என்பாள்.

ஒருநாள் பண்டரிபுரத்தில் சரியான மழை பெய்தது, அப்பொழுது கோடைகாலம். அதிலும் இரவு. கோடை காலத்து மழை எப்படியிருக்குமென்று யாவருக்குந் தெரிந்த விஷயம். எங்கும் இருள் சூழ்ந்துகொண்டது. மின்னல் கண்களைப் பறித்தது. இடிமுழக்கமோ களிறு பிளறுவதுபோலவும், ஆண்சிங்கம் கர்ஜிப்பதுபோலவுமிருந்தது. மழை அந்தர்தாரையாகக் கொட்டிற்று. மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் இடிந்து விழும் ஸ்திதியிலிருந்தன. சில இடிந்தும் விழுந்துவிட்டன. அந்தோ! நாமதேவ பாகவதரிருந்த வீடு என்ன ஸ்திதியிலிருந்தது தெரியுமா? விழும் சமயம். அப்பொழுது பகவான் பார்த்தார். "ஓ! மோசம் போய்விட்டோம். நம்முடைய பரம பக்தனான நாமதேவருடைய கிருஹத்தைக்காக்காமலிருப்பது தர்மமன்று" என்று நினைத்து உடனே நாமதேவருடைய வீட்டிற்குச் சென்று அதைத் தன்னுடைய சக்கரத்தால் காத்தார்.

### மூன்றாம் அதிகாரம்.

நிசிராத்திரி வேளையில் இவ்விதம் மழை பெய்துகொண்டிருக்கையில், தன் வீடு என்ன நிலைமையிலிருக்கின்றதோ என்று பார்க்க வெளியே வந்த நம்முடைய பாகவதர் ஒரு மனுஷிய ரூபத்தைக் கண்டார். கண்டதும், அந்த ரூபத்தைப் பகவானென அறிந்த நாமதேவர், "இவ்விடம் என்ன செய்கிறீர்?" என்றார். உடனே பெருமாள் "ஆகா! நீயும் மெய் மறந்திருக்கின்றனையா? உனது குடிசையின் கதி உனக்குத் தெரியவில்லையா? உனது குடிசையழிந்தது. அதனைக் காக்காவிட்டால் உனது தாயாகிய ரகுமாயி என்னை நிந்திப்பாள்" என்றார். பேசிக்கொண்டிருக்கையில், நாமதேவரின் தாயாகிய குணாயியும் வெளியே வந்து அடிபணிந்தனள். சிறிதுநேரம் கழித்து மழையும் ஓய்ந்தது.

நாமதேவர், குணாயி, பெருமாள் மூவரும் உட்சென்றனர். ஜனாபாயி எதிர்கொண்டழைத்து வணங்கினாள். அவளுடைய அழைப்பிற்கு மனமுவந்து பகவான் உட்சென்றதும் நாமதேவர் பெருமானை வணங்கி "அடியேன் யாம கிருதார்த்தனானேன். தாங்கள் என் கிருஹத்தைக் காத்தற் பொருட்டு இவ்வாறு எழுந்

தருளியதற்கும், என் கிருஹத்தினுட்சென்று தங்கள் பாததூளியால் அலங்கரித்ததற்கும் நான் என்ன தவம் செய்தேனே! தாங்கள் அடியேன்மீது இரங்கி தங்கள் பக்தனாகிய எனது கிருஹத்தில் விருந்துண்டுசெல்லவேண்டும்" என்று சொன்னார். அவ்வேண்டுகோளுக்குப் பெருமாளும் சம்மதித்து, கோவிந்தன், விடலன், நாரணன், மகாதேவன் ஆகிய பிள்ளைகளும், நாமரும், மனைவியும், குணாயியும் ஒரு கலத்திலுண்டார்கள். இதைப் பார்த்த ஜனாபாயி "ஹே! ஆபத்பாந்தவா! அனாதரக்ஷகா! யான் என்ன குற்றம் செய்தேன். எப்பொழுதும் உம் திருநாமத்தையே உச்சரித்துக்கொண்டிருக்கிற எனக்கு அன்னமளிக்கக் கூடாதா? ஓர் ஆத்மாவை விட்டுவிட்டு நீர் உண்பதழகோ? எல்லாம் வல்ல நீரே இப்படிச் செய்தால், வேறு யார்தான் என்ன செய்ய மாட்டார்கள்?" என்று சொல்லித் துயருற்றாள். பண்டரிநாதன் இவ்வார்த்தைகளைக் கேட்டதும், தான் செய்தது பிசகென அறிந்து நாமதேவரைப் பார்த்து, "இவ்வமுது எனக்கு நன்கில்லை" என்று அதை விட்டெழுந்தார்.

இச்செய்தியைக் கண்ணுற்ற நாமதேவர், குணாயி ஆகிய இவர்களின் மன நிலைமை எவ்வாறிருக்குமென இதை வாசிக்கும் சகோதரர்களுக்கு நன்கு தெரியும். இருந்தாலும், அவர்கள் செய்தது தப்பல்லவா? மகா பக்தசிரோன்மணியான ஜனாபாயியை விட்டு உண்ணலாமா? இதை யறியாத அத்தம்பதிகள் ஜனாபாயிமேல் கோபங்கொண்டு அவள் உண்ணாததால் வந்ததென்று எண்ணி, பின்பு குணாயி பக்திமணியை அழைப்பித்து இவர்களுண்ட உச்சிஷ்டத்தைக்(எச்சிலை)கொடுத்தாள். இதை எச்சிலென்று அவமதிக்காமல், திருப்பாற் கடலில் கடைந்தெடுத்த தேவாமிருதமென்றே மதித்து அதை அன்புடன் தன் இருகரங்களினால் ஜனாபாயி வாங்கிக்கொண்டாள்.

ஜனாபாயி இதைக்கொண்டு பெருமாளை நோக்கி, "பக்தவத்ஸலா! எனது வீட்டிற்கு உண்ணவருக" என்று அழைத்தாள். அதற்குப் பெருமாள் இணங்கி, ஜனாபாயியைப் பார்த்து "ஏ! அம்மையே! நீ எங்களுடன் உணவு அருந்தாததால், நான் உண்ணவில்லை. எனக்கு அது நன்கில்லை. பக்திமணியாகிய நீ சும்மா இருக்க நான் உண்பது அழகல்ல. ஆதலால் எழுந்துவிட்டேன். இப்பொழுது எனக்கு மிகவும் பசியாயிருக்கிறது. என் பசியை ஆற்ற ஏதாவது பதார்த்தம் கொடு" என்று சொன்னார். இதைக் கண்ட நமது மாதுசிரோன்மணி வருத்தமுற்றாள். கைகளைப் பிசைந்தாள். யாது செய்வது என்று தெரியவில்லை. 'இச்சமயத்தில்நான்மிகவும் பாபியாயிருக்கிறேனே' எனத் துக்கித்து, பெருமாளைப் பார்த்து "விமலனே! என் கையில் வேறொன்றுமில்லை. அவர்கள் கொடுத்த எச்சில்தானிருக்கிறது. அது உமக்குத் தகுமா?" எனக் கேட்டாள். அதற்கு அவர் ஒரே பிடிவாதமாக அதுவே வேண்டுமென, பெருமாள் அவளுடன் உண்டு அவ்விடத்திலேயே சயனித்தனர்.

## நான்காம் அதிகாரம்.

இருவரும் சிறிதுநேரம் உறங்கினார்கள். சிறிதுநேரம்கழித்துப்பெருமாள் எழுந்து உட்கார்ந்து அவள் வீட்டிலிருக்கும் மாவரைக்கும் யந்திரக்கல்லைச் செவ்வனே துடைத்து, 'உன் வரவினை எதிர்பார்க்கிறேன். உன் வரவினை எதிர்பார்க்கிறேன்,' என்றுரைத்தார். இச்சப்தத்திற்கு ஜனாபாயி விழியாமை கண்டு அவளை எடுத்து உட்காருவித்தார். தன்னிரு கரங்களாலும் அவளுடைய அழகிய கூந்தலைக் கொஞ்சமேனும் சிக்கில்லாமல் திருத்தினார். ஒரு கூடையில் அரிசிகொண்டுவந்தார். ஜனாபாயியைப் பார்த்து, "ஏ! பக்திமணியே, நான் உன் பாடலைக் கேட்க ஆவலுள்ளவனாயிருக்



கிறேன், உன்னுடைய இனிய குரலால் என்னைச் சந்தோஷப்படுத்து. உனக்குப் பதிலாக நான் மாவை யரைக்கிறேன்," என்று சொன்னவுடன், ஜனாபாயியும் பாடத் தொடங்கினாள். ஆகா! அப்பாட்டுகளை என்னென்றுரைப்பது? பகவான் ஆனந்த பரவசராய்விட்டார்.

இவ்விருத்தாந்தங்களையெல்லாம் விழித்துப் பார்த்துக்கொண்டிருந்த குணாயி தன்புதல்வனிடம் கூறிவிட்டுத் தான் ஜனாபாயியிடம் வந்து, "ஏ! திருடி, உன்னிடத்தில் மாவரைக்க அரிசி ஏது? எங்கிருந்துகொண்டு வந்தாய்?" என்று பிரம்பெடுத்தடித்தாள். அப்படி அடிக்கும்சமயத்தில் சில அடிகள் மாவரைத்துக்கொண்டிருக்கும் பெருமாளின் முடிமேல் பட்டதும், "என்னை யடியாதே, யான் ஒரு குற்றமும் செய்யவில்லை. இந்த ஜனாபாயியின் அன்பினால் யான் இங்கு வந்து மாவரைக்கின்றேன்," என்று பெருமாள் குணாயியைப் பார்த்துச் சொன்னார். குணாயி, ஜனாபாயி பெருமாளைத் தன் வசப்படுத்திக்கொண்டாள் என்னும் எண்ணங்கொண்டு அதைவிட்டகன்று வருந்துகையில், பெருமாள் அரைத்த மாவைக் கூடையில் வாரிப்போட்டு நிரப்பி மீண்டும் சயனித்தார்.

ஜனாபாயி விடியற்காலத்தில் எழுந்ததும், பெருமாளை எழுப்பி "பண்டரிநாதா! நீர் இனிமேல் இங்கிருப்பது நியாயமல்ல. கோயிலுக்குப் போய்விடும். போகாமலிருப்பின் ஊரில் கலகமாய்விடும்," என்று சொல்லப் பகவானும் "விடிந்ததோ" என்ன எழுந்து நித்திரை மயக்கத்தால் தன்னுடைய பட்டுப் பீதாம்பரத்தையும், வயிரப்பதக்கத்தையும் விட்டுவிட்டு, ஜனாபாயியின் கந்தைத் துணியை யுடுத்திக் கொண்டு கோயிலுட் சென்றனர். விடிந்த பின்னர், என்றைக்கும்போல அர்ச்சகர் ஸ்நானம் முதலான நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு கோயிலுக்கு வந்து கதவைத் திறந்தார். பெருமாள் கந்தை யுடுத்தி யிருத்தலைக் கண்டார். இதைக் கண்ணுற்றதும் "ஓஹோ! உடுப்புக்கள் மாறியிருக்கின்றனவே. இது நம்முடையதல்ல, ஜனாபாயியின் உடையைப்போல் காண்கின்றதே. இதில் ஏதோ சூது இருக்கின்றது. இதை விசாரிப்போம்" என்று அவ்வர்ச்சகர் நாமதேவருடைய வீட்டை நோக்கிச் சென்றார்.

நாமதேவருடைய வீட்டைக் கண்டு பிடிக்க அவரால் முடியவில்லை. ஏன்? சென்ற இராத்திரி பகவான் அவருடைய கிருஹத்திற்கு வந்து, அழியும் ஸ்திதியிலிருந்த அவ்வீட்டைத் தன் சக்கராயுதத்தால் காத்ததால், அவ்வீடு புதிய நிலைமையை யடைந்துவிட்டது அர்ச்சகர் இப்புதிய கிருஹத்தினுட்சென்று ஜனாபாயியைக்கண்டு, "பெருமாளின் பட்டுப்பீதாம்பரமும், வயிரப் பதக்கமும். எங்கே? அவற்றை சீக்கிரம் கொடு. இல்லையென்று மறுப்பாயாகில் உன்னை எமபுரிக்கு அனுப்பி விடுவேன்," என்று விரட்டினார். என்ன செய்வாள் பாவம். இதுவும் பகவானின் ஒரு சோதனை தான். தாம் செய்த வினையைத் தாமே யனுபவிப்பார் என்பதுபோல, இது அவளுடைய ஊழ்வினைப்பயன்போலும். "ஸ்வாமி! அவைகள் என்னிடம் கிடையாது," என மொழிந்தனள்.

இதைக்கேட்ட அர்ச்சகர் அவள்மேற் சந்தேகங் கொண்டு, அவளுடைய துகிலைச் சோதித்தார். பீதாம்பரமும் பதக்கமும் அகப்பட்டன. "ஸ்வாமியின் சொத்தைத் திருடியதால், கொள்ளை யடித்ததால், அபகரித்ததால், இவளை ஒரு பக்தசிகாமணியென்று நினைப்பது தப்பு. இவளுக்குத் தண்டனை விதிக்கவேண்டும்" என்று சொல்லி இவளைக் கழுவேற்றக் கொண்டு போய்விட்டார்.

ஐந்தாம் அதிகாரம்.

கழுவேற்று மரம். ஆகா! கழுவேற்று மரமா? ஜனாபாயியையா கழுவேற்றப் போகிறார்கள்? கழுவேற்று மரத்தைப் பார்த்த மனிதர்களுடைய மனத்தின் பதைபதைப்பையும் என்னென்று சொல்வது? மகா பக்த சிரோன்மணியாயுள்ள, யாதொன்றையுமறியாத அருங்குழவியைப் போலுள்ள, ஸதா விட்டல நாமத்தையே உச்சரித்துக்கொண்டிருக்கிற ஜனாபாயி கழுவேற்று மரத்தை அணுகி, 'பண்டரிநாதா! பரம புருஷா! ஹே விட்டல! பாண்டுரங்கா! தீனதயாளு!' என்று சொல்லிப் பெருமாளைத் துதிக்கவே கழுமரம் தீருயது.

இதைக் கண்ணுற்றோரனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். இது சாக்ஷாத் பண்டரிநாதனுடைய செய்கையென நினைத்தார்கள். ஜனாபாயி திரும்பி வீடு வந்து வழக்கம்போல் பெருமாளைக்குறித்துத் ஸ்தோத்திரங்கள் செய்வதும், பாடல்களைப் பாடுவதுமா யிருந்தாள். பாடத் தொடங்கவும் பெருமாள் அவள்பேரிலுள்ள அன்பினால் அவள் பாடும் செய்யுட்களை எழுதி வந்தனர். ஒரு நாள் ஞானதேவர் என்னும் ஓர் பாகவதர் பெருமாளைத் தரிசிக்கவரப் பெருமாள் தனித்து எழுதுதல் கண்டு 'என்ன எழுதுகின்றீர்" என "ஜனாபாயியின் செய்யுட்களை எழுதுகிறேன்," எனக் கேட்டு வியந்தனர்.

பின்னொரு சமயம் ஞானதேவர் நாமதேவரைக் காணப் பெருமாளுடன் நாமதேவர் வீட்டிற்குச் சென்றார். அவ்விடமிருந்த பாகவதரை நோக்கி ஜனாபாயியைக் கூப்பிடுங்கள் என்றனர். அப்பொழுது ஜனாபாயி எட்டு நாளாகக் கிடக்கும் புழுத்த சாணத்தை பிதித்துத் துவைத்துக்கொண்டிருந்தாள். நாமதேவர் கூப்பிடவும் அவள் வந்து சேர்ந்தாள்.

ஞானதேவர் நாமதேவரைப் பார்த்து "நாமதேவரே, இன்று ஒரு சம்பவம் நடந்தது. ஜனாபாயியின் பாட்டைப் பெருமாள் எழுதக் கண்டேன்" என்று சொன்னார். பகவானும் தான் அவள் பாடுங் கவியில் அன்பு கொண்டதால் எழுதினதாகச் சொன்னார். இச்சொற்களைத் தவிரப் பின்னும், "உங்களில் ஞானதேவர் பாட்டை சச்சிதானந்தரும், நிவர்த்திபாட்டினை சோபானதேவரும், முக்தாபாயின் பாட்டை ஞானதேவரும், பரமவானந்தர் பாடலை விசோபாகேசரும், கூர்மதாசர், சுதேவர், நாமதேவர், ஜனாபாயி ஆகிய இவர்கள் செய்யுள்களை யானும் எழுதுக," எனக்கட்டளை தந்து, பெருமாள் கோயிலுக்குள் எழுந்தருளினர்.

ஜனாபாயி இவ்விதமாக அநேகம் பாடல்களை சொற்சுவை, பொருட்சுவையோடுகூடப் பாடவும் பகவான் அவற்றை மிக அன்போடு எழுதிவந்தார். பின்பு ஒரு நாள் இவள் மோக்ஷத்தை யடைந்தாள். பக்திமான்களுக்கு ஏற்பட்டிருக்கும் சுவர்க்கத்தோடு போய்ச் சேர்ந்தாள். ஆதலால் நாம் ஒவ்வொருவரும் மோக்ஷ சாம்ராஜ்யத்தையடைய வேண்டின் பகவானிடத்தில் பக்தி செலுத்தவேண்டும். கடவுள் ஒவ்வொருவருக்கும் நற்புத்தியைக் கொடுப்பாராக!

சுபம்! சுபம்!! சுபம்!!!



# உலகில் பெரிய ஞானாசாரியர்.

பண்டிதை ந. பத்மாசனியம்மாள்.

அமெரிக்காவில் பசடனா என்னும் இடத்திலுள்ள ஷேக்ஸ்பியர் சபையில் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் செய்த ஓர் உபந்நியாசத்தின் மொழிபெயர்ப்பு.

"ஒருவனோடொருத்தி யொன்றென் றுரைத்
திடுமுலகமெல்லாம்
வருமுறை வந்துநின்று போவது மாத
லாலே" என்றபடி.

கால சக்கரங்கடோறும் முறையே தோன்றியும் நின்றும் மறைந்துங்கொண்டிருப்பதே இப் பிரபஞ்ச இலக்கணம்.

இப்பிரபஞ்சமானது சமுத்திரத்தில் தோன்றும் அலையின் இலக்கணம் அமைந்ததாய், கால சக்கரங்கள் தோறும் இயங்கிக்கொண்டிருக்கின்றதென்பது இந்துக்களின் கொள்கை. இது தோன்றியெழுந்து உன்னத நிலையையடைந்தும், பின்பு மறைந்து, தாழ்ந்து அடங்கிக் கிடந்தும் இவ்விதமே முறைக்கு முறை எழுந்துந் தாழ்ந்துங் கொண்டிருக்கின்றது. பிரபஞ்சத்தின் இலக்கணம் எதுவோ அதுவே அதன் ஒவ்வொரு பாகத்துக்கும் அமையும். மனுஷ சாதியாரின் வாழ்வு தாழ்வும், ஒவ்வொரு தேசத்தாரின்வாழ்வு தாழ்வும் இவ்விதமேயென்பது சரித்திர சம்மதம். ஒவ்வொரு தேசத்தாரும் காலத்துக்குக் காலம் உயர்ந்துந் தாழ்ந்தும், ஓர் உயர்வின் பின் ஒரு தாழ்வை யடைந்தும், பின்பு அத்தாழ்விலிருந்து சக்தி வாய்ந்த ஒருயர்வை யடைந்துங்கொண்டிருக்கின்றனர். இவ்வித இயக்கம் நித்தியம். மார்க்க சம்பந்தமான உலகத்திலும், இவ்வித இயக்கமும் இவ்வித இயல்புமே யிருக்கின்றன. ஒவ்வொரு தேசத்தாரின் மதாசார ஜீவியத்திலும் இவ்விதமான வாழ்வு தாழ்வைக் காணலாம். ஒரு தேசத்தார் தாழ்வடையவே அவரோடு தொடர்புபட்ட ஒவ்வொரு பொருளும் கெடுறுவதுபோற்றோன்றும். பின் அத்தேசத்தார் உயர்வடையத்தொடங்குகையில் ஒரு பாரிய சக்திப் பிரவாகம் மோதும். சில வேளை இச்சக்திப் பிரவாகம் நிமிர்ந்து மோதி நாடெங்குந் தேக்கிப் பெருகுகின்ற மிகப் பெரிய வெள்ளமாயுமிருக்கும். அதுவனாகிய ஞானசூரியனை ஒரு மகாத்மா எப்பொழுதும் இச்சக்திப் பிரவாகத்தின் சிகரத்தில் உதயமாவார். இம் மகாத்மாவே இச்சக்திப் பிரவாகத்தையும் இத்தேசத்தாரின் உயர்வையும் உண்டுபண்ணும் முழுமுதலாயிருக்கின்றார். இனி இம் மகாத்மாவும் இத்தேசத்தாரின் நிலைமைக்கேற்றவராய், அவர்களின் நன்னிலைக்கும் உயர்வுக்கும் இன்றியமையாதனவான சக்திகளே உருவெடுத்தனபோன்று அவதரிக்கின்றார். இம்மகாத்மா தன்னுடைய மிகப் பெரிய வல்லமையைச் ஜனங்களிற் செறியச் செய்கின்றார். ஜனங்களின் பரிபக்குவநிலையே இவரையும் உருவெடுக்கப் பண்ணுகின்றது. ஆகவே ஒன்றுக்கொன்று காரண காரியமாய் நிற்கும் இவ்வித மகாத்மாக்களே இவ்வுலகின் பெரிய ஞானாசாரியர் ஆவார்! இவ்வுலகின் தீர்க்கதரிசிகளாவார்!! இவ்வுலகை வழிநடத்தும் தேவ தூதராவார்!!! தேவ அவதாரங்களுமாவார்!!!

உலகத்து ஒரேயொரு (தர்மமும்) மதமும், ஒரேயொரு தீர்க்கதரிசியும், ஒரேயொரு தேவ அவதாரமுமே இருக்கக்கூடுமென்ற விளக்கம் மானிடரிடத்தில் குடிகொண்டிருக்கக்காண்கின்றோம். ஆனால் இது உண்மையல்ல. பல அவ

தார புருஷர்களின் ஜீவிய விருத்தாந்தங்களை ஆராயுங்கால் அவரில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தைமட்டுமே நிறைவேற்றற்கு இவ்வுலகில் அவதரித்தாரென்பதை நாம் காணலாம். சுரங்களின் இணக்கமேஇசை நயத்தைப் பயப்பதன்றித் தனிச்சுரம் மாத்திரம் இசை நயத்தைப் பயவாது. ஆங்கதேபோல் இவ்வவதார புருஷர்களின் நற்கருமமே இவ்வுலகில் பொதுவான தருமத்தை நிறைவேற்றுமன்றி இவரில் ஒவ்வொருவரும் தனித்தனியே செய்த கருமம் மட்டுமே தருமத்தை நிறைவேற்றமாட்டாது. பற்பல ஜாதியாரின் ஜீவிய சரித்திரங்களைப் பார்க்குங்காலும், தாமே எவ்வழியிலும் மற்றெல்லா விஷயத்திலும் இவ்வுலகில் அதிபராயிருக்கப் பிறந்த ஜாதியில்லையென்பதைக் காணலாம். அவ்விதம் எவரும் சொல்லவும் துணியார். இவ்வுலகில் சகல ஜாதியாருள்ளும் பரிசுத்தம் அமைந்த சமரச நிலையை நாட்டுவதற்கு ஒவ்வொரு ஜாதியாருஞ் செய்து முடிக்க வேண்டிய ஒவ்வொரு பகுதியுமுண்டு. ஒவ்வொரு ஜாதியாரும் தாம் இவ்வுலகில் நிறைவேற்றுதற்காகப் பிறப்பெடுத்த வேலைகளும் செய்து முடிக்கவேண்டிய கடமைகளுமுள. பல ஜாதியாரும் செய்யும் கருமத்தின் சேர்க்கையே இவ்வுலகின் சமரச நிலையாகும்.

ஆகவே அவதார புருஷருள் யாரொருவராவது தருமத்தை வளர்ப்பதில் உலகம்முழுவதற்கும் தனி அதிபதியாய் என்றைக்குமிருக்க அவதரித்தவரில்லை. இவ்விதமாயிதுகாறும் அவதரித்தவருமில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியை மாத்திரமே நிறைவேற்ற அவதரித்தார். அவ்வப்பகுதிகளை நிறைவேற்ற அவதரித்த அவதார புருஷர்களே முடிவில் அவ்வப்பகுதிகளுக்கு இவ்வுலகில் அதிபதியாவரென்பது உண்மையே.

மனுஷனாற் போதிக்கப்பட்ட ஒரு மதத்தையே விசுவசித்தொழுகும் இயற்கையுடைய உலகத்தில் பிரளயாகலர், விஞ்ஞானகலர், சகலர் என்று சொல்லப்படுகின்ற மூவகை ஆன்மாக்களுள் விஞ்ஞானகலர், சகலர் என்னும் இருவகையினராய் பெரும்பாலர் பிறக்கின்றனர். நாம் கொள்கைகளையும் சித்தாந்தங்களையும் பற்றிப் பேச்சளவில்பேசியும் நம்அறிவிற்கேற்ப எண்ணியும் விடுகின்றோம். ஆனாலும் மனுஷ உருவத்தையுடைய ஒருவரின் மூலமாகவே நாம் அவற்றை உள்ளவாறுணர்வோமென்பதை நம்முடைய ஒவ்வோர் எண்ணமும் காட்டுகின்றது. சடத்தில் கட்டுப்பட்டிருக்கும் நாம் சடத்தை தரித்த ஒரு பரமபுருஷர் மூலமாகவே ஒரு கொள்கையை அறியலாம். கற்பனையைத் திருஷ்டாந்தத்தாலும் முன் மாதிரியாலுமன்றோ நாம் ஐயந்திரிபற விளங்கலாம். குருவும் அவர் தம் முன்மாதிரியுமின்றி நாம் உண்மையை யறிந்துவிடத் தக்க தேர்ந்த நிலையில் நாம் எல்லாரும் இருந்துவிட ஈசன் கிருபை பாலித்தாலோ! ஆனால் நாமோ அப்படியிருக்கவில்லை. ஆனது பற்றியே மனுஷரிற் பெரும்பாலார் தமது ஆன்மாக்களைக் கிறிஸ்தவரும், பௌத்தரும், இந்துக்களும் வழிப்படுங் கடவுள்களாகிய அவதார புருஷர்களது பாதாரவிந்தங்களில் ஒப்படைத்துவிட்டனர். முகமதியர் அவதார புருஷர்களை வணங்கும் வழக்கத்துக்கு முன்னாட் டொடங்கி பகைமை பாராட்டினர். அவர் தேவதூதரை யென்றாலும் தீர்க்க தரிசிகளை யென்றாலும் வணங்க அல்லது மேன்மைப்படுத்தவேண்டுவதில்லையென நடிப்பார். ஆயினும் உண்மையில் அவர்கள் பல்லாயிரக் கணக்கான நபிக்களை இன்றும் வழிபடுகின்றனர். உண்மைக்கு மாறாய் நாம் செல்ல முடியாது. நாம் மனுஷ உருவெடுத்த மகாத்மாக்களையே வணங்கும் இயல்



புடையராயும் கடப்பாடுடைவராயு மிருக்கின்றோம். அவரை வணங்குவதால் நன்மையுமுண்டே. "ஆண்டவரே, பிதாவை யெமக்குக் காண்பியும்" என்ற வினாவுக்கு உங்கள் தேவகுமாரன் என்ன விடை பகர்ந்தார் என்பதை நினைவு கூறுங்கள். "என்னைக் கண்டவன் பிதாவைக்கண்டவன்" என்று விடை பகர்ந்தார். கடவுளை மனுஷ்ரூபமாகவே மனோபாவனை செய்வோமன்றி வேறெவ்விதமாக அவரைப் பாவனை பண்ணவேல்லோம்? கடவுளை மனுஷத்தன்மையின் மூலமாகவே யறிகின்றோம். இவ்வறையிற் சுடரின் பிரபை யெங்கும் பரந்திருப்பினும் சுடரை யெங்குங் காணாது இத்தீபத்தில்மட்டுமே காண்பதுபோலச் சர்வ வியாபகரான கடவுளையும் கடவுட்டன்மை வாய்ந்த ஒரு மனுஷனிலும், அம்மனுஷன் மூலமாகவுமே நாம் கிரகித்துத் தரிசிக்க வேண்டிய நிலையில் தற்காலம் இருக்கின்றோம். ஞான சோதியைப்போன்ற இவ்வித களவதரிக்கவே அவர் மூலமாய் மனுஷர் ஈஸ்வர ஞானத்தை படைந்து கடைத்தேறுகின்றான். நாம் இவ்வுலகில் யாசகர்கள் போன்று பிறக்கின்றோம். அவர்களோ ஏகசக்கரவர்த்திகளென்ன அவதரிக்கின்றனர். நாம் அனாதைகள் போன்றும் வழி தப்பித் திகைக்கும் ஏழைகளைப்போன்றும் இவ்வுலகிற் பிறக்கின்றோம். நாம் இவ்வுலகிற் சென்மமெடுத்ததின் பயனின்னதென அறியோம். இன்று ஒன்றைச் செய்கின்றோம்; நாளை இன்னுமொன்றைச் செய்வோம். சுழல் காற்றில் அகப்பட்ட பஞ்சும் நீரில் மிதக்கும் துரும்பும் அங்குமிங்கும் மெற்றுப்படுவபோன்று நாமும் எம் வசமற்றவராய் எற்றுப்படுகின்றோம். இவ்வவதார புருஷரோ பிறக்கும்பொழுதே தாம் இவ்வுலகில் நிறைவேற்ற வேண்டியதெதுவோ அதுவே உருவெடுத்தாற்போன்று பிறக்கின்றனர் என்பதை நாம் சரித்திர வாயிலாய் அறிகின்றோம். கடவுளிடமிருந்து ஒரு தூதைக் கொண்டும் அதை நிறைவேற்றற்கென்றும் அவதார புருஷர் வருகின்றாராதலின் அவர் தாங்கொணர்ந்ததூதே யுருவாய் தம் நிலையினின்றும் எட்டுணையும் பிரிசார். தமது நிலையைத் தர்க்க முறையில் நிரூபிக்கவும் முயல்வர் விசேஷித்த மதாசாரியர் அல்லது தீர்க்க தரிசிகள் தாம் போதித்ததைத் தர்க்கஞ் செய்து சாதித்தனர் என்று நீவிர் எப்போதாவது கேள்விப்பட்டதுண்டோ? இல்லையே! இவருள் எவரேனும் அப்படிச் செய்ததே இல்லை. ஏன் இவர் தர்க்கம் பண்ணிச் சாதித்தல் வேண்டும்? உண்மையைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கின்றனர் நேரே கண்டு அநுபவித்தறிந்ததைப் போதிக்கின்றனர். தாம் காண்பதுமன்றிப் பிறருக்குங் காண்பிக்கின்றனர். "கடவுள் இருக்கின்றதுண்மையா" என்று நீவிர் என்னை வினவ, யான் "ஆம்" என்று விடை யளிப்பின், "என்ன நியாயங்கொண்டு ஆம் என்றீர்"? என்று நீவிர் உடன் வினவினீராயின், யான் அதை உங்களுக்குக் காட்டுவதற்கு என் திறமை யெல்லாஞ் சாதித்தும் முடியாது மலைப்பேன். கடவுள் உண்டாவென்று நீவிர் கிறிஸ்துவை வினவி யிருப்பின் அவர் "ஆம்" என்றே விடையளித்திருப்பர். "அதைத் திருஷ்டாந்தப் படுத்துவீராவென்று வினவுவீரேல் "இதோ என்னில் தேவனைப் பாருங்கள்" என்றே கூறியிருப்பர். ஆகவே ஈச்வரஞானம் தர்க்கஞ் சாதித்துப் பெறுவதொன்றன்று, நேரே கண்டு அநுபவித்து அறிவதொன்றாகும் என்பதைக் காணுங்கள். இருளில் தடவி யறிவது போன்றதல்ல. ஐயந் திரிபின்றிப் பிரத்தியக்ஷமாய்க் கண்டு அறிவதொன்றாகும். இதோ என் முன் இருக்கும் மேஜையை யான் பார்க்கின்றேன். இதை மேஜையென்று பிரத்தியக்ஷமாய்க் காண்கின்றமையால் இன்னொருவர் இதை மேஜையல்லவென்று எத்துணை வாக்குவல்லபமாய்ச் சாதிப்

பினும் யான் அதை நம்பேன். இம்மகாத்மாக்கள் தம் நிலையிற் பிரியாதிருத்தலின் காரணமுமிதுவே. தம் கொள்கைகளிலும், தாம் நிறைவேற்றத் தூது வந்த விஷயத்திலும் விசேஷமாய் தம்மிலும் பூரண விசுவாசமுடையாராய் இவ்வவதார புருஷர் இருந்தனர். எவருக்குமில்லாத பூரண சுயவிசுவாசம் இம்மகாத்மாக்களுக்குத் தங்களிலுண்டு. "கடவுளொருவர் இருக்கின்றார், என்பதை நம்புகின்றீரா? மறுபிறவியை நம்புகின்றீரா? இந்தக் கொள்கையை யல்லது அந்தக் கோட்பாட்டை நம்புகின்றீரா? என்று உலகர் பிதற்றுவர். அந்தோ! தன்னிற்றானே விசுவாசமில்லாத மனுஷன் பிறிதொன்றை விசுவசிப்பதெங்ஙனம்? என்னுடைய ஜீவியத்தையும் நிலையையும் நான் நம்புகின்றேனில்லை. யான் இருக்கின்றேனென்றும், என்னை யொன்றும் அசைக்கமாட்டாதென்றும் சில வேளைகளில் யான் எண்ணுவேன். அடுத்த கணமே யான் மரணத்துக்குப் பயந்து நடுநடுங்குவேன். யான் இறப்பில்லாத நித்தியன் என்று ஒருகால் எண்ணுவேன். அடுத்த நிமிஷத்தில் ஒரு மாயாவிகாரந் தோன்றவே யான் எங்கே யிருக்கின்றேன், என்னவாயிருக்கின்றேன், இறந்தேனோ, பிழைத்திருக்கின்றேனோவென்று தெரியாதவனாய் மயங்குவேன். ஒருகால் யான் பரிசுத்தனும் சன்மார்க்கனும் என்று எண்ணுவேன். அடுத்த கணத்தில் ஒரு விபத்து நேரிடவே யான் நிலைகுலைந்து தட்டழிவேன். இதற்கெல்லாங் காரணமென்ன? என்னில் விசுவாசமின்மையே! பூரண திடசித்தமின்மையே!!

ஆனால் இப்பெரிய மதாசாரியரில் ஒப்புவமையற்றதும் நாம் விளங்கற்கரியதுமான சுயவிசுவாசமிருப்பதை அறிகுறியாய்க் காண்பீர்கள். இவர்கள் தங்களையும் தங்கள் ஞானமார்க்கத்தில் அநுபவித் தறிந்த உண்மைகளைப் பற்றியும் போதித்ததை விளங்குதற்கு ஜனங்கள் அநேகமாயிரம் விபரீத அர்த்தங்களையும் வியாக்கியானங்களையும் ஏற்படுத்தி விடுகின்றது மிதுபற்றியே. இவர்கள் நிலையை நாம் அடையாதிருத்தலின் இவர்களை விளங்குதல் நமக்கு அரிதாயிருப்பது உண்மை.

இனிமேல், இம்மகாத்மாக்களின் வாக்கை வழிபட்டொழுக உலகம் கடமைப்பட்டது. இவர் தாம் நேரே கண்டு அநுபவித்தறிந்த உண்மைகளையே போதிக்கின்றாராதலின் இவர் வாக்கு மிகவும் சக்தி வாய்ந்ததாயிருக்கும். கேட்போரின் இதயத்தை ஊடுருவிவிடும். போதிப்பவரின் அநுபவக் காட்சியால் அமைந்த சக்தியைப்பெற்றிராத வெற்றுச்சொற்களின் பயன்தானென்னை? போதிக்கப் புகும் ஒருவரின் பாஷை நயம் எவ்விதமாயினென்? எவ்வித அலங்கார அணியுடனும் எத்துணை வாக்கு வல்லபமாயும் எத்துணை இலக்கண அமைதியாயும் பேசி விடினுமென்? இவைகளிலொன்றுமில்லை. உபதேசிப்பவர் உபதேசம் பெறுவோருக்கு ஞானத்தைக் கொடுத்தற்கு வைத்திருக்கவேண்டும். உபதேசம் பேசுவதும் கேட்டிருப்பதுமல்லவே. இது கொடுத்தலையும் ஏற்றலையும் குறிக்கின்றது. உபதேசிப்பவர் கொடுத்தற்குத் தன்னிடத்தேதும் வைத்திருக்கின்றாரா? வைத்திருந்தாராயின் இவர் கொடுத்தற்கும் அதிகாரமுடையவரே. ஒரு கொடையை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குக் கொண்டுபோகும் உபகரணங்கள் பலவுள. சொல்லும் ஒன்று. "பலவிதம் ஆசான் பாசமோசனம் தான் பண்ணும்படி நயனத்தருள், பரிசம், வாசகம், மானதமும்" என்றபடி சில இடங்களில் குரு சொற்பிரயோகமின்றி மானதமாயும் உபதேசிப்பர். "பதினாறு பிராயமுள்ள யௌவனம் பொருந்திய ஒரு குரு ஒரு விருக்ஷ நிழலில் வீற்றிருக்கக் கண்



டேன். அவருடைய சிஷன் எண்பது பிராயமுள்ள ஒரு வயோதிபன். குருமானத உபதேசமே செய்தார். சிஷனில் குடிகொண்டிருந்த அஞ்ஞானமும் அழிந்தொழிந்துவிட்டது என்று சம்ஸ்கிருதத்தில் புராதனமான செய்யுளொன்றுளது.

இவ்வித ஞானாசாரியர் சில சமயங்களில் பேசாது மௌனம் சாதிப்பினும் தம் மனதிலிருந்து ஏனையோர் மனதிற்கு உண்மையை மானதமாய்ச் செறியச் செய்வர். இவர்கள் தேவதூதுவராதலின் தமது தூதுமொழியை மிகுந்த அதிகாரத்தோடும் வற்புறுத்துவர். நாம் அவர்களுடைய ஆஞ்ஞையை அங்கீகரிக்கவும் வேண்டியவர்களோ. "போங்கள், போய் எத்திசையிலுமுள்ள சர்வஜாதிஜனத்துக்கும் யான் உங்களுக்குக் கற்பித்தவை யனைத்தையும் அநுசரிக்கும்படியான நாமத்தினால் போதியுங்கள்," என்று கிறிஸ்துநாதர் எவ்வளவு அதிகாரத்துடன் பணித்திருக்கின்றார் என்பதை உங்கள் விவிலியநூலில் வாசித்த ஞாபகமில்லையா? தாம் கொணர்ந்த தூதுமொழியில் இவருக்கிருந்த அத்தியந்த விசுவாசம் இவர் போதனைகளில் நன்கு விரவியிருத்தலைக் காணலாம். இவ்வித சுய விசுவாசத்தை உலகம் வழிபட்டொழுகும் எல்லா மகாத்மாக்களின் ஜீவியங்களிலும் காண்கின்றோம்.

இம்மகாத்மாக்களே இப்பூவுலகில் கண்கண்ட தெய்வங்களாவார். வேறு யாரை நாம் நம்மனதில் கடவுளை மனோபாவனை பண்ணப் பிரயத்தனப் பட்டு, ஈற்றில் கடவுளைக் குறித்து எம் அறிவளவிற்கேற்ப நாம் கொண்ட மனோபாவனை எவ்வளவோ குறைபாடுள்ளதாய் இருக்கின்றதென்றும், இவ்விதக் கடவுளை வழிபடுதல் தோஷமுடைத்தென்றும் நாம் காண்போம். உடனே இம்மகாத்மாக்களின் பூவுலக ஜீவியத்தை நோக்கி ஆராயுங்கால், இவர்கள் நாம் மனோபாவனை பண்ணிய கடவுளிலும் அதிவிசேஷமுடையாராயும் மிக மேம்பாடுடையராயும் இருப்பதைக் காண்போம். ஏனெனில் எனது யாதொரு சிறிய பொருளையாவது ஒருவன் திருடிவிடின் அவனைப் பின் தொடர்ந்து சென்று சிறைச்சாலைக்கனுப்பிவிடும் எனக்குக் கருணையைப் பற்றிய அறிவு எத்துணைப்பட்டதாய் இருந்துவிடும்? பொறையுடைமையைப் பற்றி எனது தேர்ந்த அபிப்பிராயம் யாதாயிருந்துவிடும்? எனது அறிவளவிற்கு மேலானதாயிருந்து விடுமா? இல்லையே எமது காயத்தையும் மனத்தையும்தாண்டி அப்பாற்பட்டு நிற்க எம்மில் யாரால் முடியும்? எம் வாக்கு காய மனோதீதராய் நிற்க எம்மில் யாரால் கூடும். நம்மொருவராலும் கூடாது. யான் என் ஜீவியத்தில் அன்புடைமையை விளங்கியவாறல்லாது வேறெங்ஙனம் போன்மைக்கிரகிப்பேன்? நாம் ஒருபோதாயினும் நேரே யநுபவித்தறியாத எதையும் கிரகித்தல்கூடாது. ஆகவே கடவுளை மனோபாவனை பண்ண முயலும் எம் முயற்சி எவ்விதத்திலும் வீணாகிவிடும். இம்மகாத்மாக்களிலோ நாம் ஒரு சிறிது கிரகித்தற்கேனும் அரிய அகண்டமான அன்புடைமையையும் பெருங்கருணையையும், தூய பரிசுத்தத்தையும் கற்பனையில் மட்டுமல்லாது உண்மையில் நிதரிசனமாய் நாம் காண்கின்றோம். இவர்களுடைய பாதத்தில் விழுந்து கடவுளே யென்ன இவர்களை யான் வழிபடுதல் வினோதமா? வேறு யார் யாது செய்து விடுவர்? எவ்வளவு பெரிதாய் பேசுகிறவனாயினும் இம்மகாத்மாக்களை வழி படாமல் ஈடேற எண்ணும் ஒருவனைப்பார்க்க யான் விரும்புவேன். வெற்றுப் பேச்சிற் பயனில்லை. கடவுளைப்பற்றியும் அவருடைய அருவுருவ இலக்ஷணத்தைப்பற்றியும் ஏனைய குணங்களைப் பற்றியும் பேசுதல் நன்றே. ஆயினும் மானிட

உருவைத் தரித்த இக்கடவுள்களே எச்சாதியாருக்கும் எத்தேசத்தாருக்கும் உண்மையில் கண்கண்ட தெய்வங்களாவர். இத்தெய்வீகம் வாய்ந்த மகாத்மாக்கள் மானுடன் மானுஷீக நிலைமையில் இருக்கும் பரியந்தம் அவனால் வணங்கப்படுவர். வணங்கப்பட்டும் வந்தனர். இவ்வவதார புருஷரே எம்மை உண்மைக்கு வழிநடத்தும் ஊன்றுகோலாயிருக்கின்றனர்: ஆதாரவாயிருக்கின்றனர். மலையிலக் காயுமிருக்கின்றனர். வாக்கு மனோதீதமான ஒரு வஸ்துவாற் பயன்றனென்னை?

யான் உங்களுக்குச் சொல்லப் புகுவதின் சாரம் யாதெனின், இதற்கு முன் அவதரித்த அவதார புருஷர் எல்லோரையும் வணங்குதற்கும் இனி மேல் வரவிருக்கும் அவதார புருஷரை வணங்குதற்கு ஆயத்தமாயிருத்தற்கு மியலு மென்பதை என்னுடைய ஜீவியத்தில் கண்டு தேர்ந்துவிட்டேனென்பதே. பிள்ளை எவ்வித வேற்றுடையை யணிந்துவந்தபோதிலும் உடையின் வேற்றுமையால் மயங்கிவிடாது மாதா தன் பிள்ளையைக் கண்டு விடுவாள். அப்படிக் காணமுடியாதவள் அப்பிள்ளையின் மாதாவல்லள். சத்தியத்தையும், தெய்வீகத்தையும், கடவுட்டன்மையையும் இவ்வுலகில் அவதரித்த அவதார புருஷரில் ஒருவரைமட்டுமே கண்டோமென்று அபிப்பிராயப்படும் நம்மை கடவுட்டன்மையை உண்மையில் யாவரிலேனும் காணாதவரென்றே யான் சொல்வென். நீவிர் இராச்சிய தந்திரத்தில் நும் கோள்கைக்கிணங்கிய கட்சியாரோடு சார்ந்து நிற்பதுபோன்று மதக்கோட்பாட்டிலும் நுமக்கிணங்கிய ஒரு சாராரோடு சேர்ந்து அவர் போதனையைப் பகுத்தறிவின்றிப் பருகியிருக்கின்றீர்களேயன்றி மதத்தை உள்ளவாறு உணர்ந்தவ ரல்லீர். நன்னீரை அணித்தேயிருப்பினும் உவர் நீர்க்கிணறென்று தம் முன்னோரால் தோண்டப்பட்டதாதலின் அவ்வுவர் நீரை உவந்து பருகும் பேதை மதியினரும் இவ்வுலகிற் சிலருளர். மானுடரை மதத்துவேஷங்காரணமாய் அநியாயமாய் வருத்தியதும் மூதாட்டிகளை மாய வித்தைகாரிகள் (Witches) என்று எரித்ததும் மார்க்கத்திலேயுள்ள குற்றத்தாலல்லவென்பதையும் இராச்சிய தந்திரமே (Politics) இவையெல்லாவற்றிற்கும் மூலகாரணமாய் இருந்ததென்பதையும் யான் என் அநுபவத்தில் அறியலாயினேன். மார்க்கங்கள் இத்தகைய செயல்களை எப்போதாவது செய்யவே யில்லை. இராச்சிய தந்திரத்தை மார்க்கமென்று மயங்குவீராயின் இக்குற்றம் யார் மாட்டுள்ளது?

ஆகவே என்னுடைய மதாசாரியார் ஒருவருமே உண்மையான அவதார புருஷர் என்று யாரொருவரேனும் வாதிப்பதிழுக்கு. இப்படிச் சொல்பவர் எட்டுணையேனும் மார்க்க உண்மையை யுணராதவர். மதவிவகாரங்களும், கொள்கைகளும், சித்தாந்தங்களும் மார்க்கமன்று. கடவுளை எம் முள்ளத்தினுள்ளே கண்டு அடைந்து அநுபவித்துணர்தலே மார்க்கமாகும். சர்வமும் தானாய் நிற்கும் பரமாத்மாவோடு ஐக்கியபட்ட ஆத்ம ரூபமாய் யான் இருக்கிறேன் என்ற அநுபவக்காட்சியே மார்க்கமாகும். பிதாவின் வீட்டிக்குச் சென்றான். அப்பிதாவின் குமாரன் கண்டும் அக்குமாரர் பிதாவின் குமாரரென்றும் அறியாமலிருப்பதெங்ஙனம்? பிதாவின் குமாரரை யங்கீகரியாதவன் பிதாவின் வீட்டை யடைந்தவனல்லன். எவ்வித மாறுவேடம் பூண்டிருந்தபோதிலும் எவ்வித வேற்றுடையை யணிந்திருந்தபோதிலும் மாதாவானவள் தன் பிள்ளையைக் கண்டுவிடுவள். எக்காலத்திலும் எல்லாத் தேசங்களிலுமிருந்த பெரிய மகாத்மாக்களை யங்கீகரித்தொழுகி அம்மகாத்மாக்கள் சிறிது பேதமில்லாதவர் என்பதைக் கண்டறியுங்கள். யாரில் உண்மையான மார்க்க உணர்வு உதயமாகின்றதோ, யாருக்குச் சமாதி நிலை கிடைக்கின்றதோ, அதாவது ஜீவாத்மாவுக்குப் பரமாத்ம அநுபவம் நிதரிசனமாய் கிடைக்கின்றதோ அவரின் மனம் தம் கட்டைமீறி விரிந்து சத்தியத்தை எவ்விடத்துங் காணும் ஆற்றலைப் பெறும்.

(தொடரும்.)

# சிந்தாமணி யபிமானிகளுக்கு.

சகோதர சகோதரிகளே!

எல்லாம் வல்ல இறைவனருளால் "சிந்தாமணி" யைத் தாங்களனைவரும் அன்புடனங்கீகரித்துப் பத்திரிகையை ஆதரிப்பதுபற்றி வந்தனமளிக்கின்றேன். "சிந்தாமணி"க்கு முதல் ஆண்டு பூர்த்தியடையும் சமயமாதலால் சந்தாதார்கள் தயவுசெய்து இனியும் தாமதமின்றி சந்தாவை யனுப்பிவிடக் கோருகிறேன். சந்தாவனுப்பும்படி பன்முறை கடிதமெழுதுதல் பணச்செலவுடன் சிரமமானதாயுமிருக்கிறது. அயல் நாடுகளிலுள்ளவர்களுக்கு சந்தாவனுப்பும்படிக் கடிதமெழுதுவதில்தபால்சார்ஜ் இரட்டிக்கின்றது. அயல்நாட்டிலுள்ள சிலர் தபால் சார்ஜின் உயர்வை யறியாதவர்களாகப் பத்திரிகையை வி. பி. யில் அனுப்பிவிடும்படி எழுதுகிறார்கள். அவ்விதமனுப்பினால் வருஷ சந்தா ஆறுரூபாயுடன் தபாற்கூலி மூன்று ரூபாய் ஏற்படுமென்பதைக் கவனிக்கக் கோருகிறேன். உள்நாட்டில் தபாற்கூலி சாமானியமாக விருப்பினும் ஆர்டர்படி வி. பி. யனுப்பும்போது சந்தாதார் பெற்றுக்கொள்ள முடியாத பல அசௌகரியங்கள் அச்சமய மேற்பட்டு வி. பி. திரும்பிவந்துவிடுகிறது. பிறகு சந்தா நேயர் எழுதும் அநுதாபக் கடிதத்தால் வி. பி. யனுப்பிய நஷ்டத்தை ஈடு செய்துகொள்ள முடிவதில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். "சிந்தாமணி" சந்தாதார்களில் ஏற்கனவே அனுப்பியிருப்பவர்கள் தவிர்த்து மற்றவர்கள் ஒவ்வொருவரும் இது கண்டு தமது சந்தாப்பணத்தைச் சிறிதும் தாமதமின்றி அனுப்பிவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். அருமையான பல வியாசங்களை இடமின்றி நிறுத்திவிட வேண்டியுமிருக்கிறது. தற்போதுள்ள 64 பக்கங்களுடன் அதிகமாக சில பக்கங்களைச் சேர்த்தல் படிப்பவர்களுக்கு உபயோகமாகவும் வியாசமெழுதுவோருக்கு உற்சாககரமாகவு மிருக்குமென்பதில் தடையில்லை. இது நிமித்தம் பத்திரிகாபிமானிகள் எனக்கு இருவழிகளில் உதவிபுரிதல் அவசியம். (1) தங்கள் சந்தாபணத்தைத் தாமதமின்றி அனுப்பிவிடுதல். (2) ஒவ்வொரு சந்தாதாரும் தமது நண்பர் ஒருவரையேனும் "சிந்தாமணி"க்கு சந்தாதாராக்கிப் பணமனுப்பச் செய்தல். இவ்விருவழிகளிலும் "சிந்தாமணி" யபிமானிகள் உதவிபுரிவார்களானால் பத்திரிகையை இதே சந்தாவில் எட்டு பாரங்களுடன் இன்னம் சில பாரங்களையும் வெளியிட நிச்சயித்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். "சிந்தாமணி" பணத்தட்டினால் சோர்வுறாமலும் சமீபத்தில் அபிவிருத்தியடைவதற்கும் ஆதாரமாக சந்தாதார் அனைவரும் இவ்வேண்டுகோள்களைக்கவனித்துத் தமது சந்தாப்பணத்தைச் சற்றும் தாமதமின்றி உடனே அனுப்பிக்கொடுத்து ஆதாவளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சகோதரி வி. பாலம்மாள்,

"சிந்தாமணி" பத்திராதிபர்.

# இந்திய ஸ்திரீரத்னங்கள்.

(368-ம் பக்கத் தொடர்ச்சி.)

(ஸ்ரீமான் C. N. அனந்த சுப்பன்.)

இந்த வியாசத்தில் உருக்குமணியின் சரித்திரத்தை சற்று ஆராய்வோம்.

இந்தியப் பதிவிரதா சிரோன்மணிகளில் உருக்குமணியும் ஒருவர். உருக்குமணியின் சரித்திரத்தால் நமது சகோதரிகள் கற்றுக்கொள்ள வேண்டிய நீதிகள் பலஉள.

முற்காலத்தில் விதர்ப்ப நாட்டை பீஷ்ம மகாராஜன் என்று ஓர் அரசர் ஆண்டு வந்தார். இவர் காலத்தில் ஜனங்களுக்குச் சிறிதும் கஷ்டமில்லாமல் இருந்தது. உண்ண உணவு விசாரமும் உடுக்கத் துணி விசாரமும் இல்லாமல் இருந்தது; சீரும் செழிப்பும் பெற்றிருந்தது. பீஷ்ம மகாராஜன் குடிகளுக்கு ஏதாவது இன்னல்கள் நேர்ந்தால் அவைகள் தமக்கு நேர்ந்ததாக எண்ணி உடனே பரிகாரம் தேடும் ஆற்றல் படைத்தவர். சகல பாக்கியத்தையும் பெற்றிருந்தார். இவருக்கு ஐந்து ஆண்களும் ஒரு பெண்ணும் இருந்தனர். இந்தப் பெண்ணை மிகவும் அருமையாக வளர்த்து வந்தார். பெண்ணுக்கு உருக்குமணி என்று பெயர். உருக்குமணியும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள்.

ஸ்திரீகளுக்கு அழகு முக்கியமல்லவா? உருக்குமணிக்கு அப்பொழுது வயது 15 அல்லது 16 இருக்கலாம். இவளது அழகை நாம் இத்தன்மையானதுதான் என்று கூறமுடியாது. ஸ்திரீகளின் எல்லோருடைய அழகையும் ஒருங்கே அமையப்பெற்றவள்போல் காணப்பட்டாள். ஸ்திரீக்கு அழகுமட்டும் இருந்தால் போதுமா? குணமும் உயர்ந்ததாய் இருக்க வேண்டும். ஒரு ஸ்திரீயானவள் பார்வைக்கு அழகாக இருந்து குணத்தில் 'சாக்ரடீஸ்' மனைவியைப்போல் இருந்தால் அந்த அழகினால் ஒருவிதமான பிரயோஜனமுமில்லை என்றுதான் சொல்லவேண்டும். சுருங்கச் சொல்லுங்கால் ஸ்திரீகளுக்கு அழகும் அழகிற்குத் தகுந்த குணமும் அவசியமாய் இருத்தல் வேண்டும். உருக்குமணிக்கு இவை இரண்டும் பொருந்தி இருந்தன. ஒருபெரிய ராஜாவினுடைய புதல்வி; —அதுவும் செல்வப் புதல்வி; வேண்டியமட்டும் ஐசுவரியத்தைப் பெற்றவள்: தனக்குக் கீழ் அநேக சேடியர்கள் இருக்கிறார்கள்; இவ்வளவு பாக்கியத்துடன் உருக்குமணி விளங்கினாலும் அவளிடம் பொறுமை என்னும்படியான குணம் குடிகொண்டிருந்தது. அதிகாரதோரணை என்பது சற்றும் அவளிடத்தில் இல்லை. உலகத்தில் துக்கம் என்பது இப்படித்தான் இருக்கும் என்பதைச் சற்றும் தெரியாதவள். தன்னுடைய நேரத்தை எல்லாம் சேடியர்களிடம் விளையாடுவதிலும், தன்னுடைய தாய் தந்தையர்கள், அண்ணன்மார்கள் முதலியவர்களிடம் விளையாடுவதிலும் செலவழிப்பாள்.

பீஷ்ம மகாராஜனிடம் பற்பல தேசங்களிலிருந்து பற்பலர் வந்துகொண்டேயிருப்பார்கள். அவர்களின் ராஜ்யத்தைப்பற்றியும் அரசர்களைப் பற்றியும் பேசிக்கொள்வார்கள். தங்கள் ராஜ்யங்களில் நடக்கும் விசேஷ சங்கதிகளைப்பற்றியும் ஆலோசிப்பார்கள். இவ்வாறு வரும்படியானவர்களில் சில பெரியோர்கள், உத்தம பக்தர்கள், தவமுனிவர்கள் முக்கியமானவர்கள். இந்த உத்தமமான பெரியோர்கள் அநேகமாய் ஸ்ரீகிருஷ்ணபகவான் வசிக்கும் இடமாகிய துவாரகையிலிருந்து வருபவர்கள்.



ஸ்ரீகிருஷண பகவான் இருப்பிடத்திலிருந்து விதர்ப்ப தேசத்திற்கு வரும் ஒவ்வொருவரும் துவாரகா நாயகனாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானைப் பற்றியே போற்றி வருவார்கள். பகவானது பெருமையைப்பற்றியே பேசி வருவார்கள். பகவானது அழகைப்பற்றி வர்ணிப்பார் சிலர்; பகவானது திவ்விய குணாதிசயங்களைப்பற்றி போற்றுவார் பலர்; பகவானது பெருமையை சந்தோஷிப்பார் அநேகர். பகவானுக்கு இன்னும் விவாகமாகவில்லை என்றும் பகவானை விவாகம்செய்துகொள்பவளின் பாக்கியமே பாக்கியம் என்று கூறுவர் இன்னும் பலர். இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் மற்றும் சிலர் ஸ்ரீகிருஷ்ணபகவானுக்குச் சரியான நாயகி உருக்குமணியே உருக்குமணிக்குச் சரியான தலைவர் ஸ்ரீகிருஷ்ணனே என்றும் கூறுவார்கள்.

இவ்வாறு பகவானைப்பற்றிப் புகழ்ந்து கூறிக்கொள்வதையும் அவரது பெருமையையும் உருக்குமணி கேட்டுக்கொண்டே இருந்தாள். பகவானிடத்திலேயே உருக்குமணியின் மனமானது சென்றுகொண்டிருந்தது. பகவானையே தன் தலைவராகக் கொள்ளுதல் வேண்டுமென்று தனக்குள்ளேயே தீர்மானித்துக்கொண்டாள். பகவானை யன்றி வேறு எவரையும் தன் காதலராகக்கொள்வதில்லை என்ற ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். என்றிலும் பின்வருமாறு அடிக்கடி நினைப்பதுண்டு. "என்ன ஆசையைக் கொண்டிருக்கிறேன்! என் நிலைமை என்ன? பகவானது பெருமை என்ன? கேவலம் அற்பப் பெண்ணாகிய நான் சகல ஐசுவரியங்களுடனும் பேரும் புகழுடனும் வாழும் துவாரகைக்குக் காவலராய் இருக்கும் அவரை மணப்பது சுலபமான காரியமா? அவர் சாமானிய அரசால் [illegible] நான் நினைப்பது [illegible] அல்ல என்று கொள்[illegible]ற்கு? பகவான் அல்லவோ அவர்: மனித சிருஷ்டிக்கு போஷணத்தைக் கொடுக்கும்படியானவரல்லவோ? இந்த உலகமே அவரால் சிருஷ்டிக்கப்பட்டது என்றால் பின் என்ன அவரைப்பற்றி கூறவிருக்கிறது? முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவானாகில் அவன் என்ன பலனை அடையமுடியும்? அதுபோலல்லவோ என்னுடைய அற்ப முயற்சியானது இருக்கிறது?" மற்றும் சிறிது நேரத்திற்கெல்லாம் "ஆம்! ஏன் நான் பகவானைக் காதல் கொள்ளுதல் கூடாது? அவரை யன்றி நான் வேறு எவரையும் நாயகராகக் கொள்ளுவதில்லை என்று தீர்மானித்திருக்கிறேன். ஆகையால் நான் அவரை அடைய அவசியம் ஏதாவது பிரயத்தனம் செய்தே தீரவேண்டும். நான் உண்மையான பரிசுத்தமுடைய மனமுடையவள் என்பதுவாஸ்தவமாய் இருந்தால், கற்பின்பெருமையானது என்னிடம் உண்மையாக இருக்குமானால் நான் பகவானை அவசியம் மணாளராகக் கொள்வேன். அவ்வாறு அவருடன் வாழ்ந்தாலன்றி என்னுடைய மனமானது சாந்தியை அடையாது; ஓர் நிலையிலிருக்காது. என் தகப்பனார்பெரியோர்கள் சொல்லின்படி என்னை அப் பகவானுக்கே கொடுத்து விவாகம் செய்துவைப்பாரா என்பதுதான் சந்தேகமாகவிருக்கிறது. என்னவாயினும் அக்கருணாநிதியையே அடைந்து தீரவேண்டும்" என்று நிச்சயம் செய்கொண்டாள். பீஷ்மன் தன் மகளுடைய மனதை அறிந்துகொண்டார். ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கே உருக்குமணியைக் கொடுத்து கடிமணம் செய்து முடிக்கவேண்டுமென்ற ஆற்றல்படைவாத்தயிருந்தார். என்றாலும் அவருடையமகனாகிய உருக்குமி என்னும்படியானவனுக்குப் பகவான் விரோதியாகையாலே தம்முடைய எண்ணத்தை மாற்றவேண்டியதாயிற்று. உருக்குமிக்கு உருக்குமணியை ஸ்ரீகிருஷ்ண பகவானுக்குக் கொடுக்க மனமில்லை. தன் நண்பனாகிய சிசுபாலனுக்குத்தான் உருக்குமணியைக்

கொடுத்து விவாகம் செய்விக்கவேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தான்.

உருக்குமியினுடைய இஷ்டத்தின்படி நடக்கவும்பெற்றோர்களுக்கு ஒருவிதத்தில் கடமைப்பட்டிருந்தார்கள். அவனுடைய எண்ணத்தை மாற்ற முடியாது என்று கண்டனர். இவன் அபிப்பிராயத்தை மாற்றவும் முடியாது என்பதைக் கண்டு உருக்குமணியை சிசுபாலனுக்கே கொடுத்து விவாகம் செய்வது என்று தீர்மானித்துக்கொண்டு விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் நடந்து வந்தன. இங்கு இவ்வாறு இருக்க உருக்குமணி தனது தமையன் செய்த ஏறபாட்டைக் குறித்து மனம் வருந்தினாள். தான் மனதில் கொண்டிருப்பதை தன் தமயனிடம் வெளியிட அஞ்சினாள்; வெட்கமும் அடைந்தாள். சிசுபாலனை மணக்கச் சற்றும் இஷ்டப்படவில்லை. தன் மனதை உலக கர்த்தாவாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கே அர்ப்பணம் செய்த அவள் எவ்வாறு வேறு ஒருவனை விவாகம் செய்துகொள்ள விரும்புவாள்? இதுதான் உத்தம பதிவிரதைகளின் லக்ஷணம். தன் மனதில் இருக்கும் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவும், பெற்றோர்களின், தமயன் உட்பட, மனதிற்கு வெறுப்புத் தோன்றாமலும் இருக்க என்ன சூழ்ச்சி செய்யலாம் என்பதைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தாள். கடைசியில் ஓர் எண்ணம்தோன்றிற்று. அரண்மனையில் இருக்கும் ஒரு பிராமணரை அழைத்து தன் நிலைமையை அவரிடம் விவரித்து, பகவானுக்கு ஒரு லிகிதம் எழுதி அந்தணர் மூலமாக அனுப்புவது என்று தீர்மானித்துக்கொண்டாள். உடனே அந்தணரை அழைத்துவரும்படி சேடியர்களுக்கு உத்திரவிட அவர்களும் அவ்வாறே அழைத்து வந்தனர். ஓர் அழகிய கடிதம் எழுதி அதை அவ்வந்தணர் கையில் கொடுத்து ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் சேர்ப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு மேலும் அவரைப்பார்த்து கூறியதாவது, "நான் தங்களுக்கு சிரமமான ஒருவேலையைக் கொடுப்பதற்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன். தாங்கள் அடியேன்மீது கிருபைவைத்து என் நிலைமையை பகவானுக்கு எடுத்துரைக்க வேண்டுகிறேன். நான் எவ்வாறு பகவானுக்கே என்னுடையஉயிரை அர்ப்பணம் செய்துவிட்டேன் என்பதையும், எவ்வாறு சதா காலமும் பகவானது திருநாமத்தையே உச்சரித்துக் கொண்டிருக்கிறேன் என்பதையும் விளக்கமாகக் கூறவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன். தவிரவும் நான் ஸ்ரீ கண்ணபிரானை என் காதலராக அடையும்வரை சரியாக உண்ணுவதில்லை; உறங்குவதும் இல்லை என்பது தங்களுக்குத் தெரியாததன்று. இதையும் பகவானிடம் கூற வேண்டும். தவிரவும் என்னை சிசுபாலனுக்குக் கொடுத்து விவாகம் செய்யவேண்டும் என்று என் பெற்றோர்கள் நினைத்துக்கொண்டு விவாக ஏற்பாடுகள் செய்து வருகிர்கள் என்பதையும், நான் பகவானை நினைத்து நினைத்து எவ்வாறு மெலிந்து உயிர்விடும் தருவாயில் இருக்கிறேன் என்பதையும் தெரிவியுங்கள். வேத சாஸ்திரங்களை உணர்ந்த தங்களுக்கு, எல்லாவிஷயங்களையும் அறிந்த தங்களுக்கு, இனி என்ன உரைக்கப் போகிறேன்? "என்று சொல்லி அனுப்பினாள். அந்தணரும் சரி என்று ஒப்புக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணபகவானது இருப்பிடத்தை நோக்கிச் சென்றனர். மதுரையை அடைந்தார். பகவானது அழகிய அரண்மனையைக் கண்டு களித்தார். உட்சென்றார்: பகவான் சிங்காசனத்தின்மீது வீற்றிருப்பதைக் கண்டு ஆனந்த பரவசம்கொண்டார். நீலமேகசாமள வர்ணனைக் கண்டு யார்தான் மயங்கமாட்டார்கள்? அந்தணரைக் கண்டதும் பகவான் சிங்காசனத்தினின்றும் எழுந்தார்; பிராமணோத்தமரை வறவேற்றார்: யோகக்ஷேமங்களை விசாரித்தார்: ஆசனத்தில் அமரச்செய்தார். வந்த விசேஷத்தை என்ன[illegible]று கேட்டார்.

ஆவணக் காப்பக

## நாடார்குல மித்திரன்.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப்

பிரசங்க சபையினின்று

திங்கட்கிழமை தோறும் வெளிவரும்

வாரப் பதிப்பு.

சுதந்திரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!

சூ. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்.

சந்தா விவரம்.

இந்தியா, பர்மா, சிலோன், முதலிய உள் நாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ. 4.

சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ. 5.

## தேசபக்தன்

ஓர் தேசியத் தமிழ்ப் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளி தோறும்

கொழும்பிலிருந்து வெளி வருவது.

ஆசிரியர் கோ. நடேசய்யர்.

சந்தா விவரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| கொழும்பில் ஆள் மூலம் வருஷம் 1-க்கு | ரூ. | 9 | 0 | 0 |
| ஷை ஷை 6-மாதம் | ரூ. | 5 | 0 | 0 |
| கண்டி ஆள் மூலம் வருஷம் 1-க்கு | ரூ. | 11 | 0 | 0 |
| ஷை ஷை 6-மாதம் | ரூ. | 6 | 0 | 0 |
| பிறவிடங்கள் (தபால் மூலம்) வருஷம் 1-க்கு | ரூ. | 13 | 0 | 0 |
| பினாங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்களுக்கு வருஷம் 1-க்கு | ரூ. | 16 | 0 | 0 |

தனிப்பிரதி 6-சதம்.

சந்தாத் தொகை முன்பணமாகவே கட்டவேண்டும். 6-மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விலாசம்:—

மானேஜர்,

தேசபக்தன் ஆபீஸ்,

நெ. 43, ரெக்ளமேஷன் ரோடு, கொழும்பு.

## சுதந்திரன்.

பிரதி பானுவாரந்தோறும்

வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

வருஷ சந்தா இந்தியாவிற்கு ரூ. 6.

சென்ற 7 வருஷ காலமாய் நம் நாட்டு முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய செல்வ விருத்திக்கான விஷயங்களும், மனிதர்களுக்கும், கால் நடைகளுக்கும் அவசியமான சுகாதாரம், நோய் பரிகாரம், மதுவிலக்கு முதலிய வியாசங்களுடன் வெளிவந்துகொண்டிருந்த "வர்த்தக மித்திரன்" தற்காலப் போக்கை யனுசரித்து "சுதந்திரன்" என்னும் பெயருடன், 3 வருஷ காலமாய் இராஜீய விஷயங்கள், மகாத்மா அவர்களின் உபதேசம், இந்தியர் முன்னேற்ற மார்க்க விவரங்கள் முதலிய விஷயங்களுடன் வெளி வருகின்றது. சுயராஜ்ய சுதந்திரம் விரும்புவோர் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையை வரவழைத்துப் படித்து சகோதர சகோதரி யாவரும் சுயராஜ்ய மடைந்து சுக ஜீவிகளாக வேண்டப் படுகிறது.

விலாசம்:—சுதந்திரன் ஆபீஸ்,

தஞ்சாவூர்.

SWATHANTHRAN OFFICE, Tanjore.

## லோகோபகாரி.

முப்பது ஆண்டுகளாய் நிலவி வரும்

வாரப் பத்திரிகை.

ஆசிரியர்:

பாலி-சு. நெல்லையப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிர் பெற்றுப் பொற்படைவதற்குப் பாடுபடும் ஒரு பத்திரிகை. லோகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் சமாச்சாரங்களெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். பாரத தேசம் சகல அம்சங்களிலும் சுயராஜ்யம்பெற்று லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பது லோகோபகாரியின் நோக்கம்.

வருஷ சந்தா:

உள்நாடு ரூ. 4. வெளி நாடு ரூ. 6.

"லோகோபகாரி"

பத்திரிகாலயம்,

கோமளேசுவரன்பேட்டை, சென்னை,

MADRAS.

## திலகவதி.

தற்கால இந்து குடும்ப வாழ்க்கைக்குரியவற்றை எடுத்துரைக்கும் நாவல். சென்னை சர்வ கலாசாலை போதகாசிரியர் ராவ் ஸாகேப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A. M. R. A. S. F.R.H.S. அவர்கள் முன்னுரையுடன் கூடியது. Cr. 8vo. 320பக்கம் கொண்டது. விலை ரூ. 1-4.

Apart from the interest of its cleverly planned story, it is also useful to acquaint the average reader with the problems of political and social refrom facing the country at the present day. As such it deserves to be placed in the hands of our school going boys and girls as well as the non-English knowing people at home who can thus utilise their leisure moments to good advantage.—*The Hindu* (27-8-20).

இவ்வினிய நாவல், முக்கியமாய்ப் பிராமண குடும்பத்தைப் பற்றியதாயினும், நம்மவரில் எல்லாச் சாதியாரும் ஆவலுடன் வாசித்துப் பயன் பெறக்கூடியது. கதாநாயகியான திலகவதி, தனது இயற்கை அறிவாலும் சிறுவயதில் நல்வழியிற் பயக்கப்பட்டதாலும் பலவித கஷ்டங்களையும் மேற்கொண்டு கடைசியில் சுகமாக வாழ்வது, வெகு அழகாகவும், உருக்கமாகவும் எளிய நடையில் கூறப்பட்டிருக்கின்றது. பெண்கள் கடமை, பெற்றோர் கடமை, சதிபதிகளின் அன்பு, இளம் விதவைகள் பாதுகாப்போரில்லாமையால் கஷ்டம், உண்மை நட்பு, பேராசையால் வரும் பெருங்கேடு, முதலியவைகள் இந்நூலில் மிகுந்த திறமையுடன் காட்டப்பட்டிருக்கின்றன. இத்தகைய நூல்களை நம்மவர் அனைவரும் வாசித்தல் அவசியம். அப்போதே அவர்கள் நம்ஜன ஸமூகம் இருக்கும் நிலைமையை அறிந்து அதனைச் சீர்திருத்த முடியும். ஸகோதரி பாலம்மாளவர்கள் இவ்வித நவீனங்களை எழுதி வெளியிடுவதால் நந்தமிழ் நாட்டிற்குப் பேருபகாரம் செய்கின்றனர்.—ஸ்ரீராமகிருஷ்ண விஜயம். ரக்தாக்ஷி, தை.

## தேவதத்தன் அல்லது தேசசேவை.

தேசாபிமானத்தையும் தொழிலாளரிடத்தில் அன்பையும் உண்டாக்கக்கூடிய ஒரு இனிய தமிழ் நாவல். Royal 16mo. 64 பக்கம். விலை. அணா 5.

தேவதத்தன் என்னும் ஒரு கதைப் புத்தகம் பாலம்மாள் அவர்களால் எழுதியது வரப்பெற்றோம். இதில் தொழிலாளிகளுக் குண்டாகும் துன்பம், முதலாளிகளுக்கிருக்கும் இரக்கமின்மை, பட்டவேட்டையாடும் பாமரத்தனம், வேசிகள் செய்யும் மோசம், அடுதுக்கெடுப்போர் அக்கிரம சூட்சி, பரோபகாரிகளின் பாங்கு முதலியவைகளைப்பற்றிச் சுருங்கக் கூறப்பட்டிருக்கிறது.—வர்த்தகமித்திரன். (16-1-21).

சகோதரி வி. பாலம்மாள், சிந்தாமணி பத்திராதிபர் லவிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.


# SIDDHA KALPA MAKARADHWAJA

(REGISTERED)

## THE WONDERFUL DISCOVERY IN THE MEDICAL WORLD

**FOR ALL "ACUTE" & "CHRONIC" DISEASES**

ONE PHIAL OF 60 PILLS (for a Complete Cure).

**Price Rs. 10. (Rs. TEN). V. P. Extra.**

## THE MADRAS AYURVEDIC PHARMACY, LTD.

44, Govindappa Naick St., G. T., Madras.

# “சிந்தாமணி”

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ் பத்திரிகை. 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது.

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த காகிதம். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபால் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 10. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 10 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் அதிகமாக உலாவுமாதலால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள்:—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ. 10; அரைப் பக்கம் ரூ. 6½; ல் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனமாய் அனுப்பப்படும்.

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியோகமான விகிதங்கள். விவரத்துக்குக் கண்ட விலாஸத்துக்கு எழுதவும்.

மானேஜர்,

சிந்தாமணி ஆபீஸ்,

விவேகாச்ரமம், ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

## சிந்தாமணியைப் பற்றிய சில அபிப்பிராயங்களின் சாராம்சம்.

சகோதரி வி. பாலம்மாளை ஆசிரியாகக் கொண்ட “சிந்தாமணி”யின் பெருமையை என்னென்று கூறுவது? தாய் நாடு.

இது தமிழ் நாட்டு மகளிரின் ஈடேற்றத்தையே பிரதானமாகக்கொண்டு உழைக்க முன்வந்திருக்கும் ஒரு சிறந்த மாதாந்தப் பத்திரிகை. இதன் ஆசிரியை வடமொழியிலும் தென்மொழியிலும் அரிய நூல்களை இயற்றியவர். இந்து சாதனம்.

கல்வியிலும் தேசத்தொண்டிலும் சிறந்து விளங்கும் இவ்வம்மையாரை பத்திரிகாசிரியராகக் கொண்டுவரும் ஒரு பத்திரிகையால் நந்தமிழ் மக்களுக்கு அளப்பரிய நன்மைகள் உண்டாகுமென்பதை நாம் கூறவேண்டுவதில்லை. போதுஜன மித்திரன்.

நம் ஸகோதரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்களால் வெளியிடப்படும் இச்சஞ்சிகையின் முதல் மலரின் முதல் இதழ் ஒன்று வரப்பெற்றோம். நஞ்சகோதரியின் பொதுஜன உழைப்பையும் அன்னாரின் சாமர்த்தியத்தையும் பற்றித் தமிழ் நாட்டினர்க்கு முன்னமே அதிகம் தெரியுமாதலின் நாமொன்றும் விசேஷித்துக் கூறத் தேவையில்லை. தாருல் இஸ்லாம்.

இதன் அதிபராயும் ஆசிரியராயும் இருக்கும் ஸ்ரீமதி பாலம்மாள் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லமை படைத்தோரென்பது அன்னார் இயற்றியிருக்கும் “அயோத்யாம சரிதம்” முதலிய அரிய நூல்களால் விளங்கும். எமக்குக் கிடைத்த முதல் இதழில் பெண்களைப்பற்றிய அரசியல் விஷயங்களும் சுகாதார சம்பந்தமாகிய பல நலந்தரும் வியாசங்களும் சுவைததும்பும் சின்னஞ் சிறு கதையும் வேறுபலபோற்றத் தக்க விஷயங்களும் ஆசிரியை அவர்களாலும் மற்றும் பல அறிஞர்களாலும் வரையப்பட்டுள்ளன. தேசோபகாரி.

# Some Select Opinions on "Chinthamani."

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.—*West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

***

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, idiomatic. Its articles are well cenceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

***

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue. Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras*.

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini*.

***

The women of our Tamil land owe you a deep debt of gratitude for having started "Chinthamani" on their behalf. This is the first paper to be solely and wholly edited by a South Indian lady. I feel highly certain that through the medium of your excellent journal, you are capable of achieving much practical good to your sisters of this land.—*Pandit Asalambigai Ammal*.

***

The correct and clear grasp of our present-day needs, which she possesses to a remarkable degree, will easily enable her to diffuse valuable knowledge to the general public (women in particular) through the excellent medium of her priceless "Chinthamani."—*Podujanamitran*.

Printed by Srinivasa Varadachari & Co., 4, Mount Road, Madras.
and Published by Sister V. Balammal, Sullivan's Garden Road, Mylapore, Madras. 2,000—5-5-1925.

# மதிப்புரை.

## இராஜபுத்திர விஜயம்.

ஆசிரியர் ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்.

அனுப்பிய ஆசிரியர்க்கு வந்தனம்.

" இராஜபுத்திர விஜயம் " என்னும் இவ்வரிய நூலானது க்ஷத்திரிய மரபினரான இராஜ புத்திரரது அற்புத சரித்திரத்தையும் அவர் தம் வீரப் பிரதாபத்தையும் விளக்கிக் கூறுவது. இதில் இராஜ புத்திரரின் சரித்திரத்தைக் கூறுமுகமாக, நம் பாரத தேசத்தின் ஆதிகால—அதாவது கிறிஸ்து பிறந்தது முதல் 1800-ம் வருஷம் வரையிலுள்ள—சரித்திரம் ஆதியோடந்தமாகக் கூறப்படுகிறது.

ராஜபுத்திரர் என்போர் ஆதிகால சூரிய, ர, அக்கினி குலத்தைச் சேர்ந்த வீர புரு ள் ; நம் தேசத்தின் வடபாகத்திலே ன்றுதொட்டு முடிவேந்தராகவும் வெற்றி ராகவும் விளங்கியவர்கள் ; இப்பாரத நாட் ல படை கொண்டுவந்த அன்னியரை அண் டாது அருஞ்சமர்புரிந்து வந்தவர்கள் ; ரியாச் சிறப்பும் இணையிலா ஆற்றலும் டைத்தவர்கள் ; மானமே பெரிதென த்து அதனைப் போற்றி வந்தவர்கள் ; சுதந் ரமே தேசமக்களின் பூஷணமெனமதித்து வந் தார்கள் ; அதுபற்றி உடல், பொருள், ஆவி மூன்றையும் ஒருங்கே வழங்கிய உத்தமர்கள். அவர்களுடைய சரித்திரத்தைப் படிப்பின் வீரச் சுவையும் தேசபக்தியும் பெருகி வளரும்.

இத்தகைய இராஜ புத்திரர்களின் சரித்திர மே பத்மினி, பிருதிவிராஜன், கிருஷ்ணகுமாரி, தாராபாய் முதலிய சரித்திர சம்பந்தமான நாவல்களுக்கும் தாயகமாகும். இதுவரையில் இராஜபுத்திரருடைய சரித்திரம் ஆதியோடந்தமாகத் தமிழில் வெளிவரவில்லை. இப்போது தான் முதன்முதலாத முதல்பாகம் வெளிவந்துள்ளது. இதர ஐந்து பாகங்களும் விரைவில் வெளிவரும். பல ஆங்கில சரித்திர நூல்களை ஆழ்ந்தறிந்து தக்க ஆராய்ச்சியின்மேல் எழுதப்பட்டுள்ளது.

முன்னம், இந்தியாவும் சுய ஆட்சியும், ஆரியசரித்திரம், மகாத்மாவின் சரித்திரம், திருக்குறள் நீதிக்கதைகள் முதலிய பல நூல்களைத் தமிழில் எழுதிய பிரபல ஆசிரியரான ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய ஐயரே " இராஜபுத்திர விஜயம் " என்னும் இந்நூலையும் எழுதியுள்ளார். இவர் முன்னம் பல வருஷகாலம் " சுதேசமித்திரனில் " உதவி ஆசிரியராக இருந்தவர் ; சென்னைத் தொழிலாளரின் நலத்துக்காகப் பாடுபட்டவர் ; அப்பால், சென்னை, செங்கற்பட்டு ஜில்லாக்களிலே தேசத் தொண்டு புரிந்து, கூடலூர் சிறையிலே ஒரு வருஷம் வாசம் பண்ணியவர். சிறையிலிருந்த காலையிலே இந்நூல் எழுதப்பட்டதாகும்.

இராஜபுத்திர விஜயத்தின் முதல் பாகத்திலுள்ள வீர ராஜ சிங்கங்களின் சரித்திரம் ஒவ்வொன்றும் படிக்கப்படிக்கப் பரம உருசிகரமாயிருக்கும். இவ்வுண்மையை மதித்தே, பிர பல பத்திரிகைகளும், பிரமுகர்களும் " இராஜ புத்திர விஜயம்" என்னும் இந்நூலுக்குச் சிறப்பான மதிப்புரைகளை அளித்துள்ளார்கள்.

மிக அழகிய சித்திரப் படங்களுடன் உயர்ந்த காகிதத்தில் மிக நேர்த்தியாக " இராஜபுத்திர விஜயத்"தின் முதல்பாகம் அச்சடிக்கப் பட்டுள்ளது. தமிழ்மக்கள் அனைவரும் இலகுவாக வாங்கவேண்டுமென்று கருதியே விலை மிகவும் சரஸமாக வைக்கப்பட்டுள்ளது.

இப்புத்தகம் வேண்டுவோர் மயில்வாகன் கம்பெனி, புத்தக வியாபாரிகள், 32, ஐயப்ப செட்டி தெரு, மண்ணடி, மதராஸ், என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

முதல்பாகத்தின் விலை ரூ. 1—4—0 தபால் கூலி வேறு.

***

பாரத தேசீய கீர்த்தனைகள், காந்தி சரித்திரக்கும்மி என்ற இருபுஸ்தகங்களை யனுப்பியுள்ள இதன் ஆசிரியை ஸ்ரீமதி எஸ். ரங்கம்மாளுக்கு வந்தனமளிக்கிறோம். தேசீய கீர்த்தனைகள் தேசபக்தர்மீதும் கடவுள்மீதும் பல ராகங்கள் பாடப்பெற்றிருக்கின்றன. ஸ்ரீமதி எஸ். ஸ்ரீனிவாச அய்யங்காரின் முகவுரையுடன் யொலிகின்றது. (கிரவுன் பக்கம்) 58 பக்கங்கள் கொண்டுள்ள இதன் விலை அணா 6. காந்தி சரித்திரக்கும்மி டெமி சைஸில் 24 பக்கங்களுள்ளது. விலை அணா 4. ஸ்ரீமான் எ. ரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களால் முகவுரை எழுதப்பட்டிருக்கிறது. பெண்கல்வியானது பழையமுறையில் தலையெடுக்கக்கூடிய இச்சந்தர்ப்பத்தில் ஆசிரியை எஸ். ரங்கம்மாளின் பிரசுரத்தைத் தமிழர் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்து இத்தகைய பல நூல்கள் வெளியிடுமாறு உற்சாகப்படுத்துவார்களென நம்புகிறோம். கிடைக்குமிடம் 64, பாணுத்தெரு, புரசைவாக்கம், சென்னை என்றெழுதி ஆசிரியரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

***

ஊழியன். ஏற்கனவே தனவைசிய ஊழியன் என்ற பெயருடன் காரைக்குடியின் நின்றும் வெளிவந்து கொண்டிருந்த வாரப் பத்திரிகை குரோதன ஆனி, 31 தேதிமுதல் "ஊழியன்" என்ற பெயருடன் முன்னிலும் உருவத்தில் வளர்ச்சி பெற்றுச் சித்திரப்படங்களுடனும் வெளி வருகின்றது. ஊழியன் என்ற பொதுப் படையாயுள்ள பெயருக் கேற்பப் பொது ஜனங்களுக்குபயோகமான விஷயங்கள் முன்னிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. சமூக ஊழியம், தேச ஊழியம் இரண்டிலும் முன் நின்று தொண்டுபுரியும் "ஊழியன்" தமிழ் மக்களனைவரும் மொழியின் வளர்ச்சியை யுத்தேசித்தும் ஆதரிக்கக்கூடியவாறு அமைந்திருத்தல்போற்றத்தக்கதாம்.

## சிந்தாமணிபற்றிய சில அபிப்பிராயங்கள்.

இம்மாத சஞ்சிகையின் முதலாவதாண்டின் ஒன்பதாவது இதழ் எமது பார்வைக்கு வந்துளது. இதன் ஆசிரியர் சகோதரி ஸ்ரீமதி பாலம்மாளை அறியாதவர் தமிழ் நாட்டிலிலர். பெண்களின் முன்னேற்றத்திற்குரிய பல நல்ல வியாசங்களும், கதைகளும் இதில் காணப்படுகின்றன. இதைத் தமிழ் நாட்டார் ஒவ்வொருவரும் ஆதரித்தலவசியம்:—குடி அரசு, 24-5-25.

மாதந்தோறும் மேன்மேலும் பலசீர் திருத்தங்கள் பெற்று, சுக்கில பக்ஷத்துச்சந்திரனைப்போல ஒளிபெற்று விளங்கிவரும் இப்பத்திரிகையின் பங்குனிமாத இதழ்கண்டு மிகவும் மகிழ்வுறுகிறோம். இப்பத்திரிகை தோன்றியபொழுது வெகுகாலம் நடைபெறுமோ என நாம் ஐயுற்றதுண்டு. நமது ஐயம் தீர்ந்தது. நம் சகோதரிகளிலொருவர் நம்மவர்க்காக உழைக்க முன் வந்திருப்பதைக் கண்டு உவகை கொள்கிறோம். முதலில் 32-பெரிய பக்கங்கள் கொண்டு வெளி வந்த இப்பத்திரிகை இப்போது 64-பக்கங்கள் கொண்டுள்ளது. கட்டுரைகளுக்குத் தலைப்பில் அழகிய சித்திரப்படங்களும் விளங்குகின்றன. பத்திராதிபர் தமது கல்விச் செல்வத்தையும் அநுபோகத்தையுங் கொண்டு, அரியவியாசங்

களையும் இனிய கதைகளையும் எழுதி வருவ தோடு, அறிவிற் சிறந்த பெண்மணிகளையும் தமது பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்யும் படித் தூண்டி வருவது மிகவும் மெச்சற்பாலது. உள்ளே 'தமிழ்நாட்டுப் பெண்மக்களின் முன் னேற்றத்தை முக்கியமாகக் கொண்டுள்ள பத் திரிகை' என வரையப்பட்டிருப்பினும், இப்பத் திரிகை சிறப்பாகப் பெண்மக்களுக்கும் பொது வாக ஆண் பெண் ஆகிய இருபாலருக்கும் பயன் தருவதாகும்.

பங்குனி மாதத்து இதழிலே வெளிவந்துள்ள சில கட்டுரைகளை இங்கு குறிப்பிடுகின்றோம். "பெண்கள் சுதந்திரம், மணிமக்களும் முக்திமார்க்கமும், இந்திய ஸ்திரீ ரத்னங்கள், பர்வத குமாரி, ஸ்ரீராதா கிருஷ்ண லீலைக் கும்மி, செவிமாபேகம் அல்லது மொகல் மன்னரின் அந்தப்புரம், கலாவதி, மஹாசிவராத் திரி."

இவ்வுயர்தரப் பத்திரிகை இன்னும் பல வழிகளிற் சிறப்புற்று விளங்கித் தமிழ்நாடெங்கும் பரவவேண்டுமென்பதே எமது எண்ணம்.—ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம், குரோதன, சித்திரை.

---


திரு.

## உலகியல் விளக்கம்.

இதன் நூலாசிரியர் நவநீத கிருஷ்ணபாரதி. இதன் உரையாசிரியர் மட்டக்களப்பு—வித்து ன்—ச. பூபாலபிள்ளை அவர்கள் (மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பரீக்ஷகர்) இதன்பதிப்பாசிரியர் மாசில்வாசகனார் என்னும் பிரபோதசைதன்ய மஹாராஜனார் B.Sc.(Lon.) ("வேதாந்தகேசரி" ன்னும் ஆங்கில மாசிகபத்திரிகாசிரியர், மதுரைத் தமிழ்சங்கத்துப்பண்டித வகுப்புப் பரீக்ஷகர்)

இந்நூல் டபிள் க்ரவுன் ஒன்றுக்கு எட்டுத்துண்டுகொண்ட 480 பக்கங்களைக் கொண்டு து; வழுவழுப்பான உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டுக் கலிக்கோகட்டு செய்யப்பெற்றது.

நூலினியல்பு.

இந்நூல் பெரும்பாலும் வடமொழிக் கலப்பில்லாது செவ்விய தமிழ்ச் சொற்களாற் றொடுக் ப்பெற்றுப் பண்டைச்சான்றோர் செய்யுளொப்பச் சிறந்த எழுபது அகவற்பாக்களைக் கொண் ளது; 'அறநெறியியல்', 'பொருணெறியியல்', 'இன்பநெறியியல்' என்னும் மூன்று பிரிவுகளை டையது; பலவகையான சிறந்த அணிவகைகளைத் தனக்கெனக் கொண்டது; இப்பொழு தைய மக்களால் வீணே மறுக்கப்பட்டுத் தேய்மதிபோன்று ஒளிமங்கிக்கொண்டே வரும் நமது ான்றோர்தம் கொள்கைகள் பலவற்றையும் விளங்கும்வண்ணம் நிலைநாட்டுவது; தமிழ்மொழி ின் அழிவிற்கிரங்குமுகத்தானே நம்மனோர் கன்னெஞ்சை யுருகவைப்பது; தமிழ்ப்புலவர்களைப் பாற்றிவரும்வண்ணம் இடித்துரைப்பது; மலை, வனம், காடு, வயல் என்னும் இவற்றின் யற்கை நலன்களை விரிவாக எடுத்துக்கூறும் இனிமையான்றது; கடவுளின் உண்மை நிலை ளை விரிக்குமுகத்தாலே பேரின்பப் பேறளிக்கும் பெற்றிசான்றது; பல உண்மைப் பெரியார் ம் மதிப்புரைகளைப் பெற்று விளங்குவது.

ஒரு பிரதியின் விலை ரூபாய் ஐந்தரை.

அறநெறியியலின் மட்டத்தாட் பிரதியொன்றின் விலை ரூபாய் இரண்டு.

வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசத்திற்கெழுதிப்பெறுவாராக.

வா. வயாபதிக் குருக்கள்,
தெல்லிப்பளை, யாழ்ப்பாணம். (இலங்கை).

# சரோஜனி.

நவரசம் ததும்பிய ஓர் அதியற்புதமான துப்பறியும் நாவல்
அழகையமைந்த 10-சித்திரப்படங்கள் அடங்கியது.

விலை ரூபா இரண்டு.

இந்த நாவல் தமிழ் உலகெங்கும் நாவல் எழுதுவதில் பிரசித்தி பெற்ற பிரபல நாவலாசிரியரான எஸ். எஸ். அருணகிரிநாதர் இயற்றியது. அவர் இதுவரைக்கும் எழுதிய எல்லா நாவல்களையும் விட இந்த நாவலை மிகவும் அற்புதமான நடையில் எழுதியிருக்கிறார். நாவல் வல்லோர் பலர் வெளியிட்டுள்ள பல்லாயிரம் நாவலுள் இந்நாவல் நடுநாயகமென உரைக்கத் தக்க சிறப்புவாய்ந்துள்ளது. புஸ்தகத்தைக் கையில் எடுத்து வாசிக்க ஆரம்பித்துவிட்டால் வெவ்விதமான அவசரவேலைகளிருப்பினும் அவைகளை மறந்து இந்த நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசியமாக்கப்பட்டு வாசித்து முடிவெய்திய பின்னரே அவைகளைக் கவனிக்கும்படி செய்யுமென்பது நிச்சயம். இன்னும் இந்தநாவலின் எந்தப் பக்கம் உற்றாலும் தொட்டாலும் பார்த்தாலும் வாசித்தாலும் வாசிக்சக்கேட்டாலும் காந்தங்கண்ட இரும்புபோல் மனதைவிட்டு இன்பம் அகலாதென்பது திண்ணம். அழகே ஓர் உருவெடுத்தாற்போல் இதில் அமைந்திருக்கும் பத்துச் சித்திரப்படங்களின் அழகை இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தாலும் ஆவல் அடங்காது. இவ்வளவு அழகமைந்த படங்களைப்போல் வேறு எந்த நாவல்களிலும் இதுவரைக்கும் வேறு படங்கள் வெளிவந்தது கிடையாது. இந்தப் படங்களெல்லாம் பெங்கால் நகரத்திலிருந்து வந்துள்ள ஒரு பிரபல சித்திரக்காரரைக் கொண்டு எழுதப்பட்டிருக்கின்றன. இன்னும் இதைப்பற்றி அதிகமாய்ப் புகழாமல் ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், இது இன்னமுது, கனி, பாகு, கற்கண்டு, சீனி, தேன் முதலியவைகளைவிட அதிகமாக உருசிப்பது இந்த நாவல் தான்.

இப்படிப்பட்ட மனோரம்மியமான உன்னத நாவல், 1925 வருஷம் ஆகஸ்டுமாதம் வெளிவரும். இப்பொழுதே மேற்கண்ட விலாசத்திற்கு ஒரு கடிதம் எழுதித் தங்கள் பெயரை ரிஜிஸ்டர்செய்துகொள்ளுகிறவர்களுக்கு தபாற்செலவு இனாம்.

**எம். எஸ். ராமுலு அண்ட் கம்பெனி,**

புஸ்தகவியாபாரிகள், 64, மன்னார்சாமிகோயில் தெருவு,

இராயபுரம். மதராஸ்.

## கைமேற்பலன் !

அதை நீங்கள் கட்டாயம் அடையவேண்டும்.

கீழே காட்டியுள் புத்தகங்களை வாசிப்பதனால் நீங்கள் கைமேற்பலனடைவீர்களென்பது நிச்சயம் !

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1 | வியாசக் கொத்து<br>அநேக அரிய வியாஸங்களைக் கொண்டது ... ... ... ... | 2 | 0 | 0 |
| 2 | அதிசயப் பொக்கிஷம்<br>ஒரு சாமானியமனிதன் கோடீச்வரனான விந்தை ... ... ... | 1 | 8 | 0 |
| 3 | இன்னுரைக் களஞ்சியம்<br>40 அருமையான விஷயங்களைக் கொண்டது ... ... ... ... | 1 | 0 | 0 |
| 4 | விஷயரஸமஞ்சரி<br>எழுபது விஷயங்களை விரிவா யுரைப்பது ... ... ... ... | 1 | 0 | 0 |
| 5 | திருவள்ளுவரும் அவரது உபதேசங்களும்<br>புதிய முறையில் வரையப்பட்டது ... ... ... ... | 0 | 8 | 0 |

இன்னும் அநேக புதிய, அரிய, அறிவை வளர்க்கக்கூடிய புத்தகங்கள் எங்களிடம் உண்டு.

நவீன கதா புத்தகசாலை, 122, Montgomery St., இரங்கூன்.

---

## ஜரிகையில்லாத பட்டுச்சேலைகள்

18 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம். பட்டினால் ருத்திராக்ஷகரை போட்டவை. உடல் மிகவும் அழுத்தமானது. எல்லா நிறங்களிலும் கிடைக்கும். சேலை 1க்கு விலை ரூபா 35.

## ஷை மாதிரி சேலைகள் ஜரிகைக் கரைபோட்டது

சேலை 1-க்கு விலை 50 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை. ரவிக்கைகள் எல்லா நிறங்களிலும், எல்லா மாதிரியிலும் ரவிக்கை 1-க்கு 3 ரூபாய் முதல் 5, 6, 7, 8, 10 வரை.

பெரிய கேட்லாக் "இனாம்."

விலாசம்:— மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

**SILK PITAMBER CO., BENARES CITY.**

---

### மஹானால் கிடைத்த "அருமையான மூலிகை"

தமிழ்வைத்திய சங்கத்தில் தங்கமெடல் பெற்றவை.

குஷ்டம், க்ஷயம், மூலம், கிராணி, பிரமை, பைத்தியம், இழுப்பு, வலிப்பு, மூத்திர வியாதி முதல் காட்பட்ட சகலவித வியாதிகளும், பார்வை, பில்லி, சூனியம், வைப்பு, ஏவல், விஷவியாதி, செய்வினை என சொல்லப்பட்ட பலவிதக் கஷ்டங்களும் கவலைகளும் உடனே நிவர்த்தியாகும்.

☞ ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்களைக் காணலாம்

புத்திர பாக்கியமில்லாதவர்களுக்கு 48 நாளில் கெர்ப்பம் உண்டாகும்.

பிரபலமான பேப்பர்களிலெல்லாம் பார்த்திருப்பீர்கள். உலகப்பிரசித்திபெற்றவை எதற்காகத் தேவையிருந்தாலும் ஆரம்பமுதல் சரிவர விபரமாக எழுதுங்கள். தங்கள் முழுவிலாசத்துடன் பதிலுக்கு 1 அணா ஸ்டாம்பு அனுப்பினால் சகலவித விபரமும் அனுபந்தமும் கிடைக்கும். ☞ எந்ததேச ஸ்டாம்பும் அனுப்பலாம்.

முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதைச் செய்தனுப்பக்கூடும்

மானேஜர், பாலசந்திரன் ஆபீஸ், மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா. சவுத் இந்தியா.

---

## தேசபக்தன்.

ஓர் தேசீயத் தமிழ்ப் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளி தோறும் கொளும்பிலிருந்து வெளி வருவது.

ஆசிரியர் கோ. நடேசய்யர். சந்தா விவரம்.

கொழும்பில் ஆள் மூலம் வருஷம் 1-க்கு ரூ. 9 0 0 ஷை ஷை 6-மாதம் ரூ. 5 0 0

பிறவிடங்கள் (தபால் மூலம்) வருஷம் 1 க்கு ரூ. 13 0 0 பினாங்கு, சிங்கபூர் முதலிய விடங்களுக்கு வருஷம் 1-க்கு ரூ. 16 0 0

தனிப்பிரதி 6 சதம்

சந்தாத்தொகை முன்பணமாகவே கட்டவேண்டும். 6-மாதத்திற்குக்குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

விலாசம்:—

மானேஜர், தேசபக்தன் ஆபீஸ், நெ. 43, செக்ளமேஷன் ரோடு, கொழும்பு.

## சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரிப் பத்திரிகை.

பத்திராதிபர்: P. E முதலியார்

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ. 22; வெளியூர்: ரூ. 26. விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி, 31-32, [illegible]ஸ்டிரீட், ரங்கூன்.

## லோகோபகாரி.

முப்பது ஆண்டுகளாய் நிலவி வரும் வாரப் பத்திரிகை.

ஆசிரியர்:

பாலி- சு. நெல்லையப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிர் பெற்றுப் பொற்படைவதற்குப் பாடுபடும் ஒரு பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் சமாச்சாரங்களெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். பாரத தேசம் சகல அம்சங்களிலும் சுயராஜ்யம்பெற்று உலகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பது லோகோபகாரியின் நோக்கம்.

வருஷ சந்தா:

உள்நாடு ரூ. 4. வெளி நாடு ரூ. 6.

"லோகோபகாரி"

பத்திரிகாலயம்,

கோமளீசுவரன்பேட்டை, சென்னை.

Madras.

## விவேகபாநு.

தென்னாப்பிரிகாவில் வசிக்கும் தமிழ் மக்களின் முன்னேற்றங்கருதி வெளிவரும் தமிழ் வாரப்பத்திரிகை. இதில் அரசியல், மதாசாரம் முதலிய விஷயங்களும் தென்னாப்பிரிகாவில் நடைபெறும் விஷயங்கள் முழுதும் வெளியிடப்படுகின்றன. தூரதேசத்திலிருக்கும் சகோதரர்களின் க்ஷேமலாபங்களை விவரமாகத் தெரிவித்துவரும் விவேகபாநுவை ஒவ்வொரு இந்தியரும் வரவழைத்துப் படித்தல் கடமையாகும். ஒருவருஷ சந்தா 15 ஷில்லிங். இந்யா, சிலோன், மோரேஷஸ், பினாங்கு, சிங்கப்பூர் ரோடேசியா முதலிய இடங்களுக்கு 17 ஷில்லிங்.

விலாசம்:—

மானேஜர், விவேகபாநு,

86, க்வீன் ஸ்டிரீட், டர்பன், நெட்டால்

## ஆரோக்கிய தீபிகை.

சித்திர சகிதமாகச் சென்னையில் வெளிவரும் ஒரு மாதாந்தத் தமிழ் பத்திரிகை. இஃது தனது பேருக்கொப்ப ஆரோக்கியம், சுகாதாரம், பிரசவ முறைகள், முகற் சிகித்சை, சிசுசம்ரக்ஷணை முதலிய விஷயங்களை ஆடவருக்கும் பெண்டிருக்கும் போதிப்பது. இயற்கை முறைகளால் தேகசுகத்தைப் பாதுகாத்து, நோயணுகாமல் இருப்பதற்கு என்ன செய்யவேண்டுமெனப போதிப்பது. அநேக பிரபல வைத்தியர்களும் ஐரோப்பியரும், இந்தியரும் இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்கிறார்கள். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் "ஆரோக்கிய தீபிகை" என்னும் இப்பத்திரிகையில், நோயற்ற வாழ்வினுக் கவசியமான செய்திகளெல்லாம் இனிது வரையப் படுகின்றன. இதன் ஆசிரியர் டாக்டர் U. ராமா ராவ், எம். எல். சி. இதன் வருஷ சந்தா ரூ. 1-8-0. இதன் பிரதிகளை விற்க வெளியூர்களில் ஏஜண்டுகள் தேவை. வேண்டியவர்கள், சென்னை தம்பு செட்டித்தெரு 323 நெ. டாக்டர் யு. ராமா ராவுக்கு எழுதிக்கொள்ளவும்.



## PALANGTOD PILLS.

Wonderful Tonic Preparations of

**DUBAL PHARMACY.**

The most popular medicines. Patronized by Rajas, princes & prominent persons.

SOME OF THE SPECIALITIES ARE:

**King of Tonic Pills**—Rs. 5 per pill.
**Night Pills**—Rs. 7 per pill
**Palangtod Pills**—Rs. 10 per pill.
**Piles and Fistulla Cure**-Rs.50 weeks trial.
**Sakti Sajivan Oil**—Rs. 425 per tola.
**Maharani Hair Oil**—Increase hair three inches a month, Rs. 30 big bottle, Rs. 20 small & Sample Rs. 5.
**Diabetes Cure**—Rs. 50 week trial.
**Two minutes Hair Dye**—Rs. 5 per bottle
**Beauty Ointment**—Rs. 25 per bottle.
**Tooth Powder**—Rs. 3 per bottle.

For further particulars send Re. 1 for Catalogue.
Visiting hours 8 A.M. to 10 A.M. (S.T.)

DUBAL PHARMACY.
Girgaum No. 4. BOMBAY.

## "தேவாங்க மித்திரன்"

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

இது தேவாங்கர்களுடைய முன்னேற்றத்தைக் கருதி நடத்தப்பட்டுவரினும், விவசாயம், கைத்தொழில், கூட்டுறவு, சுகாதாரம், சன்மார்க்க போதனைகள், ஜீவிய சரித்திரங்கள் முதலியவைகளைப்பற்றியவைகளும், இன்னும் அநேக விசேஷ வியாசங்களும் எழுதப்பட்டு வெளிவரும்.

சந்தா விபரம்:—

| | | |
|---|---|---|
| வருஷம் 1-க்கு | ... ... | ரூபா 2—0—0 |
| அயல் நாடுகளுக்கு வருஷம் 1-க்கு | ... | ,, 2—8—0 |
| அபிமானிகளுக்கு வருஷம் 1-க்கு | ... | ,, 10—0—0 |

விலாசம்: மானேஜர், "தேவாங்க மித்திரன்,"

தேவாரம், மதுரை ஜில்லா.

## [illegible]க்குகந்த போட்டோ படங்கள்.

பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டவை.

இது வரை வெளிவராத நூதன மாதிரி.

[illegible]ருகன் ஷண்முக கடவுள், தண்டாயுதபாணி, [illegible]ரத மாதா உருவமாய் அமைந்த ஸரஸ்வதி, [illegible]க்னேச்வரர், ராதா கிருஷ்ணன், குழந்தை கிருஷ்ணன், யசோதா கிருஷ்ணன், திருப்புகழியற்றிய அருணகிரி நாதர், கீர்த்தனங்களியற்றிய தியாகராஜ ஸ்வாமிகள், அகஸ்தியர் பெருமான், பட்டினத்தார், சென்னைக்கு விஜயம் செய்த பொழுது எடுத்த மகாத்மாவின் படம்.

| | | ரூ | அ. | பை. |
|---|---|---|---|---|
| முழுசெட்டு | ... | 6 | 0 | 0 |
| **தனிக்காப்பி.** | | | | |
| சாதாரணம் போட்டோ 1-க்கு | ... | 0 | 12 | 0 |
| ,, ½ டஜன் | ... | 4 | 0 | 0 |
| ,, 1 டஜன் | ... | 6 | 0 | 0 |
| வர்ண போட்டோ 1-க்கு | ... | 1 | 0 | 0 |
| ,, ½ டஜன் | ... | 5 | 0 | 0 |
| ,, 1 டஜன் | ... | 9 | 0 | 0 |

சர்மா சகோதரர்,

வேப்பேரி, சென்னை.

## தேசோபகாரி.

அரியபெரிய விஷயங்கள்கொண்டு இரங்கூனிலிருந்து வெளிவரும் சிறந்த வாரப் பத்திரிகை. ஞாயிறுதோறும் வெளிவருவது.

(தேசோபகாரி காரியாலயம், நெ. 45, 36-வது வீதி, இரங்கூன்)

சந்தா விபரம்

இரங்கூன்:—வருஷம் 1-க்கு ரூ. 5; மாதம் 6-க்கு ரூ. 2-12. உள்நாடு: வருஷம் 1-க்கு ரூ. 6 மாதம் 6-க்கு ரூ. 3-4. வெளிநாடு: வருஷ 1-க்கு ரூ. 7; மாதம் 6-க்கு ரூ 4.

---

## பாலபாரதி.

பல சித்திரப்படங்களுடனும், உருவப் படங்களுடனும், சரித்திர ஆராய்ச்சி, கற்பனைக்கதைகள் சிறு கதைகள், மாதசார விஷயங்கள், மற்றும் சுவையுள்ள விஷயங்கள் பல அடங்கிய ஓர் சிறந்த செந்தமிழ் மாதாந்தரப்பத்திரிகை. வருட சந்தா உள்நாட்டுக்கு ரூபா 5; வெளி நாடுகளுக்கு ரூபா 6-8-0. இதர விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

காரியஸ்தன்,

"பால பாரதி,"

பாரத்துவாஜ ஆசிரமம், சேரமாதேவி (S. I. Ry.)

# தமிழ் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A விலை அணா 10.

   **Approved as a Library Book.**

2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

   **Approved as a Text-book suitable for School use,** vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள். R. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

   **Approved as a Text-Book suitable for School use.**

4. இட்டார்க்கு இட்ட பலன்.—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி [illegible]. விலை அணா 10.

   **Approved as a suitable Text-Book,** vide *Fort St. George Gazette*, **dated 24-7-23.**

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதிய ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடி விலை ரூ. 1—4—0.

   **Approved as a Library Book.**

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A எழுதியது. அணா 12.

   **Approved as a Text-Book for Schools and Colleges,** vide *Fort St. George Gazette* **21st October 1913.**

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

   **Parts I and II are approved as suitable class-books,** vide *Fort St. George Gazette*, **Part I-B, page 478, dated 3-6-24.**

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.

   **Approved as a Text-book suitable for School use,** vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.

SRINIVASA VARADACHARI & CO., TRIPLICANE AND MOUNT ROAD, MADRAS,

# Some Select Opinions on "Chinthamani."

*The Hindu under date 11-4-'25 writes:—*

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI" a Tamil Monthly intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet unobstrusive way, through the medium of stories. dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's High School, Chidambaram* writes under date 2-3-'25, as follows:—

> I "Chinthamani" very suitable for school pupils Its Contents are educative as tractive; and its language may be taken as a model of expression in Tamil.

have read through some of the numbers of the *Chintamani* edited by Sister mal and I am of opinion that in respect to the subjects treated they are of interest to the Tamil women of the present generation and that in matter of and language this is not in any way inferior to the journals of this kind. is a journal that should be read by women of all classes and creeds in their es and by the girls in their schools.—Francis Kingsbury, Kilpauk, 25th y 1925.

I have read with pleasure the first chapter of your journal. Thereis need r intensive work among the women of Madras. I am glad you have taken up the ask. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, idiomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

## (இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் கம்பெனி, லிமிடெட்.)

தலைமையாபீசு : பம்பாய்.

“ இந்தியாவின் முன்னேற்றத்திற்குரிய பிரசனைகள் வெற்றி பெறுதற்குக் கூட்டுறவு இயக்கமே அடிப்படையாயிருக்கிறது ” என்று ஸ்ரீராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த மிஸ் ஜோஸப்பைன் மெக்ளௌட் கூறுகிறார்.

மேற்கண்ட கம்பெனியானது சுதேசிய அபிவிருத்தியைக் கோரி சுதேசிகளால் நடத்தப்பெறும் கூட்டுறவு ஸ்தாபனமாகும். தேசப் பற்றும், செல்வாக்கும், அனுபவமும் பெற்றுப் பிரதிப்பிரயோஜனம் சிறிதும் எதிர்பாராது கௌரவ உத்தியோகம் வகிக்கும் டைரெக்டர்களைக் கொண்டுள்ளது.

சேர்மன்.

ஸர் ஹார்மஸ்ஜி ஸி. டின்ஷா, Kt., M.V.O., O.B.E.

(இவர் ஏடனிலுள்ள கௌவாஸி டின்ஷா அண்டு பிரதர்ஸ் கம்பெனியின் முதலாளியும், பம்பாயி பிரபல வர்த்தகரும், மைசூரில் பிரபல இனாம்தாரும் விலச்சுவாக்தாரும் ஆவார்,)

ஆலோசனைக் கமிட்டித் தலைவர் :

ஸர் டின்ஷா எடல்ஜி வாச்சா, Kt., J. P.

(இம்பீரியல் பாங்குமததியசங்கத்தின்கவர்னர்.)

தொழிலபிவிருத்தி, ஒற்றுமை, உண்மை உழைப்பு, கல்வி, பொது நன்மை முதலியவைகளைப் பிரசாரம் செய்து வரும் நல்லியக்கமெனப் பேர் பெற்ற பல தலைவர்களால் இந்த கம்பனம் புகழ்ப்பெற்றது. மிகப் பிரசித்திபெற்ற முதலாளிகளுக்குப் பிரதிகிகியாகவிருந்து சுதேசிய இயக்கத்தை பரவச் செய்வது. தென்னிந்தியா பர்மா ஸிலோன் முதலியவிடங்கள் முக்கிய நகரங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

விவரம் வேண்டுவோர்
பி. வி. சுப்ப ராவ்,
கௌரவ மானேஜிங் டைரெக்டர்,
இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் கம்பெனி லிமிடெட்,
பெங்களூர் ஸிடி.

Printed by Srinivasa Varadachari & Co., 4, Mount Road, Madras,
and Published by Sister V. Balammal, Sullivan's Garden Road, Mylapore, Madras. 2,000—30-7-1925.